# திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

OFFICE OF THE STATE EDITOR
160/GO/73
24 NOV 1973
GAZETTEER UNIT, MADRAS-8



தமிழ் நாடு அரசின் அறநிலைய
ஆட்சித்துறை வெளியீடு



திருவாவடுதுறை ஆதீனத்தின் ஆதரவில், திருவிடைமருதூர் அருள்திரு மகாலிங்க சுவாமி கோயிலில் நடைபெற்ற மூன்றுவது திருமுறைக் கருத்தரங்கத் தொடக்க விழா மேதகு ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கள் தொடக்கப் பேருரை ஆற்றுதல். மேடை மீது திருவார்திரு. குருமகா சன்னிதானம், நீதிபதி திரு. எஸ். மகராஜன் — பொள்ளாச்சி திரு. எஸ். மகாலிங்கம் ஆகியோர் உள்ளனர்.

## பொருளடக்கம்


1. திருநாவுக்கரசரும், சைவசித்தாந்தமும்
2. தமிழர் வாழ்வில் ஓவியக்கலை
3. திருவாசகத்தில் தேவர்கள் படும்பாடு
4. இளம் பெருமான்
5. சண்டேசர்க்கு அருளும் தண்ணளியினர்
6. கவிதையால் கடவுள் வழிபாடு
7. கல்லெழுத்துக்களில் திருநாவுக்கரசர்
8. மெய்கண்ட நூல்களின் வாழ்வியல் உண்மைகள்
9. தமிழ் செய்த திருமூலர்
10. இன்பம் பெருகும் இயல்பு


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்


ஆண்டுச் சந்தா ரூபா பத்து மட்டும் — தனிப்பிரதி விலை ரூபா ஒன்று மட்டும்.

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்களாகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது அவ்வவ்வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும் மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல் இதழ்கள் தவருமற் சேர்வதற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.




மாலை 16 | பிரமாதீச — கார்த்திகை — நவம்பர், 1973 | மணி 2

# திருநாவுக்கரசரும், சைவசித்தாந்தமும்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

## முன்னுரை

தமிழ் நாட்டிற்குத் தனிப்பெருஞ் சிறப்பை விளைவிக்கும் மேன்மை மிக்கனவாகத் திகழ்வன பல. அவற்றுள் ஒன்று, சைவசித்தாந்தம் என்னும் அரிய பெரிய தத்துவக் கொள்கை. "வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்" என இதனை உமாபதிசிவம் புகழ்ந்து போற்றியுள்ளார். "ஓரும் வேதாந்தம் என்னும் உச்சியிற் பழுத்த, ஆரா இன்ப அருங்கனி பிழிந்து அதன் சாரம் கொண்ட சைவ சித்தாந்தத் தேன் அமுது" எனக் குமரகுருபர அடிகளார் சைவசித்தாந்தத்தின் சிறப்பினை வியந்து பாராட்டி மகிழ்கின்றார்.

## சைவசித்தாந்தம்:

"சைவசித்தாந்தம் என்னும் தத்துவக் கொள்கையானது, மிகவும் விரிந்தது; பெரிதும் நுண்ணியது; தமிழக மக்களின் வாழ்க்கையில் ஊடுருவி நிற்கும் பெருஞ் செல்வாக்குப் பொருந்தியது; ஐயத்திற்கு இடமின்றி உண்மையிலேயே பெருமதிப்பிற்குரியது. இந்திய நாட்டிலுள்ள சமயக் கொள்கைகளுள் எல்லாம் தலை சிறந்த தொன்றாக விளங்கும் சைவசித்தாந்தம், தனிச் சிறப்பாக நம் தென்றமிழ் நாட்டிற்கேயுரிய தமிழ் மதம் ஆகும். தென்னிந்தியத் தமிழ் மக்களின் மிகச் சிறந்த தத்துவஞானப் பேரறிவின் பெருவிளைவே சைவசித்தாந்தம் எனலாம்" [1].

"பிற எல்லா ஆராய்ச்சி வகைகளையும், கொள்கை அல்லது வழிபாட்டு முறைகளையும் விட மிக மேலானதாகச், சைவசித்தாந்தம் சில சிறப்பியற் பண்புகளைத் தன்னகத்தே கொண்டு ஒளிர்கின்றது. அது மிகவும் பழைமை வாய்ந்ததாய், அப்பழைமையினாலாய பெருமைகளைப்

---

* திருவாவடுதுறை ஆதீனத்தின் ஆதரவில், திருவிடைமருதூரில் அருள் திரு மகாலிங்க சுவாமி திருக்கோயிலில் நிகழ்ந்த திருமுறைக் கருத்தரங்கத்தில், காரைக்குடி திரு. சா. கணேசன், M.L.C., அவர்கள் தலைமையில் ஆற்றிய சொற்பொழிவைத் தழுவியது. (29—10—73)

---

(1) "The Saiva Siddhanta system is the most elaborate, influential and undoubtedly the most intrinsically valuable of all the religions of India. It is peculialry the South-Indian, and Tamil religion ... Saiva Siddhanta philosophy is the choicest product of the Dravidian intellect."

— The Rev. Dr. G. U. POPE.

JL Q2m724, N59T16
148715

பெற்று விளங்குகின்றது. சமய உலகில் தென்னிந்தியாவில் உள்ள மிகப் பெரும் பான்மையான சிறந்த கருத்துக்களுக்கெல்லாம், சைவ சமயமே நேரிதின் உரிமைத் தொடர்புடையதாகும். இதனை நோக்க அடுத்துள்ள ஏனைய பிற எல்லாம் ஒப்பியல் முறையில் அயலவர்க்கு உரியனவும், அண்மையில் தோன்றியனவுமே எனலாம். சமய ஆராய்ச்சித் துறையிலும், கொள்கை வாழ்க்கை என்பனவற்றின் வெளிப்பாட்டு முறையிலும், மிகமிகச் சிறந்த தொன்றாகத் தென்னிந்தியா பெற்றிருப்பது சைவ சித்தாந்தமே யாகும். அதன் உண்மைச் சிறப்பியல்புகளை உள்ளவாறு உணரின், இந்திய தேசம் எங்கணும் பரவியுள்ள மக்களெல்லோருடைய வாழ்க்கை நெறிப் போக்கின் மாண்பை யுணர்த்தும் அறிகுறியாக விளங்குகின்றது சைவ சித்தாந்தம் எனத் துணிந்து கூறுதல் இழுக்காகாது". (2)

## சாரம் கொண்ட சைவசித்தாந்தம்:

இத்தகைய சைவசித்தாந்தம் என்னும் தமிழகத் தத்துவ ஞானக் கொள்கையானது, சைவசமய ஆசிரியர்களாகிய சைவநாயன்மார்களின் வாழ்க்கையினை அடிப்படையாகக் கொண்டது; அவர்தம் அருள் மொழிகளை ஆராய்ந்து தொகுத்துப் பிழிந்தெடுத்த அரும் பெரும் சாறு போன்றது. "உடல் மிசை உயிரெனக் கரந்து எங்கும் பரந்துளன்" எனவரும் நம்மாழ்வார் பாசுரத் தொடரை அடிப்படையாகக் கொண்டே, இராமாநுசர் "விசிட்டாத்துவைதம்" என்னும் திருமால்நெறித் தத்துவ ஞானக் கொள்கையினை வகுத்து விரித்துரைத்தருளினர்.

(2) "There is no school of thought and no system of faith or worship that comes to us with anything like the claims of the Saiva Siddhantha. The system possesses the merits of great antiquity. In the religious world the Saiva system is the heir to all that is most ancient in South India. It is the religion of the Tamil people, by the side of which every other form is of comparatively foreign and recent orign. As a system of religious thought, as an expression of faith and life, the Saiva Siddhantha is by far the best that South India possesses. Indeed, it would not be rash to include the whole of India and to maintain that judged by its inirinsic merits, the Saiva Siddhantha represents the high water-mark of Indian life ....."

—The Rev. Mr. W. GOUDIE.

நம்மாழ்வார் அருளிய பாடல்களைப் பற்றுக்கோடாகக் கொண்டே, வேதங்களில் ஏற்படும் ஐயங்களை எல்லாம் நாம் தெளிந்து கொள்ள முடிகின்றது என்னும் உண்மையினை,

"செய்யதமிழ் மாலைகள் நாம்
தெளிய ஓதித்
தெளியாத மறைநிலங்கள்
தெளிகின் றோமே"

என்று வேதாந்ததேசிகர் என்னும் வைணவப் பெருஞ்சான்றோர், திருவாய் மலர்ந்தருளினார். திவ்வியப் பிரபந்தப் பாடல்களில் வரும் சொற்கள் சொற்றொடர்களையே தேர்ந்தெடுத்துச், சிறந்ததொரு மாலைபோலத்தொடுத்து, அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் என்னும் திருமால் நெறிப் பெருஞ் சான்றோர், "ஆசாரிய இருதயம்" என்னும் அரும்பெறல் நூலை அற்புதமாக இயற்றியருளினார்.

அம்முறையினைப் போலவே, சைவத் திருமுறைகள் பன்னிரண்டினும் பரவி விரவிக் கிடக்கும் அரிய பெரிய தத்துவ உண்மைகளையே சைவசித்தாந்தம் என்னும் பெயரால், மெய்கண்டார் முதலிய சைவசந்தானாசிரியர்கள் தொகுத்தருளினர். எள்ளினின்று எண்ணெய் எடுப்பதுபோல, நமது சைவநாயன்மார்களின் வாழ்க்கையினின்றும், வாய்மொழிகளினின்றுமே, சைவசித்தாந்தத் தத்துவக் கோட்பாடுகள் உருவாக்கப்பெற்று வரையறை செய்யப்பெற்றன.

## திருநாவுக்கரசர் :

திருநாவுக்கரசர் பெருமானின் வாழ்க்கை ஒரு பெரும் இலக்கியம்; சைவசித்தாந்தம் அதனினின்று வடித்தெடுத்த சிறந்த இலக்கணம் ('phiosophy is the grammar of religion') எனலாம். சைவ சித்தாந்தத்தில் மிகவும் சிறப்புற எடுத்துப் போற்றி உரைக்கப் படும் குரு இலிங்கம் சங்கமம் என்னும் மூன்றனுள், சங்கமம் என்னும் பக்தர்களின் திருவேடத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திருநாவுக்கரசர் புகழ்ந்து போற்றப்பெறுகின்றார். சிவஞான போதம் என்னும் சைவசித்தாந்தத் தலைமணி நூலின் பன்னிரண்டாம் சூத்திரத்தில், மூன்றும் அதிகரணத்தில், அடியார்களின் திருவேடத்தின் இயல்பு குறித்து விளக்கப் புகுங்கால், மாதவச் சிவஞானசுவாமிகள்,

N73.16.2



"சிந்தை இடையரு அன்பும்,
திருமேனி தன்னில் அசைவும்,
கந்தை மிகையாம் கருத்தும்,
கையுழ வாரப் படையும்,
வந்திழி கண்ணீர் மழையும்,
வடிவிற் பொலிதிரு நீறும்,
அந்தம் இலாத் திருவேடத்
தரசும் எதிர்வந் தணைய" (1)

"தூய வெண் ணீறு துதைந்தபொன்
மேனியும், தாழ்வடமும்,
நாயகன் சேவடி தைவரு
சிந்தையும், நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி
கண்ணும், பதிகச் செஞ்சொல்
மேயசெவ் வாயும் உடையார்,
புகுந்தனர் வீதியுள்ளே" (2)

"கண்டகவுணியக் கன்றும்,
கருத்திற் பரவும் மெய்க்காதல்
தொண்டர் திருவேடம், நேரே
தோன்றிய தென்று, தொழுதார்" (3)

—பெரியபுராணம்

எனப் பெரியபுராணத்தில், திருநாவுக்கரசர் பெருமானைப் பற்றி வரும் அழகிய திருப்பாடல்களையே, மேற்கோளாக எடுத்துக் காட்டியிருப்பது, திருநாவுக்கரசரின் எல்லையற்ற பெருமாட்சிமையினை இனிது விளக்குவதாகும்.

இத்தகைய பெருமாட்சிமைமிக்க திருநாவுக்கரசர் பெருமானை, நமது சைவசித்தாந்தத் தத்துவஞானச் சான்றோர்கள் ஆகிய மெய்கண்டார், அருள்நந்திசிவம், மறைஞான சம்பந்தர்,[3] உமாபதிசிவம் முதலிய பெரியோர்கள் பெரிதும் மதித்துத் துதித்துப் போற்றினர். அரிய பெரிய சைவசித்தாந்த உண்மைகளை விளக்கி நிறுவ முற்படுங்கால், திருநாவுக்கரசரின் தேவாரத் திருப்பாடல்களைப் பெரிதும் போற்றி நினைவுகூர்ந்து, மேற்கோளாக எடுத்தாண்டுள்ளனர். இவ்வுண்மையை வலியுறுத்தும் வகையில் சைவசித்தாந்த நூல்களிற் போதரும் பின்வரும் ஒருசில சான்றுகள் மட்டுமே, கண்டு அமைதல்சாலும்!

## (1) இருவினையும் இறைவன் ஆணையும்:

ஆசிரியர் மெய்கண்டார் தமது சிவஞான போதத்தில் இரண்டாம் சூத்திரத்தில், இரண்டாம் அதிகரணத்தில், "இன்வான்மாக்களுக்கு இருவினை முதல்வன் ஆணையில் வரும்" என்னும் கருத்தை விளக்க முற்படுகின்றார். இறைவன் படைத்தல் காத்தல் ஒடுக்கல் மறைத்தல் அருளுதல் என்னும் ஐந்தொழில்களை உயிர்களின் பொருட்டுச் செய்கின்றான். அங்ஙனம் செய்யுங்கால், அவ்வவ் உயிர்களின் வினைகளுக்கு ஏற்பச் செய்கின்றான் எனக் கொள்ளுவது சைவசித்தாந்தம்.

அற்றேல் "இருவினைகளுக்கு ஏற்ப இறைவன் ஐந்தொழில்புரியின், இருவினைகளுக்கு முதன்மையேன்றி, அவற்றின் வழிநின்று செய்யும் இறைவனுக்கு முதன்மை இல்லை என முடியும். மேலும் வினை உண்டெனக் கொள்ளின், அதுவே அமையும், முதல்வனது உண்மை பெறப்படாது. முதல்வன் உண்டு எனக்கொள்ளின், அவனே அமையும் வினை உண்மை பெறப்படாது. இரண்டும் கோடல் மிகையாகும்" எனச் சிலர் மறுத்துக் கூறுவர்.

அதற்கு விடைகூறும் மெய்கண்டார், "இருவினைகள் இறைவன் ஆணையால் வருவனவேயன்றித் தாமே வரும் ஆற்றலும் உரிமையும் உடையன அல்ல. ஆதலின், இறைவனுக்கு முதன்மையன்றி இருவினைக்கு முதன்மையில்லை. மேலும் உலகத்து வேந்தரெல்லாம் பாடிகாவலாளர் மாட்டுத் தம் ஆணையை வைத்து, அவரைக்கொண்டு அத்தொழில் செய்வித்தலேயன்றித் தாமே முன்னின்று அத்தொழில் செய்யார். "வையகம் காப்பான் செய்கை வழக்கன்றோ ஊர்காப்பான்போல்" என்றபடி இறைவன் செய்யும் செய்தியெல்லாம் உலகத்தோடு ஒப்ப நிகழ்வனவாதலின், இறைவனும் தன் ஆணையை இருவினையின் மாட்டுவைத்து, அவற்றைக் கொண்டே அவற்றின் பயனை உயிர்கள் நுகருமாறு செய்விப்பான்" என வலியுறுத்துதற்கு "ஒரு நகரியைக் காப்பான்

(3) "Forms of religion are founded, not by philosophers and theologians, with their interpretations and argumentations, but by heroic men of faith—faith in god and faith in themselves, to such an extent, tkat they Can induce not only others but themselves too, to believe in the miracles they perform. Tne former come later on, to justify and sanction what already exists, with their elaborate exegetics, written solely for the learned and thoughtful—not to say the sceptical."

—Prof. P. SUNDARAM PILLAI, M.A.,

பாடிகாவல் இட்டாங்கு அவை அவனது ஆக்கினை ஆகலான்'' என ஆசிரியர் மெய் கண்டார் அருளிச் செய்தார்.

இச் சிவஞானபோதப் பகுதியில், ஆசிரியர் மெய்கண்டார் குறிப்பிட்டுள்ள "பாடிகாவல் என்பது, அறநெறியின் வழீஇயினரை வழக்கு வினைய் ஒப்ப நாடிச் செய்யும் தண்டனைத் தொழிலை உணர்த்துவதோர் சொல்லாகும்."

''கோடி காவனைக் கூறீரேல் கூறினேன்
பாடி காவலிற் பட்டுக் கழிதிரே'' (1)

''கோடி காவனைக் கூருத நாள் எலாம்
பாடி காவலிற் பட்டுக் கழியுமே'' (2)

எனவரும் திருநாவுக்கரசர் தேவாரத் திருப் பாடல்களை நினைவு கூர்ந்தே, ஆசிரியர் மெய் கண்டார், பாடிகாவல் என்னும் சொற் ரெடரைப் பொன்னினும் மணியினும் மதித்துப் போற்றி எடுத்தாண்டு அருளிச் செய்வா ராயினர் என்பது, அறிந்து மகிழுதற்குரியது.

## (2) பாடிகாவல்:

திருநாவுக்கரசர் தமது தேவாரப்பாடலில் அருளிச் செய்த "பாடிகாவல்" என்னும் தண்டனைத் தொழிலையுணர்த்தும் சொற் ரெடரை, மெய்கண்டார் மேற்கோளாக எடுத் தாண்டருளிய பொருட் குறிப்பினையே, "மறை கள், இறைவனின் கட்டளைகள். அவற்றின்படி நடவாத உயிர்களை வைக்கும் சிறைகளே, நரகங்கள். நடப்பவர்கள் அடையும் நற்பதவி களே, தேவருலகங்கள். இங்ஙனம், தாம்தாம் செய்யும் நல்வினை தீவினைகளுக்கேற்ப, இறை வனின் ஆணையினுல் உயிர்கள் இன்பதுன்பங் களை எய்திவரும்'' என்னும் கருத்தினை,

''மறைகள் ஈசன்சொல்; அச்சொல்
வழிவாரா உயிரை வைக்கும்
சிறைகள் மாநிரயம்; இட்ட
பணிசெய்வோர் செல்வத் தோடும்
உறையும்மா பதிகள் உம்பர்
உலகங்கள்; யோனிக் கெல்லாம்
இறைவன் ஆணையினுல் இன்பத்
துன்பங்கள் இயைவ தாகும்'' (1)

''ஆணையால் அவனி மன்னன்
அருமறை முறைசெய் யாரை
ஆணையில் தண்டம் செய்தும்
அருஞ்சிறை யிட்டும் வைப்பான்;
ஆணையின் வழிசெல் வோருக்கு
அரும்பதி செல்வம் நல்கி
ஆணையும் வைப்பன்; எங்கும்
ஆணையே ஆணை யேகாண்'' (2)

என்பன போலவரும் செய்யுட்களால்—(2-30, 31, 32, 33), அழகிய உருவகம் செய்து ஆசிரியர் அருள்நந்திசிவம் தமது சிவஞான சித்தியாரில் விரித்துரைப்பாராயினர்.

## (3) ஊசற் கயிறு:

இவ்வாறே, சிவஞானபோதம் எட்டாம் சூத்திரம் 4–ஆம் அதிகரணத்தில், "உயிர்கள் ஐம்பொறிகளிற் பற்றுகையால் தம்மை யறிய மாட்டா. அதனுல் இறைவனே குருவாய் வந்து உயிர்களுக்கு உணர்த்துதல் வேண்டும். அங்ஙனம் இறைவன் உணர்த்திஞல், ஐயுணர்வுகளான் மயங்கித் தம்மை யுணராத உயிர்கள், அறிவாய் வியாபகமாகிய தம்மி யல்பைச் சடமாய் ஏகதேசமாகிய பொறிகளின் வேருக உணரும், அவ்வாறு உணர்ந்தால் பிறிது காரணம் வேண்டாமல் உயிர்கள் தமக்கு ஆதாரமாகிய முதல்வனது திருவடி யினைத் தலைப்படும்'' என்னும் கருத்தை வலியுறுத்த,

'இனி இவ்வான்மாத் தன்னை
இந்திரியத்தின் வேருவன் காணவே,
தமது முதல் சீபாதத்தை அணையும்
என்றது;
ஊசல் கயிறற்ருல் தாய்தரையே
ஆம் துணையான்.''

என ஆசிரியர் மெய்கண்டார் அருளிச் செய் கின்ருர். இந்தப் பகுதியானது,

''உறுகயி றூசல் போல
ஒன்றுவிட் டொன்று பற்றி
மறுகயி றூசல் போல
வந்துவந் துலவும் நெஞ்சம்;
பெறுகயி றூசல் போலப்
பிறைபுல்கு சடையாய்; பாதத்து
அறுகயி றூசல் ஆனேன்
அதிகைவீ ரட்ட னீரே''

என்னும் திருநாவுக்கரசர் தேவாரத்தினையே, அடியொற்றி அமைந்திருத்தல் அறிந்து இன்புறற்பாலது.

## (4) கலந்தபின் பிரிவதில்லை:

'உயிர்களால் அறியப்படாமல் கருவிகள் நீங்கியவழி உயிர்களுக்கு மலம் தாரகம் ஆதும்;

அறியப்பட்டு நீங்கியவழிச் சிவம் தாரகம் ஆகும்' என, மேலே ஆசிரியர் மெய்கண்டார் அறிவுறுத்தினர். அப்போது, 'அற்றேல் கருவிகளின் நீங்கி மலம் தாரகமாகத் தனிமை (கேவல) நிலையுற்ற உயிர்கள், மீளவும் கருவிகளைச் சேர்ந்து புணர்வு (சகல) நிலைப்படுமாறு போல, கருவிகளின் நீங்கிச் சிவம் தாரகமாகத் தூய்மையுற்றபோழ்தும், கருவிகளை மீளக்கூடிப் புணர்வு (சகல) நிலைப்படும் போலும்' என ஐயப்பாடு நிகழும்.

ஒருவன் அணையினை உயர்த்துக் கட்டித் தடைசெய்ய, ஆண்டுத் தடையுண்டு தேங்கி நின்ற ஆற்றுநீர், அவ்வணை முறிந்து தடை விட்டொழிந்த வழி இடையீடின்றிக் கடலிற் சென்றடங்கி, அக்கடலின் நீரேயாய்ப் பின்பு அதனின்று மீளுதல் செய்யாது நிலைபெறும். அதுபோலக் கருவிகளானகிய பாசஞானத் தடையினின்றும் நீங்கியவழி, ஆன்மாவானது சிவபிரானது திருவடியைப் பொருந்தி, அத் திருவடி நிறைவேயாய் அடங்கிப் பின்பு, அதனின்று மீளுதல் செய்யாது நிலைபெறும். "அலைகடலிற் சென்றடங்கும் ஆறுபோல் மீளாது உலைவில் அரன் பாகத்தை உற்று" என்னும் சிவஞானபோத வெண்பாப்பகுதியால் விளக்கப்படுகின்ற இக்கருத்து,

"தொண்டலால் துணையும் இல்லை
தோல்அலா துடையும் இல்லை;
கண்டலா தருளும் இல்லை
கலந்த பின் பிரிவதில்லை ;
பண்டைநான் மறைகள் காணாப்
பரிசினன் என்றென் றெண்ணி
அண்டவா னவர்கள் ஏத்தும்
ஐயன்ஐ யாற னார்க்கே"

எனவரும் திருநாவுக்கரசர் திருப்பாடலினல், தெளிவுற வலியுறுத்தப் பெற்றிருத்தல் காணலாம்.

## (5) மறக்கருணை :

மக்கள் தம்முடைய வாழ்க்கையில் துன்பங்கள் நேரும்போதெல்லாம், கடவுள் தம்மீது சீற்றங்கொண்டு தண்டிப்பதாகக் கருதுவதுண்டு. கடவுளின் சீற்றத்தினல் ஏற்படும் தண்டனைகளே, நமக்குப் பலவகை நோய்களாகவும், தொல்லைகளாகவும் வருகின்றன என்று, பலவகைச் சமயத்தினரும் கருதுவர். ஆனல் சைவசித்தாந்தமோ, நமக்கு நேரும் தொல்லைகளும் துன்பங்களும்கூட, ஒரு வகையில் இறைவன் நம்பால் கொண்டுள்ள கருணையினலேயே விளைகின்றன என்று கருதுகின்றது. நம்மைத் தன் கருணையினலே ஆட்கொண்டு அருள்புரிவதற்காகவே இறைவனின் இன்னருளால், நமக்குத் துயரங்கள் விளைகின்றன என்று சைவசித்தாந்தம் அறிவுறுத்துகின்றது.

திருநாவுக்கரசர் பெருமானுக்கு இறைவனின் திருவருளாலேயே, சூலைநோய் ஏற்பட்டமை இங்குச் சிந்திக்கற்பாலது. இத்தகைய இறைவனின் திருவருளை மறக்கருணை என நூல்கள் நுவலும். "அறத்துக்கே அன்புசார்பென்ப அறியார்; மறத்துக்கும் அஃதே துணை" என்னும் திருக்குறள், இப்பொருளையும் உணர்த்துகின்றது என அறிஞர்கள் கூறுவர் "நிக்கிரகங்கள் (தண்டனைகள்) தானும், நேசத்தால் ஈசன் செய்வது தான்" என்று சிவஞான சித்தியார் வலியுறுத்துகின்றது. இம்மறக் கருணையின் மாட்சிமையை, இனிதே உலகியலில் வைத்து,

"தந்தைதாய், பெற்ற தத்தம்
புதல்வர்கள் தஞ்சொல் ஆற்றின்
வந்திடா விடின், உறுக்கி
வளாரினல் அடித்துத் தீய
பந்தமும் இடுவர் ; எல்லாம்
பார்த்திடிற் பரிவே யாகும்;
இந்தநீர் முறைமை யன்றோ
ஈசனர் முனிவும் என்றும்"

என்று சிவஞானசித்தியாரில் அருள்நந்திசிவம் அழகுற விளக்கியிருத்தல் காணலாம். இச் செய்யுளின்கண், "வளாரினல் அடித்து" என வரும் சொற்றொடர்,

ஓதுவித் தாய்முன் அறவுரை
காட்டி; அமணரொடே
காதுவித் தாய் ; கட்ட நோய்பிணி
தீர்த்தாய் ; கலந்தருளிப்
போதுவித்தாய் ; நின் பணிபிழைக்கிற்
புளியம் வளாரால்
மோதுவிப் பாய், உகப்பாய், முனிவாய் ;
கச்சி ஏகம்பனே"

எனத் திருநாவுக்கரசர் பெருமான். கச்சித்திரு வேகம்பத் தேவாரத் திருப்பதிகத்தில் அருளிச் செய்துள்ள பாடலை, நினைவு கூர்ந்தேயாகும்.

## (6) உடல்கள் மாறும்

உயிர்கள் வினைக்கு ஏற்ப வெவ்வேறு பிறவிகளைப் பெறும்; அப்போது அவற்றின் உடல்களும் மாறிமாறி வரும் என்பது சைவசித்தாந்தம். இவ்வுண்மையினைச் செவ்விதின் வலியுறுத்தும் வகையில் அருள்நந்திசிவம்,

"அகலியை கல்ல தானாள்,
அரிபல பிறவி பெற்றான்;
பகலவன் குலத்தில் தோன்றிப்
பார்எலாம் முழுதும் ஆண்டு
நிகரிலா அரசன் ஆகும்
சிலந்தி; நீடுலகம் போற்றச்
சகமதில் எலிதான் அன்றோ
மாவலி ஆய்த்துத் தானே"

எனச் சிவஞானசித்தியாரில் அருளிச் செய்திருக்கின்றார். இதன்கண் 'நிகரிலா அரசனுகும் சிலந்தி' என்றும், 'எலிதான் அன்றோ மாவலி ஆயிற்று' என்றும், அருள்நந்திசிவம் குறிப்பிட்டு இருப்பதற்கு அடிப்படையும் மேற்கோளும், திருநாவுக்கரசர் பாடல்களேயாகும்.

"சிலந்தியும் ஆனைக் காவில்
திருநிழற் பந்தர் செய்து,
உலந்தவண் இறந்த போதே
கோச்செங்க ணானும் ஆகக்,
கலந்தநீர்க் காவிரி சூழ்
சோணாட்டுச் சோழர் தங்கள்
குலந்தனிற் பிறப்பித் திட்டார்
குறுக்கைவீ ரட்ட னாரே" (1)

"நிறைமறைக் காடு தன்னில்
நீண்டெரி தீபம் தன்னைக்
கறைநிறத்து எலிதன் மூக்குச்
சுட்டிடக் கனன்று தூண்ட
அறைகடல் மண்ணும் விண்ணும்
அகன்றவான் உலகும் எல்லாம்
குறைவறக் கொடுப்பர் போலும்
குறுக்கைவீ ரட்ட னாரே" (2)

எனவரும் திருநாவுக்கரசர் பாடல்கள், திருவானைக்காவில் சிவபிரானை வழிபட்ட சிலந்தி, மறுபிறவியில் கோச்செங்கட் சோழராகப் பிறந்தருளியதனையும்; திருமறைக்காட்டில் சிவபிரானின் திருமுன்னர் எரிந்து கொண்டிருந்த திருவிளக்கினைத் தன்னையறியாமல் தூண்டிவிட்ட ஓர் எலியானது, அப்புண்ணியத்தினால் மறுபிறவியில் மாவலிச் சக்கரவர்த்தியாகப் பிறந்து, மூவுலகங்களையும் ஆட்சிபுரியும் பேறு பெற்றதனையும் விளக்குதல் காணலாம்.

## (7) தத்துவங்கள்:

சைவ சித்தாந்தத்தில் தத்துவங்களின் தோற்ற ஒடுக்கங்கள் பற்றியும், அவற்றின் இயல்கள் செயல்கள் பற்றியும் விளக்கப்பெற்றிருக்கும் திறம், இஞ்ஞான்றை அறிவியல் ஆராய்ச்சிக்குப் பெரிதும் பொருந்துவதாக உள்ளது. சாங்கியம் யோகம் பாஞ்சராத்திரம் ஆகிய மதங்கள், 24 தத்துவங்களையே குறிப்பிடுகின்றன. ஆனால் மெய்கண்ட நூல்களோ தத்துவங்களை 36 என்று ஆராய்ந்து விளக்குகின்றன. அவற்றினையே மேலும் நுண்ணிதின் ஆய்ந்து விரித்து 96 ஆக உணர்த்துகின்றன. இத்தத்துவத் தொகுதி விளக்கங்கள் மேலைநாட்டு ஆராய்ச்சியாளர்களாற் பெரிதும் பாராட்டிப் போற்றப் படுகின்றன. (4)

சைவசித்தாந்தம், தத்துவங்களை ஆன்மதத்துவம் (24), வித்தியா தத்துவம் (7), சிவதத்துவம் (5) என மூன்றாக வகுத்து 36 ஆகக் கூறும். இவைகள் அகக்கருவி எனப்படும். இவற்றின் வேறாக உள்ள புறக்கருவிகள் 60. இவற்றுள் ஐம்பூத காரியங்கள் 25; நாடிகள் 10; வாயுக்கள் 10; தொழிற் கருவிகளின் செயல்கள் 5; குணங்கள் 3; பற்றுகள் 3; பரை பைசந்தி முதலிய வாக்குகள் 4; ஆக இவைமொத்தம் புறக்கருவிகளாகிய தத்துவங்கள் அறுபது (60) ஆக வகுக்கப்பட்டுள்ளன. இங்ஙனம் அகக்கருவிகள் 36, புறக்கருவிகள் 60, ஆகிய 96 தத்துவங்களைப் பற்றிச் சைவசித்தாந்தம் விளக்குகின்றது. இங்ஙனம் சைவசித்தாந்தத்தில் தத்துவங்களின் பகுப்பும் விளக்கமும் அமைவதற்கு அடிப்படை ஒருவகையில் திருநாவுக்கரசர் தேவாரப்பாடல்களேயாகும். இத்தத்துவத் தொகைக் குறிப்பினை முதன் முதல் அருளிச் செய்தவர் திருநாவுக்கரசர் பெருமானே எனலாம்.

---

(4) "The unique position of Saiva Siddhanta is the fact that it expounds by careful refleetion the systematic account of the process of cosmic evolution which atetmpts to comprehend the universe as sum total of 96 Categories. This exposition is no mere metaphysical speculation, but is purely a logical account on scentific principles".

—THEOS BERNARD.

"எண்பதும் பத்தும் ஆறும்
என்னுளே இருந்து மன்னிக்
கண்பழக் கொன்றும் இன்றிக்
கலக்கநான் அலக்க ழிந்தேன்" (1)

"முப்பதும் முப்பத் தாறும்
முப்பதும் இடு குரம்பை
அப்பர் போல் ஐவர் வந்திங்கு
அதுதரு கிதுவிடென்று
ஒப்பவே நலிய லுற்றல்
உய்யுமா றறிய மாட்டேன்
செப்பமே திகழும் மேனித்
திருப்புக லூர னீரே" (2)

"துருத்தியாம் குரம்பை தன்னில்
தொண்ணூற்றங் கறுவர் நின்று,
விருத்திதான் தருக என்று
வேதனை பலவும் செய்ய
வருத்தியால் வல்ல வாறு
வந்துவந் தடைய நின்ற
அருத்தியார்க்கு அன்பர் போலும்
அதிகை வீரட்ட னரே" (3)

## (8) பரந்த மனப்பான்மை:

சைவசித்தாந்தமானது குறுகிய நோக்குடைய தன்று. பரந்து விரிந்த மனப்பான்மை வாய்ந்தது. அஃது எந்த ஒரு சமயத்தினையும் இகழாமல், எல்லாச் சமயங்களையும் அவ்வவற்றின் இயல்புக்கு ஏற்பப் போற்றித் தழுவிக் கொள்ளும் இயல்புடையது. இவ்வியல்பினை "ஓது சமயங்கள், பொருள் உணரும் நூல்கள், ஒன்றோடொன்று ஒவ்வாமல் உள பலவும்; இவற்றுள் யாது சமயம்? பொருள் நூல் யாது? இங்கு என்னின், இது ஆகும் அது அல்லது எனும் பிணக்கதின்றி, நீதியினால் இவையெல்லாம் ஓரிடத்தே காண நின்றது யாதொரு சமயம், அது சமயம் பொருள் நூல்" எனவரும் சிவ ஞானசித்தியார் செய்யுள், சைவசித்தாந்தத்தின் பரந்து விரிந்த மனப்பான்மையினை விளக்கும். இச் செய்யுளுக்கு அடிப்படை,

"விரிவிலா அறிவி னார்கள்
வேறொரு சமயம் செய்தே
எரிவினாற் சொன்ன ரேனும்
எம்பிராற்கு ஏற்ற தாகும்".

எனவரும் திருநாவுக்கரசர் தேவாரப் பாடற் பகுதியேயாகும் எனலாம்.

## (9) ஏணிப்படிநெறி:

உயிர்கள் தத்தம் வினைக்கு ஏற்பப் பல்வேறு பிறவிகளை அடைகின்றன. "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப் பல்விருகமாகிப் பறவையாய் பாம்பாகிக் கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய் வல்லசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச் செல்லாஅ நின்ற இத்தாவரசங்கமத்துள் எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்" என மணிவாசகர் பாடுவது போல, உயிர்கள் பல்வேறு பிறப்புக்களை அடைந்து படிப்படியே வளர்ந்து வருகின்றன. அப்பிறவிகள் தோறும் உயிர்கள் அடைந்து வரும் அறிவு வளர்ச்சியும் ஆன்மிக நெறிவளர்ச்சியும்கூட, முறைமுறையே படிப்படியாகவே நிகழ்கின்றன. இதனைப் படி முறைநெறி (சோபானமார்க்கம்) எனக் கூறுவர். 'ஏணிப்படிநெறி' எனவும் இது வழங்கப்படும். 'இந்நெறியின் இயல்பினைப் "புறச் சமயநெறி நின்றும், அகச்சமயம்புக்கும், புகல் மிருதிவழி உழன்றும், புகலும் ஆச்சிரம அறத்துறைகள் அவை அடைந்தும், அருந்தவங்கள் புரிந்தும், அருங்கலைகள் பல தெரிந்தும், ஆரணங்கள் படித்தும், சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும், வேத சிரப்பொருளை மிகத் தெளிந்தும், சென்றால், சைவத் திறத்தடைவர்; இதிற் சரியை கிரியா யோகம் செலுத்தியபின் ஞானத்தால் சிவனடியைச் சேர்வர்" எனவரும் சிவ ஞானசித்தியார் செய்யுள் இனிதெடுத்து விளக்குகின்றது. இதனை,

"பேணித் தொழுமவர் பொன்னுலகு
ஆளப் பிறங்கருளால்
ஏணிப் படிநெறி யிட்டுக்
கொடுத்து, இமையோர் முடிமேல்
மாணிக்கம் ஒத்து, மரகதம்
போன்று, வயிரம்மன்னி,
ஆணிக் கனகமும் ஒக்கும்
ஐயாறன் அடித்தலமே" (1)

"முத்தியை முற்ற வைத்தார்
முறைமுறை நெறிகள் வைத்தார்
அத்தியின் உரிவை வைத்தார்
ஐயன்ஐயாற னாரே" (2)

எனவரும் திருநாவுக்கரசர் திருமொழிகள் செவ்விதின் விளக்கி இருக்கும் திறன், சிந்தித்து இன்புறுதற்குரியது.

## (10) அடிமை நெறி:-

இறைவனின் திருவருளை உயிர்கள் பெறுவதற்குச் சைவசித்தாந்தம் அடிமைநெறி, மகன்மைநெறி, தோழமைநெறி, மாணவநெறி என்னும் நான்கு நெறிகளைச் சிறப்பித்தெடுத்துக் கூறுகின்றது. இவற்றை முறையே தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகாமார்க்கம், சன்மார்க்கம் என நூல்கள் வழங்கும். இவற்றுள் திருநாவுக்கரசர் அடிமைநெறி என்னும் தாச மார்க்கத்தினை, உலகின் பொருட்டுத் தனிச் சிறப்பாக உணர்த்தவந்தவர் என்பது

பெரியோர்கள் கருத்து. அடிமை நெறியின் இயல்பினைத் "தாசமார்க்கம் சாற்றில் சங்கரன் தன்கோயில், தலம் அலகிட்டு இலகு திரு மெழுக்கும் சாத்திப் போதுகம் கொய்து, பூந்தார் மாலை கண்ணி, புனிதற்குப் பல சமைத்துப் புகழ்ந்து பாடித் தீதில் திரு விளக் கிட்டுத் திருநந்தவனமும் செய்து, திருவேடங் கண்டால் அடியேன் செய்வது யாது பணியீர் என்று பணிந்து, அவர்தம் பணியும் இயற்று வது; இச்சரியை செய்வோர் ஈசனுலகிருப்பர்" எனச் சிவஞானசித்தியார் செய்யுள் விளக்கு கின்றது.

"பெரும்புலர் காலை மூழ்கிப்
பித்தர்க்குப் பத்தர் ஆகி
அரும்பொடு மலர்கள் தூவி
ஆர்வத்தை உள்ளே வைத்து
விரும்பிநல் விளக்குத் தூபம்
விதியினால் இடவல் லார்க்குக்
கரும்பினிற் கட்டி போல்வர்
கடவூர் வீரட்ட னாரே" (1)

"விளக்கினாற் பெற்ற பேறு
மெழுக்கினாற் பதிற்றி யாகும்;
துளக்கில் நன்மலர் தொடுத்தால்
தூயவிண் ணேற லாகும்;
விளக்கிட்டார் பேறு சொல்லின்
மெய்ந்நெறி ஞானம் ஆகும்;
அளப்பில கீதம் சொன்னார்க்கு
அடிகள்தாம் அருளுமாறே" (2)

"நிலைபெறுமா றெண்ணுதியேல்
நெஞ்சே நீவா
நித்தலும்எம் பிரானுடைய
கோயில்புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு
மெழுக்கும் இட்டுப்"
பூமாலை புனைந்தேதிப் புகழ்ந்து பாடி....

எனவரும் திருநாவுக்கரசர் தேவாரப் பாடல்கள், இக்கருத்துக்கு அரண் செய்வதாக அமைந் திருத்தல் அறிந்து இன்புறத்தக்கது.

## முடிவுரை :

சிவஞான சித்தியார் சீவன்முத்தர்கள் இயல்பு கூறுங்கால், "விருப்பு வெறுப்பு இன்றி ஓட்டில் தபனியத்தில் சமபுத்தி பண்ணியிருப் பார்கள்" (8—4) என்று குறிப்பிடுகின்றது. இதனையே 'ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்' என்று பெரியபுராணமும சுட்டு கின்றது. திருப்புகலூரில் திருநாவுக்கரசர் உழவாரப்பணி செய்யும்போது, பொன்னும் நவ மணிகளும் குவிந்து கிடந்தும், அவற்றை அவர் புல்லோடும் கல்லோடும் சேர்த்துப் புறத்தே எறிந்த வரலாற்றை நினைந்தே, சீவன்முத்தர் கள் ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கும் இயல்பினர் என்பது தெளியப் பெற்றது. திருவையாற்றில் எல்லாப் பொருள்களையும் திருநாவுக்கரசர் சிவமயமாகக் கண்ட நிகழ்ச்சியே, சீவன்முத்தர்கள் 'சிவமே காண்பர்' "பரஞானத்தால் பரத்தைத் தரிசித் தோர் பரமே பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார்" (11—2) என்று இலக்கணம் வகுப் பதற்கு ஏதுவாயிற்று.

சிவஞான சித்தியாரில் 12ஆம் சூத்திரத்தில் "அணைந்தோர் தன்மை" பற்றி விளக்க முற்படும் அருள்நந்தி சிவம்,

"எங்கும்யாம் ஒருவர்க்கும்
எளியோம் அல்லோம்;
யாவர்க்கும் மேலானோம்
என்று இறுமாப்பு எய்தித்
திங்கள் முடியார் அடியார்
அடியோம் என்று
திரிந்திடுவர் சிவஞானச்
செய்தி யுடையோரே"

என்று அழகுறப் பாடுகின்றார். இதன்கண், சிவ ஞானிகள் "இறுமாப்பு" எய்தியிருப்பார்கள் என்று சிவஞானசித்தியார் சிறந்தெடுத்துக் கூறுதற்கு அடிப்படை, "நாமார்க்கும் குடியல் லோம்; நமனை அஞ்சோம்; நரகத்தில் இடர்ப் பட்டோம்; நடலை யில்லோம்" என்றும்;

"இறுமாந் திருப்பன்கொலோ?
ஈசன்பல் கணத் தெண்ணப்பட்டுச்
சிறுமான் ஏந்திதன்
சேவடிக்கீழ்ச் சென்றங்கு
இறுமாந் திருப்பன் கொலோ"

என்றும், திருநாவுக்கரசர் பெருமான் அருளிச் செய்த திருமொழிகளேயாகும். இன்னோரன்ன யவை இன்னும் பல உள. அவைகள் விரிப்பிற் பெருகும்; தொகுப்பின் எஞ்சும். தமிழகத்தின் தலைசிறந்த ஞானத்தவமுனிவர் பெருந்தகை யாகிய திருநாவுக்கரசரையும், அவர்தம் வாழ்க் கையினாலும் வாய்மொழிகளினாலும் உருவாகி மலர்ந்த சைவசித்தாந்தம் என்னும் தமிழகத்துத் தத்துவஞானச் செந்நெறியினையும், நாம் அனை வரும் ஏற்ற பெற்றி இனிது போற்றி ஒழுகி, வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து நலமுற முற்படுவோமாக!

—ஆசிரியர்

# தமிழர் வாழ்வில் ஓவியக்கலை

திரு. செ. வைத்தியலிங்கம், M.A., M.LITT.,
தமிழ் விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

ஒப்புமை அடிப்படையில் 'உவமையணி' தோன்றியதால் அதனினின்றும் செய்யுளணிகள் பலவாகத் தோன்றின; அது போல, ஒவ்வுதல் அடிப்படையில் 'ஓவு' 'ஓவம்' என வழங்கும் ஓவியக்கலை தோன்றியதால் சிற்பம் நடனம் கட்டடக்கலை முதலிய அழகுக் கலைகள் பலவாகத் தோன்றினவெனலாம்.

தொன்மை மாட்சியதாகிய ஓவியக்கலை சிறந்த காட்சிக் கலையாகும். தமிழ் நாட்டிலே இதற்கெனச் சில கலைமரபுகள் (Art Traditions) உண்டெனலாம். தமிழர்தம் ஊன்றிய சிந்தனையில் தோன்றிய சிறந்த ஓவிய வரலாற்றினைக் கால அடிப்படையில்-பல்லவர்காலம், சோழர் காலம், நாயக்கர் காலம், மராட்டியர் காலம், முகம்மதியர் காலம், ஆங்கிலேயர் காலம் என்ற பகுப்பில்-ஆய்வு நடத்திடப் பல ஓவியங்கள் இன்றும் உள்ளன. காலதேவனின் கொடும்பிடியில் சிக்கிச் சிதைவுற்ற நிலையிலும் அவை ஓரளவு கிடைப்பது நாம் செய்த நற்பேறேயாகும். ஆனால், சங்க காலத்து ஓவியங்களைப் பற்றிச் சிந்திக்கையில் அவை கிடைக்க வழியேயில்லை. என்றாலும் தமிழிலக்கியங்களின் துணை கொண்டு அவற்றின் இயல்புகளை அறிந்து மகிழ வேண்டியவர்களாகிறோம். ஆக இவற்றைப் பற்றியெல்லாம் தமிழறிஞர்கள் விரிவாகக் கட்டுரை வடிவில் வடித்துத் தந்திருக்கிறார்கள்; ஆதலின் ஓவியக் கலையானது தமிழர்கள் வாழ்வில் எவ்வாறு பின்னிப் பிணைந்து மனமகிழ்ச்சிக்கும் சமய வளர்ச்சிக்கும் காரணமாயிற்றெனச் சிறிது காண்போம்.

## ஓவிய உணர்வு :

கலைஞன் தான்நேரில் கண்டு சுவைத்த பொருள்களையும் கற்பனையால் உருவாக்கிக் கண்டிடும் பொருள்களையும் பிறரும் சுவைத்திடுமாறு ஓவியத்தின் வாயிலாகக் கொணர்கிறான். தன்னலம் பொதுநலமாக மலர்வதால் நாட்டுக்கே நலமுண்டாகிறது. நம் காட்சியில் தோன்றி விரைவில் மறையும் அழகுப் பொருள்களெல்லாம் ஓவியனின் கைத்திறனால், திறம்பட வரையும் ஓவியத்தால், பல்லாண்டு காலம் நிலை கொள்வதால் ஓவியத் தேவையினைப் பொதுவாகப் பலரும் உணர்கின்றனர். எனவே ஓவியக்கலையினை அழகனுபவத்துடன் பண்பாட்டு அடிப்படையில் வளர்த்துச் சிறந்திட நாகரிக மக்களும் இயல்பாய் நாட்டங் கொள்கின்றனர். பண்டு தொட்டே தமிழர்கள் கலையுணர்வில் சிறந்த தேர்ச்சிபெற்று வந்தமையின் தம் வாழ்வுடன் மலர்ந்த ஓவியக்கலை பற்றியும் நூலினை எழுதினர்; அதனைப் பெரிதும் போற்றியே வந்துள்ளனர். ஆடல் பாடல் அழகுநிறை மாதவி வாயிலாக அவளது ஓவிய நூற்பயிற்சியினையும் கூறுகிறது மணிமேகலை; இதனை,

> 'நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த
> ஓவியச் செந்நூல் உரைநூற் கிடக்கையும்
> கற்றுத் துறைபோகிய பொற்றொடி நங்கை'
>
> (ஊரலருரைத்தகாதை, 30—32

என்ற வரிகளால் அறியலாம்.

ஓவியக் கலையில் பெரிதும் ஈடுபாடு கொண்ட மகேந்திரவர்ம பல்லவன் 'சித்திரகாரப் புலி எனப்பட்டான்; இவன் ஓவிய நூல் ஒன்றுக்கு உரை எழுதினான் என்பதை, மாமண்டூர்க் குகைக்கோயிற் சாசனம் கொண்டுரைப்பார் மயிலை சீனி. வேங்கடசாமி.

மணிமேகலையில் உதயகுமரன் கூற்றாக ஓவியப் புலமையின் அக்காலத் தேர்ச்சியை வெளிப்படுத்துகிறார் சீத்தலைச் சாத்தனார். தன்னைக் கண்டு மணிமேகலை அஞ்சிப் பளிக்

கறையிற் புகுந்ததைக் கண்டிருக்கிறுன் உதய குமரன்; ஆனுல், அவளை ஒரு சித்திரப் பாவை யென எண்ணி அலட்சியமாக இருந்து விடுகிருனும்; அதனை அவன் கூற்ருகவே ஆசிரியர்,

‘மேவிய பளிங்கின் விருந்திற் பாவையிஃ(து)
ஓவியச் செய்தியென் ருெழிவேன் முன்னர்’
(அம்பலம் புக்ககாதை, 66—7)

எனச் சுட்டிக் காட்டுகிருர்.

## உலகியலில் மகிழ்ச்சி தரும் ஓவியக்கலை :

அழகிய மகளிர் ஆற்றங்கரை மணலருகே ஆர்வமுடன் விளையாடுகின்றனர்; அழகுணர்ச்சி உந்திய நிலையில் மணல்மீது பாவைச் சித்திரம் தீட்டிக் களிக்கின்றனர். அத்தகைய சித்திரத்தை வையையாற்று வெள்ளம் அடித்தழித்துச் செல்கிறது; மகளிர் அழுது நிற்கின்றனராம். இக்காட்சியினைப் பரிபாடல்,

‘மாதர் மடநல்லார் மணலி னெழுதிய
பாவை சிதைத்த தெனவழ வொருசார்’

எனச் சித்திரித்துக் காட்டுகிறது. இத்தகைய முறையில் முகிழ்த்த ஓவிய உணர்வே பிற்காலத்தில் தமிழ நாட்டு மகளிரின் ‘கோலம்’ போடுமாற்றலைப் பெரிதும் வளர்த்ததெனலாம்.

மகளிர்தம் முகத்திலும் தோளிலும் மார்பிலும் சித்திர மாட்சியுடன் ஒப்பனைசெய்து கொண்ட திறத்தினை-முகத்தெழுதெழில், கரும்பு வல்லி முதலிய தொய்யில் எழுதும் பாங்கினைத்- தமிழிலக்கியங்களிற் பரக்கக் காணலாம். தெய்வமே உலகியற் பாங்கு கொண்டு தொய்யிலின் சிறப்பினை உணர்த்துவதாகத் திரிகூட ராசப்பக் கவிராயர் கூறுகிருர்; அஃதாவது,

‘வில்லுப் பணிபுனைந்து வல்லிக்
கமுகைவென்ற கழுத்தினுள் சுகம்
விலையிட் டெழுதியின்ப நிலையிட்
டெழுதுதந் தொய்யில் எழுத்தினுள்...’

என வசந்தவல்லியின் தொய்யிற் கவர்ச்சியைப் புலப்படுத்துகிருர்.

கணவரைப் பிரிந்திருந்த காலத்தில் மனைவியர் ஒப்பனையின்றிக் காணப்பட்டனர். கோவலனைப் பிரிந்த கண்ணகி ‘கொங்கை முன்றிற் குங்கும மெழுதா’ளாகக் காணப் பட்டமையைச் சிலப்பதிகாரம் செப்பும். பாண்டியனைப் பிரிந்திருந்த கோப்பெருந்தேவியின் உருவத்தைப் ‘புனையா ஓவியம்’ எனச் சுட்டிக் காட்டுகிறது நெடுநல்வாடை.

தலைவி மாட்டுத் தனக்குள்ள காதலழுத்தத்தினைப் பிறர்க்கறிவுறுத்தத் தலைவன் ‘மடலேறுதல்’ மேற்கொள்வான். அவ்வாறு மடலேறும் இளைஞன் தான் காதலித்த நங்கையின் திருவுருவத்தைக் கிழியில் ஓவியமாகத் தீட்டிக் கொண்டு, அதனைக் கையில் ஏந்திக் கொள்வானும். இதனை நெய்தற்கலி போன்ற நூல்களில் கண்டு வியக்கலாம்.

துகிலிகை கொண்டு பூவேலைப்பாட்டுடன் எழுதப்பட்டமை காரணமாகப் பட்டாடையானது முதலில் ‘பூந்துகில்’ எனப்பட்டது. தொன்மையில் தமிழ் நங்கையர் பூந்துணருடன் கூடிய தழையாடையுடுத்துக் களித்தனர். அதன் நினைவுணர்ச்சியே பூந்துகிலைக் கண்டு புனையும் வேட்கையை உண்டாக்கி இருக்கலாம்.

துணியில் சித்திரம் எழுதும் பழக்கத்தின் விளைவாகவே புலி கயல்வில் கலப்பை வீணை சேவல் நாகம் முதலியவற்றை உருவமாகத் தீட்டிக் கொடிகளைக் கண்டு போற்றினரெனலாம். நாகரிக வாழ்வில் படிப்படியே முன்னேறிய தமிழர்கள் தாம் உறையும் இல்லங்களையெல்லாம் கலைமாட்சியுடன் ‘ஓவத் தன்ன வினைபுனை நல்லில்’ (அகநானூறு 98 :11) களாகக் கண்டு மகிழ்ந்தனர். தாம் கட்டிய மாட மாளிகைகளில் சித்திரமானது அழகுணர்வுத் தேவையாகப் பட்டதென்பது ‘மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்’ எனும் நன்னூல் பொதுப் பாயிரம் (55) கொண்டு உணரலாம்.

சித்திரச் சாலைகள் காமவேள் விரும்பி வீற்றிருக்கும் நிலையங்களாகக் கருதப்பட்டன என்பது பரிபாடலாலும் பெருங்கதையாலும் அறியலாகும் செய்திகள். மாளிகைச் சுவர்கள் மீதும் விதானத்தின்மீதும் பிற தேவையான இடங்களிலும் எழிற் சித்திரங்கள் எழுதப் பட்டன.

தலைவி ஒருத்தியின் பண்புநலனைத் தோழி கூறுகையில் 'அழகிய சுவரில் அலங்கரித்து எழுதிய பிரதிமை போன்ற குற்றந்தீர்ந்த காட்சியுடையவள்' என்ற பொருளிலே, "புனைசுவர்ப் பாவையன்ன பழிதீர் காட்சி" (நற்றிணை, 252) என்று கூறுகிருள். இதனுல், ஓவியன் தன் கைப்பழக்கத் திறனல் சுவரிலே குற்றம் நேரா முறையில்தான் சித்திரம் தீட்டுவான் என்பதும் பெறப்படுகிறது. பவழத் தூண்களையும் பசும் பொற் சுவர்களையும் முத்தினுலான ஓவிய வேலைப்பாடுடைய விதானத்தையும் கொண்ட பளபளப்பான பளிங்கு மண்டபம் பற்றி 'மணிமேகலை'யில்,

> 'பவழத் தூணத்துப் பசும்பொன் செஞ்சுவர்
> திகழொளி நித்திலச் சித்திர விதானத்து
> விளங்கொளி பரந்த பளிங்குசெய்
> மண்டபத்து'

எனவரும் பகுதி இயம்புகிறது.

வெண்மாளிகைச் சுவர்கள்மீது கண்கவர் ஓவியங்கள் சிறந்த கண்ணுள் வினைஞரால் தீட்டப்பட்டிருக்கின்றன; தெருக்களில் தேரோடிய காரணத்தால் புழுதிப் படலமெழுந்து அவ்வோவியங்கள்மீது படிந்திருக்கும் காட்சியானது சாம்பற் புழுதியாடிய களிறு போலத் தோற்றமளிக்கிறதாம். இத்தகைய அருங்குறிப்பினைத்,

> 'தேரோடத் துகள் கெழுமி
> நீருடிய களிறு போல
> வேறுபட்ட வினையோ வத்து
> வெண்கோயில் மாசூட்டும்'

எனப் பட்டினப்பாலை (47-50) பகர்வதை நோக்குக.

பாண்டிமாதேவியின் உட்கோட்டையில் வெள்ளிபோன்று பொலிவுறும் சுதையமைப்பும் நீலமணி கண்டாலொத்த நெடுந்திரள் தூண்களும் அழகு செய்கின்றன. செம்பாற் செய்யப்பட்டதை ஒத்த நெடுஞ்சுவரிலே பூவேலைப் பாட்டுடன் அமைந்த கீற்ருேவிய மாட்சி காணலாம். இதனை நெடுநல்வாடை,

> 'வெள்ளி யன்ன விளங்குஞ் சுதையுரீஇ
> மணிகண் டன்ன மாத்திரட் டிண்காழ்ச்
> செம்பியன் றன்ன செய்வுறு நெடுஞ்சுவ
> ருருவப் பல்பூ வொருகொடி வளைஇக்
> கருவொடு பெயரிய காண்பி னல்லில்'

எனச் சித்திரித்துக் காட்டுகின்றது. சோழன் குலோத்துங்கன் தங்கிய மாளிகை மண்டபத்தினைக் கலிங்கத்துப் பரணியில் செயங்கொண்டார்,

> 'அம்பொன் மேரு வதுகொ லிதுகொலென்
> றும்பி ரங்கதிர் வெய்யவன் ஐயுறும்
> செம்பொன் மாளிகைத் தென்குட திக்கினில்
> செய்த சித்திர மண்டபந் தன்னிலே'

என அழகுறச் சித்திரிக்கிருர்.

அரண்மனையகத்தே கோப்பெருந்தேவி படுத்துறங்கும் அழகிய தந்தக் கட்டிலிலும் ஓவிய மாட்சியினைக் காணலாம். அஃதாவது, கட்டிற் பரப்பிலே வண்ணக் கம்பளத்தால் சித்திர மாட்சியுடன் கூடிய புலிவேட்டக்காட்சி குத்துறுத்தமைக்கப் பட்டுள்ளது; மேற்கட்டியில் உரோகிணியுடன் களிப்பாகத் தோன்றும் சந்திரனுருவம் கவர்ச்சியோவியமாகத் தீட்டப் பட்டுள்ளது. புறவாழ்வை அடிப்படையாகக் கொண்டு அகவாழ்வை மலர்த்திக்கொள்ள வேண்டிய குறிக்கோளினை வேந்தர் நினைவு கூருமாறு, கட்டிலமைப்பும் இவ்வாறு அமைக்கப் பட்டதோ! இஃது உய்த்துணர வேண்டிய ஓவியத் திறனுகும். எத்தகைய சிறப்பில் மாட மாளிகை வாழ்வு வாழ்ந்திடினும் மக்களுக்கு மக்கட்செல்வம் இல்லையெனின் நிறைவாழ் வில்லை. தவத்தாற் பிறந்த செல்வச் சிறுவர்கள் தொடர்பாக நற்றிணையில் குறிப்பிடப்படும் ஓவியக் குறிப்பொன்றினைக் காண்போம்.

பொன்னணிகள் அணிந்தவர்களாய்ச் செல்வச் சிருர்கள் சிறு பறையினைத் தோளில் மாட்டிக்கொண்டு அடித்தின்புறுகின்றனர்; அந்தப் பாறையின் மீது குருவியின் உருவம் ஓவியமாகத் தீட்டப்பட்டிருக்கிறது. இதனைப்,

> 'பெருமுது செல்வர் பொன்னுடைப் புதல்வர்
> சிறுதோள் கோத்த செவ்வரிப் பறையின்
> கண்ணகத் தெழுதிய குரீஇப் போல'

எனும் பகுதியால் அறிந்து இன்புறலாம். மேலும், கட்டுக்குள் அடங்காது ஆடிக் களித்திடும் செல்வச் சிருர்களைத் தத்தியும் தானியங்களைக் கொத்தியும் திரியும் குருவியின் ஓவியம் இன்புறுத்துமென எண்ணிய ஓவியனின் செய்கையும் போற்றுதற்குரியதாகிறது.

## சமயம் வளர்த்த ஓவியக்கலை :

தமிழகத்தில் நுண்கலைகளே தெய்வநலத்துடன், சமயப் பின்னணியுடன் தான் பெரிதும் வளர்ந்தன எனலாம். போரில் இறந்துபட்ட வீரர்களுக்கு வீரக்கல் நாட்டுகையில் தெய்வநலச் சூழலை உருவாக்கிப் போற்றிய குறிப்புக்கள் இலக்கியத்தில் நிரம்பவுண்டு. நடுகல்லில் வீரனுடைய உருவத்தைக் கீற்றோவியமாக வரைந்து கொண்டே செதுக்கியிருக்கின்றனர். இன்றும் கண்டெடுக்கப்படும் நடுகற்களிலிருந்து இதனையறியலாம்.

கோயிற் சுவரிலே அழகுறத் தீட்டப்பெற்ற கடவுளின் உருவம் போதிய நாட்டமில்லாக் காரணத்தால் மறைந்து போயிருக்கிறது; இடையருது நிகழ்கின்ற பலியும் இல்லாமற் போனதால் திண்ணை மெழுகப் படாமலிருக்கிறது. இத்தகைய பொலிவற்ற காட்சியினைக் கடியலூர் உருத்திரங் கண்ணனர்,

"எழுதணி கடவுள் போகலின் புல்லென்று
ஒழுகுபலி மறந்த மெழுகாப் புன்திணை"

(அகநானூறு, 167:15—16)

என வரைந்து காட்டுகிருர்.

திருப்பரங்குன்றத்தருகே அமைந்திருந்த எழுத்துநிலை (ஓவிய) மண்டபத்தருகே காதலியருடன் காதலர் வருகின்றனர். காதலியர் வினவுகையில் சித்திர மாட்சியினை ஆர்வமுடன் காதலர்கள் விளக்கிக் கொண்டே வருகின்றனர். இரதியும் மன்மதனுமாக அமைந்த ஓவியத்தைக் காட்டிய பிறகு, காமத்தால் சீரழிந்த இந்திரன் நிலையைச் சுட்டுகின்றனராம். அஃதாவது கௌதமனையும், அவன் மனைவி அகலிகையையும், அவளழகில் மதியிழந்து பூனையுருக் கொண்ட இந்திரனையும் ஓவியத்தில் குறிப்பிட்டுக் காட்டுகின்றனராம்; இதனைப் பரிபாடல்,

'இரதி காமன் இவளிவன் எனஅ
விரகியர் வினவ விடைவிறுப் போரும்
இந்திரன் பூசை இவளக லிகையிவன்
சென்ற கவுதமன் சினனுறக் கல்லுரு
ஒன்றிய படியிதென் றுரைசெய் வோரும்
இன்ன பலபல எழுத்துநிலை மண்டபம்'

(19 : 48—53).

எனச் சித்திரிக்கின்றது. இதனுல், தேவர்களுக்கே தலைவனுக இந்திரனிருந்தும், சீலமில்லாக் காரணத்தால் அவன் மண்ணகத்தவராலும் எள்ளி நகையாடப்படுகிருன் என்பது புலனுகும்.

அழகுக் கலைவளர்க்கும் கலைப்பண்ணைகளாகிய திருக்கோவில்களில், மக்கள் ஆன்மநலம் பெறுதற்குரிய சூழலில் அழகோவியங்கள் தீட்டப்பெற்றன. தஞ்சைப் பெரிய கோவிலில் தீட்டப்பெற்ற சுந்தரர் வாழ்க்கை நிகழ்ச்சிகள் சுந்தரரை இறைவன் வேதியுருவில் வந்து தடுத்தாட்கொண்டதும் சேரமான் பெருமாளுடன் சுந்தரர் கயிலை செல்லுதலுமாகிய காட்சிகள், சமய ஆர்வமுடன் காணத்தக்கன. காஞ்சியிலுள்ள கயிலாசநாதர் கோவில், வைகுந்தப்பெருமாள் கோயில், தில்லைச் சிவகாமியம்மன் கோயில், திருக்குற்றலம் சித்திரசபை, குடந்தை இராமசாமி கோயில், திருவிடை மருதூர்க் கோயில் முதலிய தலங்களில் காணலாகும் ஓவியங்கள் சமய உண்மைகளை மக்கள் உணர்ந்துய்ந்திட வாய்ப்பளிப்பன வாகும். சமணர்களின் தவச்சாலை எனக் கருதப்படும் சித்தன்ன வாசல் குகை ஓவியங்களும் தமிழர்தம் சீலம் போற்றுவனவாகும்.

## அருளாளர்கள் வரைந்த அகவோவியங்கள் :

புறத்தே காணலாகும் துணி சுவர் முதலிய வற்றில்தான் ஓவியம் வரைவது என்பதன்று; அகத்தேயும் அருட்செல்வர்கள் தம் உள்ளொளிக் காட்சியனுபவத்தை அழியாவோவியமாக எழிலுறத் தீட்டிக் களித்திருக்கின்றனர். உயிர்ப்பியங்காதபடி மூச்சையடக்கித் தியானத்தால் ஒன்றிய வண்ணம் உள்ளமாகிய படத்திலே சிவபரம் பொருளை நிறையுருவாக எழுதுகின்றுர் அப்பரடிகள். அருட் கண்ணுல் மட்டுமே கண்டனுபவிக்கின்ற அந்த ஓவியம் எழுதும் பாங்கினை

'உயிரா வணமிருந் துற்றுநோக்கி.
யுள்ளக் கிழியி னுருவெழுதி'


எனும் திருத்தாண்டகப் பகுதியால் உணரலாம். இஃது ஒருபுறமிருக்க, மனத்தகத்தானுகிய சிவனே தன்னகத்தில் ஓர் ஓவியமெழுதிப் பார்த்திருந்து ஒருமையுடன் போற்றுவதாகக்

குமரகுருபரர் இயம்பிடுகிறார். அலைகடல்சூழ் உலகத்தினைக் கடந்து நின்ற ஒப்பிலியப்பனாகிய சொக்கன் தன் திருவுள்ளத்திலே அழகொழுக மீனாட்சியம்மையை உயிரோவியமாகத் தீட்டி மகிழ்கின்றானும்; இதனை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில், வருகைப் பருவத்தில், "எறிதரங்கம் உடுக்கும் புவனம் கடந்து நின்ற ஒருவன் திருவுள்ளத்தில் அழகொழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிரோவியமே" எனவரும் பகுதியுட் கண்டு களிக்கலாம்.

புறத்தே காணும் பொருளை அகத்தே அழகநுபவத்துடன் கண்டு, வண்ணக்கலவை மூலம் துகிலிகையால் மீளவும் புறத்தே பிறர்காண வெளிப்படுத்துவதே பொதுவாக ஓவியம் எனலாம். ஆனால், குமரகுருபரரோ புறத்தி லிழிந்து அகத்திற்குச் சென்றவர், உடனே புறத்திற்கு வராமல் மேலும் உள் நுழைந்து ஊடுருவுகிறார்; அஃதாவது, தம் உள்ளத்தே சமாதி நிலையில் கண்டுகளித்த சிவனின் திருவுள்ளத்திலேயும் ஆர்வமுடன் நுழைந்து பார்க்கிறார்; அங்கே அழகொழுக வரையப் பட்டிருக்கும் கோலத் திருவுருவைக் கண்டு களிக்கிறார். இந்நிலையில், தம் அழகனுபவத்தை ஓவியங்கண்ட ஒன்றல் நிலையினை, உலகினர்க்குக் காட்டப் புறத்தே வருகிறார். அப்படி வரும்பொழுது அவருடைய வருகை மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழாகவே வெளி வருகிறது. இதனால், ஓவியக்கலை என்பது கருவியாக இராமல், காரியப்பொருளாகவே, உயிரோவியமாகவே, மீனாட்சியாகவே, மாறி விடுகின்ற தெய்வநலக் கலை மேம்பாட்டினைக் கண்டு மெய்சிலிர்க்கின்றோம். இஃது ஆன்ம உணர்வொன்றல் தன்மையால் விளைந்திடும் அருளழகின் மாட்சியாகும்.

## முடிவுரை :

இத்தகைய மேல்நிலைக் கலைமாட்சியைத் தமிழகம் நமக்குப் பரம்பரைச் சொத்தாக வழங்கியிருக்கிறது. அதனை உணர்ந்து தெளிந்து போற்றுதலால், நம்மை நாமே உயர்த்திக் கொள்ள வழி ஏற்படும். வாழிய கலைவாழ்வு !



சேலம், கோட்டை அருள்திரு பெரிய மாரியம்மன் கோயிலில், கோவைத் துணையாணையர் திரு. எம். சூரியராஜ், B.A., B.L. அவர்கள், 'சிலம்புச் செல்வர்' திரு. ம. பொ. சிவஞானம், M.L.C. அவர்கள் தலைமையில், கண்ணகி விழாவினைத் துவக்கி வைத்தல்.

# திருவாசகத்தில் தேவர்கள் படும்பாடு

திரு. டாக்டர் வ. சுப. மாணிக்கம், M.A., Ph.D.,

தலைவர் இந்திய மொழிப்புலம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

திருமால் முதலான தேவர்களின் நிலைபற்றி மணிவாசகரின் உள்ளத்தையும், திருவாசகத்தின் ஓட்டத்தையும் வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் நோக்கம். திருவாசகம் சமய நூலாயினும், இக்கட்டுரை சமய நோக்கில் எழுதப்படவில்லை. ஆசிரியன் உள்ளங் காணும் காணும் திறன் முறையில் எழுதப்படுவது. இதனை உளங்கொண்டு இந்த ஆய்வினைப் படிக்குமாறு வேண்டுகின்றேன்.

"சந்திரனைத் தேய்த்தருளித் தக்கன்தன் வேள்வியினில்
இந்திரனைத் தோள்நெரித்திட் டெச்சன் தலையரிந்து
அந்தரமே செல்லும் அலர்கதிரோன் பல்தகர்த்துச்
சிந்தித் திசைதிசையே தேவர்களை ஓட்டுகந்த
செந்தார்ப் பொழில் புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
மந்தார மாலையே பாடுதுங்காண் அம்மானாய்"—திருவம்மானை.

சந்திரனையும் இந்திரனையும் எச்சனையும் ஞாயிற்றையும் ஏனைத் தேவர்களையும் பல்வேறு உறுப்புக்களைத் தேய்த்தும் நெரித்தும் தகர்த்தும் நாலாறு திசையாக ஓடும்படி செய்து அதனைப் பார்த்து உவப்படைந்தான் சிவன் என்று திருவாசகம் பாடுமேல், அத்தேவர்களின் அடிப்படைக் குற்றங்கள் என்ன? அன்னோரைப் பாட்டில் வைத்துப் பாடாகப்படுத்தும் திருவாசகத்தின் உட்கிடை என்ன? என்பது பற்றி நாம் ஒரு தெளிவு பெறவேண்டும். முதற்கண் திருவாசகத்தில் தேவர்களைக் குறித்து வரும் செய்திகளையும், அவ்விடங்களில் ஆளும் மொழி நடைகளையும் காண்போம். புராணப்படி தேவர்கள் இந்திய நாட்டின் தொகை போலப் பலகோடியர் ஆக இருந்தாலும் அக்கூட்டத்துக்குத் தலைவர் ஆவார் மூவரே.

1. 'வான்வந்த தேவர்களும் மாலயனோடு இந்திரனும்'
2. 'மாலயனோ டிந்திரனும் எப்பிறவியுந் தேட'
3. 'இந்திரனும் மாலயனும் ஏனோரும் வானோரும்'
4. 'கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு'

என்றபடி திருமால் நான்முகன் இந்திரன் என்னும் மூவர்களையே விதந்தெடுத்துக் குறிப்பாகப் பாடுபடுத்துகின்றது திருவாசகம். 'புரந்தரன்மால் அயன்பால் இருளாயிருக்கும் ஒளி' (73) என்ற திருக்கோவையாரிலும் இம்முப்பெயர்த் தொடரைக் காண்கின்றோம். இம் மூவருள்ளுங்கூட, இந்திரன் சில இடங்களில் விடப்படுகின்றான். தலைமைத் தன்மை ஏனையிருவரைப் போல் அவன் பெறுவதில்லை.

1. 'அரியொடு பிரமற்கு அளவறியொண்ணான்'
2. 'பிரமன் மாலறியாப் பெற்றி யோனே'
3. 'பூமேல் அயனொடு மாலும் புகலரிதென்று'
4. 'அரிக்கும் பிரமற்கும் அல்லாத தேவர்கட்கும்'

இவ்வாறு திருமாலும் பிரமனுமே திருவாசகத்தின் தாக்குதலுக்கு முற்பட ஆளாகின்றனர். திருக்கோவையாரிலும் 'நான்முகன் மாலறியாக் கடனும் உருவத்து' (77) என்ற இடத்து இந்திரனை ஒழித்த இரு கூட்டு காணப்படு

கின்றது. இவ்விருவரைக் கூறினல் ஏனைத் தேவர்களையும் சுட்டியதாகும் என்பது கருத்து. மாலையும் அயனையும் சேர்த்தே கூறும் பெரு வழக்கு ஏற்பட்டமையின், பெயர் சொல்லாமலே இருவர் என்றால், இவ்விரு தேவரையும் குறிக்கும் தொகை மரபு தோன்றலாயிற்று. 'இருவரால் மாறு காணு எம்பிரான்' எனத் திருவாசகமும், 'இருவர் அறியா அணிதில்லை யம்பலத்து' எனத் திருக்கோவையாரும் இத்தொகை மரபை ஆண்டுள்ளன. சில இடங்களில் மாலும் பிரமனும் என, பிரமனும் மாலும் என முன் பின்னகக் கூறப்பட்டாலும் இருவரையும் நிகராக வைத்தே திருவாசகம் தாக்குதல் தொடுக்கின்றது.

1. 'அயன்மால் உள்ளிட்ட மேலாய தேவரெல்லாம்'
2. 'முன்னைய மாலயனும் வானவரும் தானவரும்

இவ்வாறு தேவர் கூட்டத்தைக் குறிக்கும்போது, இருவரையுமே முதற்கண் மொழிந்து ஏனையோரைப் பொதுவாகக் கூறுதல் நினையத்தகும். புராணப்படி திருமால் நான்முகனுக்குத் தந்தையாதலின், சில இடங்களில் திருமாலை மட்டும் குறிக்கும் மரபும் உண்டு.

1. 'முழுவதுங் கண்டவனைப்படைத்தான் முடிசாய்த்து'
2. செங்கண் நெடுமாலும் சென்றிடந்துங் காண்பரிய'
3. 'வெளிவந்த மாலயனும் காண்பரிய வித்தகனை'
4. 'திருமாலும் பன்றியாய்ச் சென் றுணராத் திருவடியை'

இங்ஙனம் திருவாசகத்தில் சில இடங்களில் நான்முகனை விட்டுத் திருமாலை மட்டும் குறிப்பது போலவே திருக்கோவையும் 'கருங் கண்ணனை அறியாமை நின்றோன்' (53) என்று குறிக்கும் போக்கினைப் பார்க்கின்றோம். எனினும் பொருட்பேற்றால் நான்முகனையும் கொள்ள வேண்டும் என்பது கதிர்மணி விளக்கப் பெரும் பேராசிரியர் பண்டிதமணியின் கருத்து. 'முழுவதும் கண்டவனைப் படைத்தான்' என்ற திருச்சதகப் பாடலுக்கு 'அடிதேடிய திருமால் செய்தியை வெளிப்படையாகக் கூறவே, முடி தேடிய பிரமன் செய்தியும் குறிப்பாகப் புலப் படுத்திய படியாம்' என்று மொழிகுவர் பண்டிதமணியார். ஆதலின் தேவக் குழுவிற்குத் திருமாலும் பிரமனும் தலைவர் ஆவர் என்று தெளியலாம்.

திருமாலையும் நான்முகனையும் தலைமையாக வைத்து எண்ணித் திருவாசகம் தாக்குதற்குக் காரணம் என்ன? சிவபெருமானைக் காணுவோம் என்ற முனைப்பை மேற்கொண்டு ஏனைத் தேவர்கள் செய்த முயற்சிகள் வெளிப் படையாகத் தெரியவில்லை. சிவனைக் கண்டு காட்டுவோம் என்ற ஆணவ முனைப்பில் திளைத்தவர்கள் அரியும் அயனுமே. திருமால் பன்றியுருவெடுத்துச் சிவன் திருவடியைக் காண முனைந்தான். பிரமன் அன்னமாகி அவனது முடியைக் காணப் பறந்தான். தனிமுயற்சி பயனளிக்கவில்லை என்பது புராண முடிவு. இம் முனைப்புச் செயலைத் திருவாசகம் அழுத்தமான சொற்களால் தாக்கிப் பாடுகின்றது.

1. 'மாலறியா நான்முகனும் காணு மலையினை'
2. 'செங்கண் நெடுமாலும் சென்றிடத் துங்காண்பரிய'
3. 'திருமாலும் பன்றியாய்ச் சென் றுணராத் திருவடியை'
4. 'பிரமன் அரியென் றிருவரும் தம் பேதைமையால் பரமம் யாம்பரமம் என்றவர்கள் பதைப்பொடுங்க'
5. 'நீண்ட மாலும் அயனும் வெருவ நீண்ட நெருப்பை'
6. 'திகழத் திகழும் அடியும் முடியும் காண்பான் கீழ்மேல் அயனும் மாலும் அகழப் பறந்துங் காண மாட்டா அம்மான்'
7. 'பங்கயத் தயனும்மால் அறியா நீதியே'

இத்தொடர்களில் ஆளப்பட்ட குத்தற் சொற்களைத் திருமாலும் நான்முகனும் படிக்கும் வாய்ப்பிருந்தால், எவ்வளவோ புண்படுவர். திருமாலால் அறிய முடியாதவனும், நான்முகனல் காணமுடியாதவனும் ஆய சிவன் சிறு பொருளா? வெள்ளிடைமலை என்பர். மலையாக இருந்தும் ஏன் காணமுடியவில்லை? மால் தன் பெயருக்கு ஏற்ப அறியா மயக்கத்தவன். ஒரு

முகம் உடையவன் காண்பான். நான்கு முகம் உடையவன் எவ்வாறு காணவல்லான்? என்று இருவர் தம்பெயர்களிலேயே காரணம் அமைந்து கிடப்பதாகத் திருவாசகம் குறிப்பிற் புலப் படுத்துகின்றது. செங்கண்ணன் ஆக இருந்தா லும் நெடுமால் ஆதலால் காணமுடியவில்லை யாம். நீ இப்பக்கம் செல், நான் அப்பக்கம் வருகின்றேன், ஆளுக்கு ஒரு வழியாகப் போய்த் தேடிப்பிடித்து விடலாம் என்பது போல, இரு வரும் அகழ்ந்து பறந்து முயன்றும் பேரொளிப் பிழம்பாக விளங்கும் அடிமுடியைக் காண மாட் டாதவர் ஆயினராம். அயனுலும் அரியாலும் சிவன் அறியப்படாமை நீதியாம். அடிமுடி தேடிய நிகழ்ச்சி பற்றித் திருக்கோவையுரை யாசிரியர் 'அன்னம் திருவடித் தாமரையையும் பன்றி சடைக் காட்டையும் தேடுதல் முறை எனவும் அவ்வாறு தேடாது தமது அகங்காரத் தினல் மாறுபட்டுப் பன்றி தாமரையும் அன்னம் காட்டையும் தேடுவதால் கண்டிலர்' எனவும் விளக்கம் தருவர்.

இரு தலைவர்களும் மேற்கண்டவாறு சொற் ருக்கம் பெற்றனர் எனின் ஏனைத் தேவரின் பரிசழிவு சொல்ல வேண்டுமா ? அடிமுடி தேடிய நிகழ்ச்சி அரிக்கும் அயனுக்கும் உரியது. கடலில் எழுந்த நஞ்சு கண்டு அஞ்சியது எல்லாத் தேவர்க்கும் பொது. நஞ்சுக்கு அஞ்சி அலறிய தனல் இருதலைவர் முதலாக எல்லாத் தேவர் களும் ஆற்றல் அற்றவர்கள் என்பது வெளிப் படையாகின்றது. அந்நஞ்சை அமுதம் போல் உண்டு அவர்களைக் காதலித்தான் சிவன் என்பதனல் அவன் முழுமுதல் என்பதும் வெளிப்படையாகின்றது.

1. நஞ்சம் அஞ்சி ஆவ எந்தாய் என்று அவிதா இடும் நம்மவரவரே
2. சிற்றுயிர்க் கிரங்கிக் காய்சின ஆல முண்டாய்
3. ஆலாலம் உண்டிலனேல் அன்றயன் மால் உள்ளிட்ட மேலாய தேவரெல் லாம் வீடுவர்காண் சாழலோ

இத்திருவாசக அடிகளிலும் சொற்குத்தல்கள் உள. மனிதர்கள்போல் நஞ்சைப் பார்த்ததும் வெருண்டு ஓட்டமிட்டவர்கள் தேவர்கள் ஆவார்களா ? இல்லை, நம்மவர்களாம். யாருக் காகச் சிவன் ஆலம் உண்டானெனின் நம் போன்ற சிற்றுயிர்க்காம்! நஞ்சாலம் சிவன் உண்ணுவிட்டால் மேன்மையானவர் என்று நினைத்து இறுமாந்திருக்கும் தேவரெல்லாம் செத்தொழிவராம்.

சிவபெருமான் எத்தேவர்க்கும் அரியவன் என்ற கருத்துக்கோள் திருவாசகம் முழுதும் பரவிக் கிடக்கின்றது. தேவர்கள் சிவனை வழுத்த வில்லையா? வணங்கவில்லையா ? பரவவில்லையா ?

"போற்றிசெய் கதிர்முடித் திருநெடு
மாலன்று
அடிமுடி யறியும் ஆதர வதனிற்
கடுமுரண் ஏனம் ஆகி முன்கலந்து
ஏழ்தலம் உருவ இடந்து பின்எய்த்து
ஊழி முதல்வ சயசய என்று
வழுத்தியும் காணு மலரடிஇணைகள்"

என்ற போற்றித் திருவகவலால், திருமால் முதற்கண் தன்முனைப்போடு பன்றி வடி வெடுத்துச் சிவனடியைக் காண முயன்று இளைத்தார் எனவும், பின் தன் முயற்சி பயன் படாதது கண்டு போற்றி வழுத்தினர் எனவும், அங்ஙனம் வழுத்திய பின்னும் மலரடிகளைக் காணமுடியவில்லை எனவும் அறிகின்றோம். தன் முனைப்புக்கு மலரடியைக் காட்டாதது பொருத்தம். தொழுதபின்னும் காட்டாதது பொருத்தமா ? என்பதனைச் சிந்திக்க வேண்டும். இறைவனை அடைதற்கு அன்பு நெறிதான் தக்கது என்று தெரிந்திருந்தும் முதற்கண் அதனையன்றோ பின்பற்றியிருக்க வேண்டும். மனித இனத்துக்கு இது தெரியாமல் இருக் கலாம், உயர்ந்த வானவர்க்குத் தெரியாது என்று சொல்ல முடியுமா ? ஒருவழி பயன் படாத போது, இன்னொரு வழியை மேற் கொள்வது வினைசெயல்வகை என்று ஆகுமே யன்றிப் பத்திநெறியாகாது.

தேவர்களை மணிவாசகர் ஏன் இடமெல்லாம் இழிவுபடுத்துகின்றார், இன்னச்சொல் தொடுக் கின்றார், இளிமை பேசுகின்றார் என்பதற்குப் புறத்தே காரணங்கள் தேட வேண்டுவதில்லை. திருவாசகத்திலேயே காரணப் பாடல்கள் உள. அடிமுடி தேடிய புராணத்தால் ஆணவக் குற்றமும், தக்கன் வேள்வியில் கலந்துகொண்ட தனல் சிவனை மதியாக்குற்றமும் வெளிப்படு கின்றன. இன்னெரு பெருங் குற்றமும் தேவ இனத்துக்கு உண்டு. தண்ணீர் உயருந்தொறும்

கரையை உயர்த்த வேண்டும். மரம் நீளுந் தோறும் அடியைக் கனப்படுத்த வேண்டும். உயர்ந்தோர் உயரவுயரத் தாழ்ந்தவர்களையும் கூட உயர்த்திக் கொண்டு செல்ல வேண்டும். இவ்வாறு கீழ்நிலையையும் சேர்த்து உயர்த்தா விட்டால்வெற்றுயர்வு வீழ்ச்சியைத் தந்துவிடும் இவ்வுயர்பண்பு தேவர்கள் பால் இல்லை

வாழ்த்துவதும் வானவர்கள்
தாம்வாழ்வான் மனம்நின்பால்
தாழ்த்துவதும் தாமுயர்ந்து
தம்மையெல்லாம் தொழவேண்டிச்
சூழ்த்துமது கரம்முரலும்
தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான்
யானுமுன்னைப் பரவுவனே

இத்திருவாசகம் வானவர்களை முழுத்தன் னலத்தார் என்று குற்றம் சாட்டுகின்றது. இக் குற்றம் தனித்தன்னலம் எனவும், பிறர்வழித் தன்னலம் எனவும் இருவகைப்படும். வானவர் கள் தாம் வாழ வேண்டும் என மொழியால் போற்றுகின்றார்கள். 'வேண்ட முழுதும் தருவோய் நீ' என மணிவாசகரும், 'வேண்டு வார்க்கு வேண்டுவதே ஈவான் கண்டாய்' என நாவுக்கரசரும் வழிகாட்டியிருத்தலின் தன்னல வேண்டுகோள் குற்றமாகாது என்று ஒருவாறு கொள்ளலாம். தாம் வாழவேண்டும் என்ற ஓரளவில் தேவர்களின் இறைவணக்கம் இருக்கு மாயின் மணிவாசகர் விட்டுவிடுவார். தாம் என்றும் உயர்ந்துகொண்டே செல்லவேண்டும் எனவும், பிறவுயிரெல்லாம் தமக்குக் கீழாக நின்று தொழுது கொண்டே இருக்க வேண்டும் எனவும், ஓர் அதிகாரவெறி தேவர்கட்கு இருப் பதைத் திருவாசகம் எடுத்துக் காட்டுகின்றது. மனமொழி மெய்களால் தொழும்போது, 'ஐந்துபேரறிவும் கண்களே கொள்ள' என்றபடி முக்கருவிக்கும் ஒரு நோக்கமே இருத்தல் வேண்டும். நாம் வானவரிடத்துக் காண்பது என்ன? மொழியால் இறைவனைப் போற்றும் போது தாம் வாழ வேண்டும் என்பது அவர் களின் நோக்கம். மொழியிலும் சிறந்த மனக் கருவியால் இறைவனைப் பணியும்போது எல்லா உயிரும் தமக்கு அடிபணிந்து தம் உயர்வுக் காகப் பாடுபட வேண்டும் என்பது அவர் தம் நோக்கம். வழிபாட்டில் மொழியொன்றும், மனம் ஒன்றும் வேண்டும் இப்போக்கு வஞ்சகம் ஆகும். இறைவனைத் தாம் வழிபடுவதை விடுத்து, பிறவுயிரெல்லாம் தம்மை வழிபட வேண்டும் என்று நினைப்பதும், சிவன் அதற்கு உறுதுணையாக இருக்கவேண்டும் என்று பரவு வதும் கயமையினும் கயமை.

"தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்"

என்றார் திருவள்ளுவர். இக்குறளின் விரிவே திருவாசகத்தின் ஒரு பகுதி என்று கொள்ள லாம். திருவாசகப்படி ஆணவம், மதியாமை, தன்னல அதிகாரம் என்ற முக்குற்றங்கள் உடையவர்களே தேவர்கள் ஆதலின், இச் சிறுமையுயிர்கட்கு இறைவன் முன்வந்து காட்சி யளிப்பான் என்று எதிர்பார்க்க முடியுமா? 'கனவிலும் தேவர்க்கு அரியாய் போற்றி' கனவேயும் தேவர்கள் காண்பரிய கனை கழலோன்' என்று தேவர்கட்கு இறைவனது முற்றருமை பேசப்படுகின்றது.

" புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க்
கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்"

என்ற பிறப்புப் பட்டியலால் மணிவாசகர் தேவனாகப் பிறந்த அருஞ்செய்தியையும் நாம் அறிகின்றோம். எனவே தேவரைப் பற்றி அவர் பாடும்போது அப்பிறப்பின் அனுபவ அறிவும் அவர்க்கு உண்டு என்பதனை நாம் உடம்பொடு புணர்த்தலாகக் கொள்ள வேண்டும்.

இறையருள் பெதற்குத் தேவப் பிறப்பு முற்றும் இடையூறாகும். அப்பிறப்புக்கு இறைவன் ஒருநாளும் காட்சியளியான். அவன் வெறுப்புக்கு உள்ளான பிறப்பு வானவப் பிறப்பு. வெறுப்புக்கு உள்ளான உலகம் வானு லகம். அவன் விரும்பும் பிறப்பு மனிதப் பிறப்பு; விரும்பும் உலகம் மண்ணுலகம் என்று திரு வாசகம் தெளிவு செய்திருக்கின்றது. தேவர் களின் இரு தலைவர்களாகிய திருமாலும் நான் முகனுமே மண்ணுலகிற் பிறக்க ஆசைப் பட்டார்கள் எனின், அவர்களும் அவர்களைச் சார்ந்த பொதுத் தேவர்களும் தேவப் பிறப்பில் இறைவனால் என்னென்ன அவதிக்கு உள்ளானார்களோ?

'பண்பட்ட தில்லைப்
பதிக்கரசைப் பரவாதே
எண்பட்ட தக்கன் அருக்கன்
எச்சன் இந்துவனல்
விண்பட்ட பூதப் படை
வீர பத்திரராற்
புண்பட்ட வாபாடிப்
பூவல்லி கொய்யாமோ'.

—திருவாசகம்

# இளம் பெருமான்

தருமையாதீனப் புலவர், சித்தாந்தக் கலைமணி
மகாவித்துவான் திரு. அருணை வடிவேல்
முதலியார் அவர்கள், தருமபுரம்

'பெருமான்' என்னும் தமிழ்ச் சொல் 'பெருமை யுடையவன்' எனப் பொருள் தந்து, யாவரினும் பெருமையுடைய இறைவனைக் குறிக்கும். எனினும், இறைவனை நாம் பல்வேறு உருவில் காண்பதால் அவ்வேறுபாட்டிற்கு ஏற்ப அவனை 'சிவபெருமான், விநாயகப் பெருமான், முருகப் பெருமான்' என்பன போலச் சிறப்பாகக் குறிப் பிட்டு வழங்குகின்றோம்.

பெருமான் என்பதுபோல, 'அடிகள்' என்ற ஒரு சொல்லும் தமிழில் உண்டு. இது, சுவாமி என்னும் வடசொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல். இரண்டிற்கும் 'தலைவன்' என்பதே பொருள். எனினும் தலைவன் என்பது ஆண் பாலாருள் ஒருவரையே குறிக்கும். பெண்பாலாருள் ஒருவரையே குறிக்க வேண்டின் 'தலைவி' எனக் கூறல் வேண்டும். 'அடிகள், 'சுவாமி' என்னும் இரு சொல்லும் ஆண்பாலார், பெண்பாலார் இருபாலருக்கும் பொதுவே. ஆகவே, அவ்விரு சொற்களும் 'தலைவன் தலைவி' என்னும் சொற்களைவிட உயர்ந்து நிற்கின்றன. அதனால் அவை இறைவனையும், இறைவனாகவே எண் ணத்தக்க பெரியோரையும் குறிக்கும் சொற்க ளாய்ப் பயன்படுகின்றன. இனி, 'அடிகள்' என்பதை இறைவனுக்கே உரியதாக்கும்போது அதனைப் 'பெருமான்' என்பதனுடன் இணைத்து, 'பெருமானடிகள்' என வழங்குவர். இதனை இறையனார் அகப்பொருள் உரை, தேவாரத் திருமுறை முதலியவற்றிற் காணலாம்.

பதினொன்றாந் திருமுறையில் உள்ள பல பிரபந்தங்களுள் ஒன்றாகிய சிவபெருமான் திரு மும்மணிக்கோவையைப் பாடிய ஆசிரியர் பெயர் 'இளம் பெருமானடிகள்' எனக் காணப் படுகின்றது. 'பெருமானடிகள்' என்பது கடவுட் பெயராய் இருத்தலால் 'இளம் பெருமானடிகள்' என்பதும் ஒரு கடவுளின் பெயராயிருந்தே அவருக்கு இடப்பட்டது என்பது புலனாகின்றது. அதில் 'அடிகள்' என்பது அவ்வாசிரியரது பெருமை குறித்து வந்த சிறப்புப் பெயர் எனக் கொள்ளினும், இளம் பெருமான் என்பது ஒரு கடவுளின் பெயரே என்பதில் ஐயமில்லை. அங்ஙனமாயின், இளம் பெருமான் என்பது எந்தக் கடவுளின் பெயர் என்னும் ஐயம் எழவே செய்கின்றது. ஏனெனில் அப்பெயரால் ஒரு கடவுள் சொல்லப்படுவதாக இன்று நமக்குத் தெரியவில்லை.

'இளம் பெருமான்' என்பதற்கு, 'இளமை யான கடவுள்-குழந்தைக் கடவுள்' என்பது பொருளாகின்றது. எந்தக் கடவுளை நாம் இளமைப் பருவத்தினனாக, குழந்தையாக அறி கின்றோம், காண்கின்றோம்? முருகப் பெருமானையே நாம் அவ்வாறு அறிகின்றோம், காண்கின்றோம். 'முருகு' என்னும் சொல்லுக்கே 'இளமை' என்பதுதான் பொருள் என்பதையும் நாம் அறிவோம். முருகப்பெருமானது இளமைக் கோலத்தை வியவாத நூல்கள் இல்லை. அப் பெருமானைத் தொல்காப்பியம், 'சேயோன்' என்கின்றது. இது கரியோனாதல் பற்றி 'மாயோன்' என்றது போல, 'செம்மை' என்னும் நிறம் பற்றிக் கூறப்பட்டது என்பர். அவ்வாறு யின், 'மாயோன்' என்பது, 'மாய்' என வருத லின்றி, மாயோன் என்றே எவ்விடத்தும் வருதல்போல, இது சேய் என ஓரிடத்தும் வருதலின்றி, சேயோன் என்றே எவ்விடத்தும் வருதல் வேண்டும். ஆனால், சேயோன் என்பது சேய் எனப் பலவிடத்தும் வரப் பார்க்கின்றோம்.

''எய்யா நல்லிசைச் செவ்வேல் சேஎய்''
''அலந்தேர்க் களிக்கும் பொலம்பூண் சேஎய்''

என்பன திருமுருகாற்றுப்படை வரிகள். எனவே, முருகன் 'சேய்' என்றும், 'சேயோன்' என்றும் கூறப்படுதல் குழந்தையாதல் பற்றியே என்பது தெளிவாகின்றது. இனி 'சேய்' என்பது வேறு; சேயோன் என்பது வேறு; இரண்டிற்கும் தம்முள்

தொடர்பில்லை என வாதிப்பின் அப்பொழுதும் சேய் என்பது நிலைபெற்று நிற்குமாதலால், முருகன் குழந்தை வடிவினன் என்னும் உண்மைக்குத் தடை ஒன்றும் இல்லை.

முருகன் குழந்தையாயின், யாருடைய குழந்தை என்னும் வினவிற்கு,

''ஆல்கெழு கடவுட் புதல்வ''
''மலைமகள் மகனே''
''வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ''
''இழையணி சிறப்பிற் பழையோள் குழவி''

என்னும் முருகாற்றுப்படையின் வரிகள் விடை பகரும். எனவே, சிவபெருமான் முதுபெருமான் ஆதலின் அப்பெருமான் மகனாகிய முருகன், இளம்பெருமான் ஆகின்றான். அதுபற்றி முருகன் முற்காலத்தில் 'இளம்பெருமான்' என அழைக்கப்பட்டான் என உணரலாம். எனவே இப்பெருமான் பெயரே மேற்குறித்த திருமும்மணிக் கோவையின் ஆசிரியருக்குப் பெயராய் அமைந்தமை தெளிவாகும்.

''மகனறிவு தந்தையறிவு'' என்பது போல், தந்தையும் மகனும், அறிவிலும் குணத்திலும், ஏன் உருவ அமைப்பிலுங்கூடப் பெரும்பாலும் ஒன்றுபட்டிருத்தலை உலகத்தில் காண்கின்றோம். அங்ஙனமாயபொழுது, கடவுளரிடத்தில் இவ்விருவரும் ஒருவரேயாதல் சொல்ல வேண்டுமோ!

இந்தியநாட்டில் சமயங்களை ஆறுகக் கூறுதல் பண்டு தொட்டு வரும் மரபு. ஆறு சமயங்களும் அக்காலத்தில் சிவபெருமானே முதற் கடவுள் என்னும் உண்மையில் இணங்கியிருந்தனவேயன்றிப் பிணங்கி யிருக்கவில்லை. அதனால் அவையனைத்தும் ஒரு சமயத்தின் பகுதிகளாய் விளங்கினவன்றித் தனித்தனி மதங்களாயிருக்கவில்லை. எனினும் பிற்காலத்து எழுந்த பிணக்குகளால் அவை வேறு மதங்களாயின. அவற்றுள் குறிப்பிடத்தக்கது வைணவ மதம். கௌமாரமதமும் அவ்வாறு வேறொரு மதமாகும் நிலை உளதாயிற்று. அதனை நீக்கி ஒற்றுமையை நிலைநாட்டியவர் கந்தபுராணம் பாடிய கச்சியப்ப சிவாசாரியார். வடமொழி தென்மொழி என்னும் இருமொழிப் புலமையாலும் முருகனது திருவருட் பேற்றாலும் இந்த அருந்தொண்டினைச் செய்தமைக்குச் சிவபத்தி, முருகபக்தி யுடையோர் அனைவரும் அவருக்குப் பெரிதும் கடமைப் பட்டவராவர். அவரது அருந்தொண்டினாலேயே சிவபெருமான் ஐம்முகச்சிவனாயின், முருகன் அறுமுகச் சிவன் என்னும் ஒற்றுமை உணர்வு உளதாயிற்று.

சிவபெருமானுக்கும் முருகப்பெருமானுக்கும் வேறுபாடில்லை; சிவபெருமான்தான் முருகப் பெருமான் என்பதைக் கச்சியப்ப சிவாச்சாரியார் வலியுறுத்தும் இடங்கள் சில காணத்தக்கன தேவர்கள் சிவபெருமானை வேண்டிக் கொள்ளும் போது,

''வேதமும் கடந்து நின்ற
விமல ஓர் குமரன் றன்னை
நீதரல் வேண்டும் நின்பால்
நின்னையே நிகர்க்க''

என வேண்டினர் என்கின்றார். அங்ஙனமே அளிக்கப்பெற்ற முருகன் அறுமுகம் உடையவனாய் விளங்கியதைத் தெரிவிக்குமிடத்தில்,

''ஏவர்தம் பாலும் இன்றி
எல்லைதீர் அமலற் குள்ள
மூவிரு குணனும் சேய்க்கு
முகங்களாய் வந்த என்னப்
பூவியல் சரவ ணத்தண்
பொய்கையில் வைகும் ஐயன்
ஆவிகள் அருளு மாற்றால்
அறுமுகங் கொண்டா னன்றே'' (1)

எனக் கூறுகின்றார். இன்னும்,

''மறைகளின் முடிவால் வாக்கால்
மனத்தினால் அளக்கொ ணாமல்
நிறைவுடன் யாண்டு மாகி
நின்றிடும் நிமல மூர்த்தி
அறுமுக உருவாய்த் தோன்றி
அருளொடு சரவ ணத்தின்
வெறிகமழ் கமலப் போதின்
வீற்றிருந் தருளி னானே'' (2)

என்றும் கூறினார். மற்றும், 'குழந்தை முருகன் நீர்வடிவான சரவணப் பொய்கைச் செந்தாமரை மலரின்மேல் வீற்றிருந்தமை, தன் தந்தையாகிய சிவபெருமான் திருமாலின் இருதய கமலத்தில் வீற்றிருப்பது போலவும், விராட் புருடனுக்கு இருதயத்தானமாகிய தில்லையில் விளங்குவது போலவும் உள்ளது' எனவும் 'தாமரை இலைகளில் தண்ணீர்த் துளிகள்

நெருங்கித் தோன்ற, பாசிகளுக்கு இடையில் உள்ள பல செந்தாமரை மலர்களிற் சிறந்த ஒரு தாமரை மலரில் முருகன், விண்மீன் கூட்டமும் மேகமும் பொருந்திய வானத்தில் பல சூரியர் நடுவில் உள்ள ஒரு சூரிய மண்டலத்தில் சிவன் வீற்றிருப்பதுபோல வீற்றிருந்தான்' எனவும், சுற்றிலும் மரங்களும், பறவைகளும், விலங்குகளும் நிறைந்திருக்க, நடுவில் தாமரை மலரில் வீற்றிருந்த முருகன் படைப்புக் காலத்தில் அனைத்துயிர்களையும் படைத்துத் தாமரை மலரில் வீற்றிருக்கின்ற சிவபெருமான் போல விளங்கினுன் எனவும் கூறினர். மேலும் சிவபெருமான் முருகன் பெருமையை உமா தேவிக்குக் கூறும்பொழுது,

"நன்முகம் இருமூன் றுண்டால்
நமக்கு; அவைதாமே கந்தன்
தன்முக மாகி உற்ற"
"ஆதலின் நமது சக்தி
அறுமுகன்; அவனும் நாமும்
பேதக மன்றுல்; நம்போல்
பிரிவிலன் யாண்டும் நின்றுன்"

என விளக்கியதாகக் கூறினர். வீரவாகு தேவர் சூரபதுமனுக்கு முருகனைப் பற்றிக் கூறுமிடத்திலும்,


"ஈச னேஅவன் ஆடலால்
மதலை யாயினன் காண்
ஆசி லாஅவன் அறுமுகத்
துண்மையால் அறிநீ;
பேசில் ஆங்கவன் பரனெடு
பேதக னல்லன்;
தேசு லாஅகன் மணியிடைக்
கதிர்வரு திறம்போல்"

எனக் கூறியிருத்தல் அறியத்தக்கது. இன்னேரன்னவை இன்னும் பல.


இவற்ருல், சிவபெருமான் முதுபெருமானுயின், அப்பெருமான் மகனுகிய முருகன் இளம் பெருமானுதல் இனிது விளங்குகின்றது. முருகன் என்றும் இளையோன் ஆதலை,

"குன்றம் எறிந்தாய்; குரைகடலில் சூர்
தடிந்தாய்
புன்றலைய பூதப் பொருபடையாய்;
என்றும்
இளையாய்; அழகியாய்; ஏறூர்ந்தான்
ஏறே;
உளையாய் என் உள்ளத் துறை"

என்னும் வெண்பாவினுல் அறியலாம். ஓர் இல்லத்தில் முதியோரால் பயன்பெறுதலைவிட, இளையோரால் பயன் பெறுதல் மிகவும் எளிது. அதுபோலவே முதுபெருமானுகிய சிவபெருமானது, அருளினும், இளம்பெருமானுகிய முருகப்பெருமானது அருளால் நலங்கள் பலவும் பெறுதல் எளிது என்பது, அனுபவத்திலும் விளங்கிக் கிடப்பது. ஆகவே, அவ்விளம் பெருமானிடத்து அனைவரும் அன்பு பூண்டு ஒழுகின் அனைத்து நலன்களும் பெறலாகும்.



தாம்பரத்திற்கு அருகில் உள்ள நந்திபுரம் ("நந்திகேச்சுரம்") என்னும் தேவார வைப்புத் தலத்தில் உள்ள நந்திகேசுவரர் கோயிலின் சுவாமி - அம்பாள் சந்நிதிகளின் விமானம் — கோபுரம் ஆகியவற்றின் தோற்றம்.



# சண்டேசர்க்கு அருளும் தண்ணளியினர்

வண்டு சேர்பொழில் சூழ்மங் கலக்குடி
விண்ட தாதையைத் தாளற வீசிய
சண்ட நாயக னுக்கருள் செய்தவன்
துண்ட மாமதி சூடிய சோதியே.

—திருநாவுக்கரசர்

**முன்னுரை :**

சிவாலயங்களிற் பஞ்சமூர்த்திகள் புறப்பாடு அல்லது திருவீதி உலா நிகழும்போது, அவர் களுள் ஒருவராக விளங்குபவர் சண்டேசர் என்பது யாவரும் அறிந்ததொன்று. சண்டேசர், சண்டீசர், சண்டேசுவரர், சண்டிகேசர், சண்டேசுவர நாயனர் எனப் பலவகைகளில் இவருக்குப் பெயர்கள் வழங்கும்.

எல்லாச் சிவாலயங்களிலும் இவருக்குத் தனியே ஒரு சிறு சந்நிதி உண்டு. அது கருவறைக்குப் புறம்பே, அபிடேகத் தீர்த்தம் விழும் கோமுகியை அடுத்து அருகில் அமைக்கப் பட்டிருக்கும். கோயில்களுக்குச் சென்று நாம் செய்யும் சிவதரிசனமும் வழிபாடும், அவற்றின் இறுதியில் நாம் செய்தற்குரிய சண்டேசுவரர் தரிசனத்துடனும் பிரார்த்தனையுடனுமே நிறைவு பெறுகிறது. சண்டேசுவரரைத் தரி சனம் செய்து முடிக்காதபோது, சிவதரிசனம் நிறைவு பெருமையோடு, அதன் பயனும் நமக்குச் சித்திப்பதில்லை என்பது பெரியோர்கள் துணிபு.

திருக்கோயிலுக்குச் சென்று சிவபிரானை வழிபடும் அன்பர்கள், கோயிலை முறையே வலம் வந்து, ஒவ்வொரு மூர்த்தியையும் வணங்கி முடித்துக்கொண்ட பிறகு, சண்டேசுவரர் கோயிலை அடைதல் வேண்டும். கோயிலில் வழிபாட்டின் போதுபெற்ற பூமாலை பரிவட்டம் முதலிய சிவ நின்மாலியப் பொருள்களைச் சண்டேசுவரர் சந்நிதியிற் சேர்த்து, சிவ தரிசனப் பலனை அளித்தருளல் வேண்டும் என்று அவரைப் பிரார்த்தித்து, அங்குப்பெற்ற திரு நீற்றை அணிந்து கொள்ளல் வேண்டும் என்பது சமய நூல்களின் விதி.

சிவபிரானுக்குச் சார்த்திய மலர்மாலைகள், ஆடை அணிகலன்கள் முதலியனவும், நிவே தனம் செய்த பிரசாதங்கள் ஆகிய உணவு வகைகளும், சிவ நின்மாலியங்கள் என வழங்கப்படும். சிவபிரானல் ஏற்றுக்கொள்ளப் பட்டு, நின்மலம் (அழுக்கின்மை, தூய்மை) அடைந்த பொருள்கள், சிவ நின்மாலியங்கள் ஆகும்.

சிவ நின்மாலியங்களைச் சண்டேசுவரர்பால் சேர்ப்பித்தல் வேண்டும் என்று பெரியவர்கள் கூறும் நுட்பம் அறியாமையால், ஒருசில மக்கள் கோயில்களில் சண்டேச மூர்த்தியின் முன்பு தமது ஆடைகளின் நூல் இழைகளை எடுத்துப் போடும் சிவாபராதச் செயல் புரிகின்றனர். அது பெரும் தவறு. சிவபிரானுக்கு அணிவித்து நின்மாலியமான ஆடைகளையும், மாலைகளையும் மட்டுமே, சண்டேசர்க்குச் சாத்துதல் வேண் டும். சண்டேசர் இடையருத சிவத்தியானத்தில் ஈடுபட்டிருப்பவராதலின், அவருக்கு நம் வருகை யையும், வேண்டுகோளையும் தெரிவிக்கும் வகை யில், ஓர் அறிகுறியாகவே, நாம் அவர் தம் திருமுன் சென்று நம் கைகளை மெல்லெனத் தட்டுகின்ரேம்.

**திருவானைக்காப் புராணம் :**

சிவபூசையின் இறுதியில் நம்மாற் பூசிக்கப் பெற்று, சிவபிரானல் ஏற்றுக் கொள்ளப்பட்ட அன்னம் (உணவு) பானீயம் (நீர்) முதலியனவும், தாம்பூலம் மாலை சந்தனம் ஆகிய நின்மாலி யங்களையும் ஏற்றுக் கொண்டு, நமக்குச் சிவ பூசையின் பயனைக் கொடுக்கும் அதிகார முடையவர் சண்டேசுவரரேயாவர். இவ்வுண் மையினைக் கச்சியப்ப முனிவர்,

பொன்னங் கடுக்கை முடிவேய்ந்த
புனிதர்க் கமைக்கும் பொருளன்றி
மின்னும் கலன்ஆ டைகள் பிறவும்
வேறு தனக்கென் றமையாமே

மன்னும் தலைவன் பூசனையில்
மல்கும் பயனை அடியார்கள்
துன்னும் படிபூ சனைகொள்ளும்
தூயோன் அடித்தா மரைதொழுவாம்.

எனவரும் திருவானைக்காப் புராணத் துதிப் பாடலிற் குறிப்பிட்டிருத்தல் கொண்டு உணர லாம். சண்டேசர்பூசை செய்யாத வழி, சிவபூசை செய்தும் அதன் பயனை நாம் எய்து தல் இயலாது. இது.

"சண்டனை அர்ச்சித்தவரே
சம்புவை அர்ச்சித்த பயன்,
கொண்டிடுவர் மற்றையர்
கொள்ளார்"

எனவரும் சைவசமய நெறித் திருமொழியால் உணரப்படும். அது பற்றியே சைவ சித்தாந் தத்தில் "சண்டேசுவரரை எவ்விடத்தும் எப் போதும் பூசிக்க" என்னும் நியமம் உள்ளது.

## கல்வெட்டுச் செய்யுள் :

சிவாலயங்களில் வரவு செலவு கணக்குகளைச் சண்டேசுவரர் பெயரினுலேயே எழுதுவதுதான், பண்டைக் காலத்து மரபு முறையாக இருந்து வந்தது. இம் மரபுநெறிச் செய்தியினைப் பின் வரும் கல்வெட்டு வெண்பாப் பாடல் விளக் குதல் காணலாம்.

சண்டீச் சுரன்ஓலை சாகரஞ்சூழ் வையத்தீர்
கண்டீச் சுரன்கருமம் ஆராய்க! — பண்டே
அறஞ்செய்தான் செய்தான் அறங்காத்
தான் பாதம்
திறம்பாமைச் சென்னிமேல் வைத்து.

"கடல் சூழ்ந்த உலகில் வாழும் மக்களே! நமக்கு முற்பட்டுப் பண்டைக்காலத்தில் அறத் தைச் செய்தவன், செய்வித்தவன், செய்த அறத்தைப் பாதுகாத்தவன் முதலியவர் களுடைய பாதங்களைப் பிறழ்வின்றி உங்கள் தலைமேற்கொண்டு போற்றி, இறைவனின் திருப் பணிகளை முறைப்படி ஆராய்ந்து செய்து வருவீர்களாக! இது சண்டேசுவரரின் ஆணை ஓலை (கட்டளை)" என்பது மேற்குறித்த கல்வெட்டுப் பாடலின் பொருள்.

இக்கல்வெட்டுப் பாடல், மதுராந்தகம் தாலுக்கா, பெரும்பேறு கிராமம் தான் தோன்றி ஈசுவரர் கோயிலின் முன்மண்டபத்துத் தெற்குச் சுவரிலும் (1); தஞ்சை மாவட்டம் தஞ்சாவூர்த் தாலுக்கா திருக்களாவுடைய மகா தேவர் கோயிலின் வடபுறச் சுவரிலும் (2); தென்னுற்காடு மாவட்டம் விழுப்புரம் தாலுக்கா திருவாமாத்தூர் அபிராமேசுவரர் கோயிலின் முன்பிராகாரம் தென்புறச் சுவரி லும் (3); புதுக்கோட்டை திருமெய்யம் தாலுக்கா கள்ளம்பட்டி மதீசுவரர் கோயிலின் முன்புள்ள ஒரு கல்லிலுமாகப் பல தலங்களில் செதுக்கப்பெற்றுள்ளது.

## அரனுர் மகனுர் :

சண்டேசுவரர் சிவபிரானுக்கு மகன்மை முறையிமையினராக ஆட்கொள்ளப் பெற்றவர் என்பதனை,

" வந்து மிகைசெய் தாதைதாள்
மழுவால் துணித்த மறைச்சிறுவர்
அந்த உடம்பு தன்னுடனே
அரனுர் மகனுர் ஆயினர்."

எனவரும் பெரியபுராணச் செய்யுள் விளக்கும். சிவபிரானுக்குப் பிள்ளையாகும் பெருமை பெற்றமை பற்றியே, மூத்த பிள்ளையார் (விநாயகர்), இளைய பிள்ளையார் (முருகன்), காழிப்பிள்ளையார் (சம்பந்தர்) என வழங்கும் வரிசை முறையில் வைத்து, சேய்ஞலூர்ப் பிள்ளையார் எனச் சண்டேசுவரர் வழங்கப் பெறுகின்றூர்.

## தொண்டர் நாயகர்

சண்டேசுவரரே சிவனடியார்கள் அனைவருக் கும் தலைமை உடையவர் ஆவர். தொண்டர்களுக் கெல்லாம் தலைவராக விளங்கும் சிறப்புடைமை பற்றிச் சண்டேசுவரர்க்குத் 'தொண்டர் நாயகம்' என்னும் ஒரு பெயர் உண்டு.

தாதையைத் தாளறவீசிய
சண்டிக்கிவ் அண்டத்தொடுமுடனே
பூதலத் தோரும் வணங்கப்
பொற்கோயிலும் போனகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும்
நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

என்பது திருவிசைப்பாத் திருப்பல்லாண்டுப் பாடல்.

இங்ஙனம் அடியார்களுக்கெல்லாம் தலைவராகத் திகழ்தல் பற்றியே, அடியார்களின் சார்பாளர் (பிரதிநிதி) என்ற முறையில், இறைவனின் திருவீதியுலாவில் சண்டேசுவரரும் கலந்து எழுந்தருளிச் சிறப்பிக்கின்றார்.

## சண்டேசர் வரலாறு

சோழ நாட்டில் மண்ணியாற்றின் தென்கரையில், சேய்ஞலூர் என்ற ஒரு சிவத்தலம்உள்ளது. சேய் ஆகிய முருகன், சிவபிரானை வழிபட்ட நல்ல ஊர் ஆதலின் **சேய்ஞலூர்** (சேய்+நல்+ஊர்) எனப் பெயர் அமைந்தது.

அஃது அந்தணர்கள் நிறைந்து வாழும் ஊர்! சோழ அரசர்கள் முடிசூடிக் கொள்ளும் ஐந்து (காவிரிப்பூம்பட்டினம், உறையூர், திருவாரூர் சேய்ஞலூர், கருவூர்) தலைநகரங்களுள், ஒன்றாகத் திகழ்வது அது. அதன்கண் காசிப கோத்திரத்தில் **எச்சதத்தன்** என்ற மறையவன் ஒருவன் இருந்தான். "அருமை மணியும் அளித்ததுவே நஞ்சும் அளிக்கும் அரவுபோல், இருமை வினைக்கும் ஒருவடிவாகியவன் அவன்", அவனுடைய மனைவி **பவித்திரை** என்பவள். இவ்விருவருக்கும் **விசாரசருமர்** என்னும் மைந்தர் ஒருவர் வந்து உதயஞ்செய்தார். "முந்தையறிவின் தொடர்ச்சியினால், முகைத்த மலரின் வாசம்போல்" ஐந்தாண்டு நிரம்பும் முன்னரே, அவர் சந்தமறைகளும், ஆகமங்களும் தகவுற உணர்ந்து தெளிந்தார்.

ஒருநாள் அச்சிறிய பெருந்தகையார், தாம் பள்ளிக்குச் செல்லுங்கால், வழியில் ஓர் இடையன் பசுநிரைகளை அடித்துக் கொடுமை செய்ததனைக் கண்டார். உள்ளம் வருந்தினார். பசுக்களின் அருமை பெருமைகளை அவனுக்கு எடுத்து அறிவுறுத்தி, "யானே இனி இந்நிரை மேய்ப்பேன்" என்று கூறி, அப்பசு நிரைகளை மேய்த்து வரத் தலைப் பட்டார்.

பசுக்கள் நன்கு புல்மேய்ந்து, மடிபெருகி முலைசுரந்து பால் கறந்து வந்தன. சேய்ஞலூர் மறையவர்கள் அனைவரும் மகிழ்ந்தனர். சில நாட்கள் சென்றன. பசுக்களுக்கு விசாரசருமர் பால் மிகவும் அன்பும் ஈடுபாடும் பெருகின. அவரைக்கண்டாலே, அவைகள் மிகவும் களிகொண்டு, அவர்தம் அருகு சார்ந்து, உருகி நின்றன. அன்பின் மிகுதியால் கனைத்துச் சுரந்து, கறவாமே பால்பெருகிப் பொழிந்து நின்றன. பசுக்கள் பால் பொழிவது கண்ட விசாரசருமர்க்கு, அஃது இறைவனுக்குத் திருமஞ்சனம் செய்யப் பயன்படுமே என்னும் குறிப்புத் தோன்றியது. "முன்னை அர்ச்சனையின் அளவில் தொடர்ச்சியால்" மூளும் அன்பு பெருகிய விசாரசருமர், மண்ணி ஆற்று மணலில் சிவலிங்கமும், சிவாலயமும் கோபுரமும் திருச்சுற்றாலயம் முதலியனவும் வகுத்து, விளையாட்டே போலச் சிவாகம முறைப்படி சிவ பூசையில் ஈடுபடத்துவங்கிவிட்டார். சண்டேசர் ஆன்நிரை மேய்த்து ஆத்திமரத்தின் கீழ்ச் சிவலிங்கம் தாபித்துப் பூசை செய்த தலமே **திருவாப்பாடி** என இன்றும் விளங்கி வருகின்றது.

சிவபூசை செய்யுங்கால், இவர் திருமஞ்சனம் ஆட்டும் செயலின் இயல்புணராத சேய்ஞலூர் மறையவர்கள், இவர் பசும்பாலைக் கறந்து வறிதே மண்ணிற் கவிழ்த்து வீண் ஆக்குகின்றார் என, எச்சதத்தன்பாற் சென்று குறை கூறினர். எச்சதத்தன் அதுகேட்டுச் சினந்து வந்து, அங்கு இருந்த ஒரு குரா மரத்தின் மீது ஏறி ஒளித்திருந்து யாவற்றையும் கண்டான். விசாரசருமர் சிவபூசை செய்யும் போது, திருமஞ்சனக் குடப்பாலைக் காலால் இடறிச் சிந்தினான். அது கண்ணுற்ற விசாரசருமர் சிவத்தியானத்தில் அழுந்தித் தம்மை மறந்திருந்த நிலையில் அருகே கிடந்த ஒரு கோலை எடுத்து எறிந்தார். அக்கோலே அருளால் மழுவாக மாறி, எச்சதத்தனுடைய இரு கால்களையும் வெட்டி அவனைக் கீழே விழும்படி செய்தது. விசாரசருமர் பின்னரும் சிவவழிபாட்டிலேயே மனம் ஒன்றி நின்றார்.

அந்நிலையில் சிவபெருமான் வெளிப்பட்டு, பக்தி முதிர்ந்த பாலகனார் ஆகிய விசாரசருமர்க்குக் காட்சி கொடுத்தார். "நம் பொருட்டால் ஈன்ற தாதை விழ எறிந்தாய். அடுத்த தாதை இனியுனக்குநாம்" என்று அருளிச் செய்தார். கருணையினால் அவரை அணைத்துத் தழுவி உச்சி மோந்து மகிழ்ந்தார். சிவபிரானின் திருமலர்க் கைகளால் தீண்டப் பெற்றமையால், விசாரசருமரின் மாயாமல யாக்கை, சிவமயமாகி ஒளிவடிவம் பெற்றது. அவர் திருவருளில் மூழ்கித் திளைத்தார்.

சிவபிரான் அவரைத் தம் தொண்டர்களுக்கெல்லாம் தலைவராக ஆக்கினர். "எமக்கு நிவேதனம் செய்த பொருள்களும், யாம் உடுத்த ஆடைகளும், சூடிய மாலை முதலிய அணிகலன்களும் ஆகிய அனைத்தும், இனி நினக்கே உரிமையுடையன. யாம் நினக்குச் சண்டிசன் என்னும் பதம் தந்தோம்'' என்று கூறி, அதற்கு அடையாளமாகத் தமது சடைமுடியினின்று கொன்றை மாலையினை எடுத்து விசாரசருமர்க்குச் சூட்டித் திருவருள் புரிந்தார். அங்ஙனம் விசாரசருமர்க்குச் சிவபிரான் சண்டேசப் பதம் அளித்து அனுக்கிரகம் புரிந்த நிலையே "சண்டேச அனுக்கிரகமூர்த்தம்'' எனப்படும்.

## காவியமும் ஓவியமும் :

இம்மூர்த்தத்தின் இயல்பினை விளக்கும் அழகிய சிற்பங்கள் கங்கைகொண்டசோழபுரம் கோயில், சிதம்பரம் நடராசர் கோயில், காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயில் முதலியபல இடங்களிற் காணப்படுகின்றன. இவற்றுளெல்லாம் கங்கைகொண்ட சோழபுரம் கோயிற் சிற்பமே, கண்கவர் கவினும் கவர்ச்சியும் மிக்குடையதாகத் திகழ்கின்றது.

காவியமும் ஓவியமும் தம்முள் மிகவும் தொடர்புடையன. 'கவிஞனும் ஓவியனும் தமக்குள் ஒருவருக்கொருவர் உள்ளுணர்ச்சிப் பெருக்கம் ஊட்டிக்கொள்ளுகின்றனர்' ("The poet and the painter influence and inspire one another") என்று அறிஞர்கள் கூறுவதுண்டு. கவிஞர்களின் கவிதைக் கருத்துக்களுக்கு ஓவியர்கள் சித்திரம் தீட்டுதலும், ஓவியர்கள் தீட்டிய சித்திரங்களை வியந்து கவிஞர்கள் கவிதை இயற்றுதலும் இயல்பேயாம். மேலைநாட்டு இலக்கியங்களில் மைக்கேல் ஏஞ்சலோ, ரஃபேல் என்னும் புகழ் மிகுந்த ஓவியர்களின் விளைவைக் காணலாம். அம்முறையில் கங்கைகொண்ட சோழபுரம் கோயிற் சிற்பங்களைச் சேக்கிழார் சுவாமிகள் பலகாற் கண்டு மகிழ்ந்து வியந்திருத்தல் கூடும். அதன் பயனாகவே,

"அண்டர் பிரானும் தொண்டர் தமக்
கதிப னாக்கி அனைத்தும்நாம்
உண்ட கலமும் உடுப்பனவும்
சூடு வனவும் உனக்காகச்
சண்டீசனுமாம் பதம் தந்தோம்
என்றங்கவர் பொற்றட முடிக்குத்
துண்ட மதிசேர் சடைக் கொன்றை
மாலை வாங்கிச் சூட்டினார்''

என்னும் பெரியபுராணச் செய்யுளைச் சேக்கிழார் அருளிச் செய்தனராதல் கூடும்.

## முடிவுரை :

தஞ்சைப் பெரியகோயிலைக் கட்டிய முதலாம் இராசராச சோழனின் (கி.பி. 985—1014) புதல்வன் ஆகிய முதலாம் இராசேந்திர சோழன் (கி.பி. 1012—1014), தன் வடநாட்டுப் போர்களின் வெற்றிக்கு அறிகுறியாகப் புதிதாக அமைத்த தலைநகரமே 'கங்கைகொண்ட சோழபுரம்' ஆகும். இராசேந்திரசோழனுக்குப் பின்னர்,

| | |
|---|---|
| முதலாம் இராசாதிராசன் | (கி.பி. 1044-1052) |
| இரண்டாம் இராசாதிராசன் | (கி.பி. 1052-1063) |
| முதலாம் வீரராசேந்திரன் | (கி.பி. 1063-1069) |
| அதிராசேந்திரன் | (கி.பி. 1069-1070) |
| முதலாம் குலோத்துங்கன் | (கி.பி. 1070-1120) |
| விக்கிரம சோழன் | (கி.பி. 1118-1135) |


என்னும் அரசர்கள் வரிசை முறையே ஆட்சி நடத்தினர். அதன் பின்னர்ப் பட்டத்திற்கு வந்து முடிசூடிக்கொண்டு ஆட்சி செலுத்திய அரசனே, இரண்டாம் குலோத்துங்க சோழன் அவன் காலத்தில்தான் (கி.பி. 1135-1150), சேக்கிழார் வாழ்ந்தார் என்பது வரலாறு.

ஆதலின் சேக்கிழார் சுவாமிகள், கங்கைகொண்ட சோழபுரத்திற்குப் பற்பல முறைகள் சென்று தங்கியிருந்திருப்பார்; அங்குள்ள கங்கைகொண்ட சோழேச்சுரர் கோயிலுக்குச் சென்று பலகால் வழிபட்டிருப்பார்; அப்போதெல்லாம் அக்கோயிலில் அமைக்கப்பெற்றுத் திகழும் அழகின் மிகுந்த சண்டேசானுக்கிரக மூர்த்தச் சிற்பம், அவர் தம் கண்ணையும் கருத்தையும் பெரிதும் கவர்ந்திருக்கும். அதனை அவர் கண்டு வியந்து பெரிதும் மகிழ்ந்திருப்பார் என்று, நாம் எண்ணி இன்புறலாம். நாம் சேக்கிழார் பெருமானைக் காணும் பேறு பெறுவிடினும், அவர் கண்டு மகிழ்ந்த கங்கைகொண்ட சோழபுரத்து அழகிய சிற்பம் ஆகிய சண்டேசானுக்கிரக மூர்த்தியின் திருவுருவினை யாதல் இன்றும் நாம் கண்டு மகிழலாம்.

—ஆசிரியர்.



அருள்திரு. சண்டேசானுக்கிரகர், கங்கை கொண்ட சோழபுரம்.



அருள்திரு வரதராசப் பெருமாள், தேவியருடன், காஞ்சிபுரம்.

# கவிதையால் கடவுள் வழிபாடு

திரு. டாக்டர் ந. சுப்புரெட்டியார், M.A., Ph.D.,
தமிழ்த்துறைத் தலைவர், திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி

பாட்டால் பரமனைப் பாடுவதையே பண்பும் பயனுமாகக் கொண்டு பத்திமூலம் அவனைக் காண்பதையே குறிக்கோளாகக் கருதி அடிமை செய்ய விழைந்தவர்கள் 'மயர்வற மதிநலம் அருளப் பெற்ற' ஆழ்வார்கள் ஆவர். "சுடர் ஆழியான் அடிக்கே சூட்டினேன் சொல் மாலை", "சொல்மாலை ஏத்தித் தொழுதேன்", "வாசகத்தால் ஏத்தினேன்", "...மாதவனைச் சொல்மாலை எப்பொழுதும் சூட்டு", "சழக்கு நாக்கொண்டு புன்கவி சொன்னேன்", "கலிகன்றி செஞ்சொலால் எடுத்த தெய்வநல் மாலை" "முகில் வண்ணன் அடிமேல் சொன்ன சொல்மாலை" என்ற ஆழ்வார்களின் திருவாக்குகளாலேயே இதனை அறியலாம். இந்த ஆழ்வார்களுள் தலைசிறந்தவர் நம்மாழ்வார்; ஏனைய ஆழ்வார்கட்கெல்லாம் தலைவராகக் கருதப் பெறுபவர். வைணவ தத்துவங்களைச் சிறப்பாக வெளியிடுவன இவ்வாழ்வாரின் பாடல்களே என்பது ஓரளவு முற்றும் கற்றுணர்ந்த மூதறிஞர்களின் கருத்தாகும்.

கருவிலே திருவுடைய நம்மாழ்வார் பிறக்கும் பொழுதே பத்தியும் அவருடன் கூடப் பிறந்தது. இறைவனைக் "கரு அரங்கத்துள் கிடந்து கை தொழுதவர்" அவர்.

"நெடுங்காலமும் கண்ணன் நீள்மலர்ப்
பாதம் பரவிப்பெற்ற
தொடுங்கால் ஒசியும் இடையிளமான்"

என்பதால் பராங்குசநாயகி (நம்மாழ்வார்) இறையருளால் அரிதாகப் பிறந்தவள்; செல்வமாக வளர்க்கப்பெற்றவள். அறிவு தோன்றுதற்குரிய தல்லாத மிக்க இளம் பருவத்திலேயே இவ்வாழ்வார் இறைவன்பால் பேரன்பு கொண்டவர் என்பதை,

"அறியாக் காலத்துள்ளே
அடிமைக்கண் அன்பு செய்வித்து
அறியா மாமாயத்து
அடியேனை வைத்தாயால்"

என்ற இவரது திருவாக்கினாலேயே இதனை அறியலாம். இவருடைய ஞானக் கண்ணுக்குப் புலனான இறைவன் இவருக்குத் "தேனும் பாலும் கன்னலும் அமுதுமாகித் தித்திப்ப", அவனை இடைவிடாது நினைப்பதனால் உண்டான தெவிட்டாத பேரின்பம் அப்பொழுதைக்கப்பொழுது புதிய புதிய ஆரா அமுதம் உண்டாற்போன்று பெருகி வளர்வதாயிற்று. அவ்வின்ப உணர்ச்சி உள்ளடங்காத நிலையில் எண்ணம் புகுந்து தித்திக்கும் அமுதாகிய எம் பெருமானைப் பற்றிப் பாட்டால் பனுவல்கள் இயற்றத் தொடங்கினர்.

"கண்டுகொண்டு என்கண் இணை
ஆரக் களித்து
பண்டை வினையாயின
பற்றோடு அறுத்து
தொண்டர்க்கு அமுது உண்ணச்
சொல்மாலைகள் சொன்னேன்
அண்டத்து அமரர்
பெருமான் அடியேனே".

என்பது அவர் திருவாக்கு. 'கண்டுகொண்டு என் கண் இணை ஆரக் களித்ததெல்லாம்' தன் ஞானக் கண்ணால் கண்டவையேயாகும். அக்களிப்பே, அந்த எக்களிப்பே, சொல் மாலைகள் வடிவம் பெற்றது. இவருடைய பாடல்களில் ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு மலர்; ஒவ்வொரு திருப்பாசுரமும் ஒவ்வொரு மாலை; அச்சொல்லின் பொருள் அம்மலரின் நறுமணம், நறுந்தேன் ஆகும். "சொல்லெனும் பூம்போது தோற்றிப், பொருளென்னும் நல்லிருந் தீந்தாது நாறுதலால்" என்ற கவிமரபினையும் காண்க,

ஆழ்வார் இறைவனிடத்துக் கொண்ட ஆராத காதலே இப்பாடல்கள் தோன்றுவதற்கு முதற்காரணம் ஆகும். அவாவின் தன்மையாது? விரும்பிய பொருளை அனுபவித்து முடியாதது அவாவாகும். ஒரு பொருளைத் தொடர்ந்து அநுபவிக்க அநுபவிக்க அவா பெருகுவ

தல்லாது முடிவு அடைவதில்லை. பிரகாரணங்களால் அவ்வநுபவத்திற்கு இடையூறு நிகழ்வதால் ஒருவேளை அவ்வவா தணியுமேயன்றி, அநுபவிக்க அநுபவிக்க விறகு மேன்மேலும் இடப்பெற்ற நெருப்புப்போல அந்த அவா பெருகுவதல்லது தணியாது என்பர் வள்ளுவர் பெருந்தகை. அத்தன்மையை அப்பெருமான் "ஆரா இயற்கை அவா" என்று விளக்குவர். ஆழ்வாரின் அவா முழுவதும் இறைவன்பாலே செல்லுவதாயிற்று. இதனை அவரே "ஆராத காதல் குருகூர்ச் சடகோபன்" என்று குறிப்பிடுவர். அவரது இந்த இயல்பினை அவருடைய பிற பாசுரங்களாலும் ஒருவாறு அறியலாம். ஞானக்கண்ணால் கண்ட இறைவனை ஊனக் கண்ணாலும் காண விழைந்து கண்ணீர் பெருக நெஞ்சம் நெக்குருகிப் பன்முறை கூவிக்கூவி அவனை அழைக்கின்றார் ஆழ்வார். அவன் காட்சி தரவில்லை.

"கூவிக்கூவி நெஞ்சுருகிக் கண்பனி
சோர நின்றால்
பாவிநீ என்றுஒன்று சொல்லாய்
பாவியேன் காணவந்தே"

என்று அங்கலாய்க்கின்றார். "நீ அன்புடன் காட்சி அளிக்க விரும்பாவிடினும், என் கண் முன்னே தோன்றி உன் விருப்பமின்மையை, 'நீ பாவி; அதனால் நினக்குக் காட்சி தருதல் இயலாது' என்றேனும் கூறுக" என்கின்றார். இறைவன் வெறுப்புடன் கூறுவதும் விருப்புடன் உரைப்பதும் ஆழ்வார்க்கு ஒன்றேயாம். அவனைக் காண்டலும் அவன் சொற் கேட்டலுமே ஆழ்வாரின் ஆசையாகும். மேலும்,

"சிறப்பில் வீடு சுவர்க்கம் நகரம்
இறப்பில் எய்துக, எய்தற்க ; யானும்
பிறப்பில் பல்பிற விப்பெரு மானை,
மறப்பு ஒன்று இன்றி, என்றும்
மகிழ்வேனே"

என்ற பாசுரத்தால் இறைவனை நினைந்து மகிழ்வதே தன் விருப்பம் என்பதையும், அவன் தரும் பேற்றினைத் தான் கருதவில்லை என்பதையும் புலப்படுத்துவர்.

இங்ஙனம் ஆழ்வார்களால் பாடப்பெற்ற சொல் மாலைகளால் இரண்டு பயன்கள் விளைவனவாயின. ஒன்று, ஆழ்வாரின் "பண்டை வினையாயின பற்றோடு ஒழிந்தன" இஃது உடன் விளைந்த பயன் ; தானாக ஒழிந்த பயன். அதுவும் அவனது அருளால் ஏற்பட்ட பயன். இதனை ஆழ்வாரே, 'கேசவன் எம்பெருமானைப், பாட்டாய்ப் பல பாடிப் பழவினைகள் பற்றறுத்து' என்று பின்னும் கூறுவதனாலும் அறியலாம். மற்றொரு பயன், அச்சொல் மாலைகள் அடியார்கள் செவியால் நுகரும் அமுதமாயின.

"கண்ட ஆற்றால் தானே உலகு என
நின்றான் தன்னை
வண்டமிழ் நூற்க நூற்றேன்
அடியார்க்கு இன்பமாரியே"

என்பது ஆழ்வார் திருவாக்கு, அடியார்கள் ஆழ்வாரின் சொல் மாலைகளாகிய பாசுரங்களைப் பாடிப்பாடி, பகவதநுபவம் பெற்று, அப் பாசுரங்களின் பொருளை எண்ணி எண்ணி அமுதம் உண்டாற்போல் இன்புற்று மகிழ்வர். இவ்வாழ்வார் பாசுரங்களை நம்போலியர் கற்றாலும் அவை நம் உள்ளத்தில் இன்ப வெள்ளம் பெருக்கெடுத்து ஓடச் செய்வதால் கம்பர் பெருமான் திருவாய் மொழியை "ஆராவமுதக் கவியாயிரம்" எனறு சிறப்பித்துப் போற்றுவாராயினர்.

இத் திருப்பாடல்கள் யாவற்றையும் ஆழ்வார் தம் ஆற்றலால் செய்ததாக எண்ணி, தன் முனைப்புக் கொள்ளவில்லை. எல்லாம் "மயர்வற மதிநலம் அருளின" இறையருளால் தம்மைக் கருவியாகக் கொண்டு நிகழ்ந்தன என்பதே ஆழ்வாருடைய நினைவாக உள்ளது.

"என்நெஞ்சத்து உள்ளிருந்து இங்கு
இருந்தமிழால் இவைமொழிந்து
வல்நெஞ்சத்து இரணியனை
மார்வு இடந்த வாட்டாற்றான்"
"பண்ணார் பாடல் இன்கவிகள்
யானாய்த் தன்னைத் தான்பாடி
தென்னா என்னும் என் அம்மான்"

என ஆழ்வாரே தம் திருவாக்கால் கூறுதலால் இதனை அறியலாம். திருவாய்மொழியில் ஒரு பதிகம் முழுவதிலுமே இக்கருத்தினைப் பன்னிப் பன்னி உரைக்கின்றார் ஆழ்வார்.

"ஆம்முதல் வன்இவன்
என்றுதன் தேற்றி, என்
நாமுதல் வந்து
புகுந்து, நல்இன்கவி
தூமுதல் பத்தர்க்குத்
தான்தன்னைச் சொன்னஎன்
வாய்முதல் அப்பனை"

“ என் சொல்லால் யான்சொன்ன
இன்கவி என்பித்துத்
தன்சொல்லால் தான்தன்னைக்
கீர்த்தித்த மாயன் ”

என்றும் கூறுவது காண்க. “ என்னால் தன்னை வண்கவிபாடும் வைகுந்த நாதனே ” என்று மீண்டும் இக்கருத்தினையே வலியுறுத்துகின்றார். இறைவனைப்பற்றி மெய்யுணர்வு பெற்ற பெரியோர் யாவரும் எச்செயலும் இறைவன் திருவுளப்படியே நிகழ்கின்றது என்பதாகவே எண்ணுவர். இங்ஙனம் இறைவன் தனக்கு அளித்த பெரும்பேற்றுக்குக் கைம்மாறாகத் தன் உயிரையே அவ்விறைவனுக்குக் காணிக்கையாக்கும் ஆழ்வார், “ அதுவும் மற்று ஆங்கவன் தன்னது ” என்று கூறி, அவ்வான்மாவும் அவனுடையதே என்று வலியுறுத்தி, இம்மையிலும் மறுமையிலும் அவனுக்குச் செய்யக்கூடிய கைம்மாறு ஒன்றுமே இல்லை என்பதை, “எதுவும் ஒன்றும் இல்லை செய்வது இங்கும் அங்கே” என்று கூறி அமைவர்.

இங்ஙனம் ‘மயர்வற மதிநலம் அருளப்பெற்ற’ ஆழ்வார்கள் நமக்கு அளித்துள்ள சொல்மாலைகள் யாவும் என்றும் வாடாத, பத்தி என்ற நறுமணம்மிக்க மாலைகளாகும். அவர்களுடைய திருவாய்களினின்றும் வெளிப்படும் பாடல்கள் கல்நெஞ்சத்தையும் கரைத்து இறைவனை நமக்குக் காட்டுபவை.


“ பாட்டினால் உன்னை என்
நெஞ்சத்து இருந்தமை
காட்டினாய் ”

என்று திருமங்கை மன்னன் கூறுவதைக் காண்க. எனவே, ‘நிறைமொழி மாந்தராம் ஆழ்வார்களின் ஆணையிற் கிளந்த மறைமொழிகளாம்’ சொல் மாலைகளைக் கொண்டு இறைவனை வழிபட்டுச் ‘சிந்தை செல்லாச் சேணெடுந் தூரத்து அந்தமில் ’ பேரின்பத்தை அடைவோமாக. ஆன்மநேய ஒருமைப்பாட்டினை விளைவிக்கவல்ல அந்தப் பெருவழியில் நாம் நெறிப்பட ஒழுகுவோமாக. அதன் காரணமாக,

“ புலன் ஐந்தும் மேயும்
பொறிஐந்தும் நீங்கி
நலம் அந்தம் இல்லதுஓர் நாடு ”

புகுவோமாக.

ஆழ்வார்கள் வாழ்க ! அவர்கள் அருளிச் செயல்கள் வாழ்க !! வாழ்க உலகெலாம் !!!



148715

சிறுவரம்பேடு அருள்திரு பாலசுப்பிர மணிய சுவாமி கோயில் இராசகோபுரத் திருப்பணி நடைபெறுதல்.

N73.16.2

# கல்லெழுத்துக்களில் திருநாவுக்கரசர்

திரு. கே. எம். வேங்கடராமையா, M.A., திருப்பனந்தாள்

முன்னுரை :

சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும் சுந்தரரும் திருநெறிய மெய்ஞ்ஞானத் தமிழ் பாடிச் சைவம் பரப்பியவராவர். இம் மூவரும் பல்லவப் பேரரசு நிகழ்ந்த காலத்தில் திகழ்ந்தவர். சுந்தரர் தம் நாளிலும் தமக்குமுன்னும் இருந்த அடியார்களைத் திருத்தொண்டத் தொகையால் துதித்தார். அந்நாள் முதல் பெரிய புராணம் பாடப்பெற்றது வரையிலும், அதற்குப் பின்னும் செந்தமிழ் நாட்டுச் சான்றோர் அளவி லாத பெருமையுடைய அடியார்களை அமயம் வாய்ப்புழி யெல்லாம் போற்றியுள்ளனர் என்று கல்லெழுத்துக்களால் அறிய வருகின்றது. திரு நாவுக்கரசரைப் பற்றிக் கல்வெட்டுக்களினின்று அறியப்படுவனவற்றுள் சில காண்போம்.

பெயர் :

திருநாவுக்கரையர் என்றும், வாகீசர் என்றும் இவர் குறிக்கப் பெறுகிறர். தஞ்சைப் பெரிய கோயில் கட்டப்பெற்றதும், முதல் ஸ்ரீகாரியம் ஆராய்கின்ற அலுவலனுகத் திகழ்ந்தவன், பொய்கை நாடு கிழவன் ஆதித்தன் சூரியனை தென்னவன் மூவேந்த வேளான். இவன் தஞ்சைப் பெரிய கோயிலில் எழுந்தருளுவித்த பிரதிமங்களுள் ஒன்று திருநாவுக்கரையர் பிரதிமம். தஞ்சைப் பெரிய கோயிலில் முதல் இராசராசனது 29-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1014-ல்) "உடையார் ஸ்ரீராசராசீச்வரமுடை யார்க்குத் திருப்பதியம் விண்ணப்பம் செய்ய உடையார் ஸ்ரீராசராச தேவர் குடுத்தபிடாரர் கள் நாற்பத்தெண்மர்" என்று ஒரு கல்வெட்டி லுள்ளது. இந்நாற்பத் தெண்மருள் 8 பேர் திரு நாவுக்கரையர் பெயரைப் பூண்டிருந்தனர் என்பது, அக்கல்வெட்டால் அறியப்படுவதுள் ஒன்று.

முதற் குலோத்துங்கன் காலத்திலும், அவன் மகன் விக்கிரமசோழன் காலத்திலும் படைத் தலைவனுகத் திகழ்ந்தவன் 'மணவில் கூத்தன் காலிங்கராயன்' எனப் பெறுவான். இவன் தில்லையிலும் திருவதிகையிலும் செய்த சிவப் பணிகள் அளப்பில. அவற்றைத் தில்லையம் பதியில் கல்லெழுத்தாக அமைந்துள்ள 36 வெண்பாக்களாலும், திருவதிகை வீரட்டானத் தில் சிலாசாசனம் செய்யப் பெற்றுள்ள 25 வெண்பாக்களாலும் அறியலாம். இவன் திரு வதிகையில் திருநாவுக்கரசர்க்குத் திருக்கோயில் கட்டினன்.

> "ஈசன் அதிகையில்வா கீசன் எழுந்தருள
> மாசில் பெருங்கோயில் வகுத்தமைத்தான்"

என்பது திருவதிகைச் சாசனத் தமிழ்க் கவி யாகும். இதில் திருநாவுக்கரசர் வாகீசர் எனப் பெற்றமை காண்க.

திருநாவுக்கரசு சுவாமிகள் திருஞான சம்பந்தரைச் சீகாழியில் முதன் முதல் சந்தித்த பொழுது வணங்கத் திருஞானசம்பந்தர் 'அப்பரே' என்றழைத் தருளியதாகப் பெரிய புராணம் பகரும். எம்மண்டலமும் கொண் டருளிய ஸ்ரீகுலசேகர தேவர்க்கு யாண்டு 18 வதில் அளித்த பில்லமங்கலம் ஆகமசீலீசுவரர் கோயில் கல்வெட்டில் கையெழுத்திட்ட மகேசுவரர்களில் ஒருவர்பெயர் 'அப்பர்' என்பது என்று அறிய வருகிறது.

இரண்டாம் குலோத்துங்கனுகிய அநபாயன் சைவசமயகுரவர் மூவரிடத்தும் மிக்க பற்றுடை யவன். அவர்தம் படிவங்களைத் திருவாரூர்த் திருமூலட்டானமுடையார் கோயிலில் எழுந் தருள்வித்தான். தனது ஏழாவது ஆட்சி யாண்டில் ஆளுடையநம்பிக்கும், பரவை நாச்சி யார்க்கும் அர்ச்சனு போகமாக அநபாயநல்லூர் மருகல் நாட்டுத் திருவாதிரைமங்கலம் என்ற ஊரை அளித்தான். ஆளுடைய பிள்ளையார்க் கும் திருநாவுக்கரசு தேவர்க்கும் வேண்டும்

துர்ச்சனைகளுக்குமாக 12-ஆவது ஆட்சி யாண்டில் மருகல் நாட்டுக் கங்கைகொண்ட சோழநல்லூரான சிவபாதசேகர நல்லூரை அளித்தான். இத்தமிழ்க் கல்வெட்டோடு தொடர்ந்த வடமொழிக் கல்வெட்டில் தேவார மூவர் "பிரம்ம புரீசர் (சம்பந்தர்), வாகதிபதி (திருநாவுக்கரசர்), சுவ சுவாமி மித்ரர் (சுந்தரர்) என்று குறிக்கப் பெற்றுள்ளனர். இதனால் திரு நாவுக்கரசர், வாகீசர் (வாகதிபதி) என்று வழங்கப்பெற்ருர் என்பது அறியப்பெறும்.

மேற்படி கல்வெட்டில் சுந்தரர் ஆளுடைய நம்பி என்றும், சம்பந்தர் ஆளுடையபிள்ளை என்றும் கூறப் பெற்றதினின்று, திருநாவுக்கரசர் ஆளுடைய அரசு என்று கூறப் பெற்றிருத்தல் கூடும் என்று ஊகித்தறியலாம். தாராசுரத்து இராசராசேச்சுரத்து இறையகப் புறச் சுவரில் கண்ட சிற்பக் கீழ்க் கல்லெழுத்துக்களில் "திருநாவுக்கரசரண்டார் கதை" என்று எழுதப் பெற்றுள்ளது. இறைவன் திருவடி சூட்டும் நிலையில் அச்சிற்பம் அமைந்துள்ளது. திருப் பனந்தாள் செஞ்சடையப்பர் கோயிலில் உள்ள திருத்தொண்டத் தொகைச் சிற்பங்களில் திருநாவுக்கரசர் உழவாரப் படையுடன் இருத் தல் கவனித்தற்குரியது. திருவீழிமிழலையில் திருநாவுக்கரசு தேவர் திருமடம் என்று, ஒரு மடம் இருந்ததாக ஒரு கல்லெழுத்து நுவல் கிறது. அதில் திருமடத்துக்குரிய நிலங்களின் பெயர் கூறப்பெற்றுள்ளது. இன்னொருசாசனம் மாகேசுவரருக்கு உணவளித்தற் பொருட்டு ஷெ திருமடத்துக்கு நிலமளித்த செய்தியைக் கூறு கிறது.

### சொற்றுணை :

திருநாவுக்கசரர் கல்லிற் பிணிக்கப்பெற்றுக் கடலிற் பாய்ச்சப்பெற்ற பொழுது பாடப்பெற்றது "சொற்றுணை வேதியன்" என்ற பதிகமாகும். "மதுரையும் ஈழமுங்கொண்ட கோப்பரகேசரி பன்மற்குயாண்டு 41ஆவது... திருவாமாத்தூரு டைய மகாதேவற்கு...தேவன் சொற்றுணை அக முடையான் செட்டங்கை வைத்த திருநொந்தா விளக்கு" என்ற திருவாமாத்தூர்க் கல்வெட்டி லும், "விக்கிரம சோழ தேவர்க்கு யாண்டு மூன்ருவது...வாகூருடையான் சொற்றுணை கங்கைசடைக்கரந்தானிடை நாங்கள் கொண்ட காசாவது" என்ற திருச்செந்துறைக் கல் வெட்டிலும் "சொற்றுணை" என்பது, மக்கட் பெயராயமைந்திருத்தலைக் காணலாம்.

### கங்கை சடைக்கரந்தான் :

மேற்கண்ட திருச்செந்துறைக் கல்வெட்டில் கண்ட வாகூருடையான் சொற்றுணை என் பானுக்குக் 'கங்கைசடைக்கரந்தான்' என்றும் பெயரிருத்தலைக் காணலாம். ஷெ திருச்செந் துறைக் கல்வெட்டில் இறுதியில் பிற்கண்ட வெண்பா உள்ளது :

"உண்ணலாம் நெய்யொடுசோ ரேவாதே
யெப்பொழுதும்
பண்ணெலாம் பாடியிருக்கலாம்
மண்ணெலாம்
அகன்மாட நீடூர்கூர் கங்கை
சடைக்கரந்தான்
பொன்மாடத் தெப்பொழுதும் புக்கு"

"கங்கைசடைக்கரந்தான்" என்ற பெயர் திருநாவுக்கரசருடைய 'வங்கமலி கடல்' என்ற தேவாரத்து 'கங்கைசடைக்கரந்தாய் அக் கள்ளத்தை மெள்ள உமைநங்கை யறியிற் பொல்லாது கண்டாய்' என்ற பகுதியை நினை வூட்டும்.

### சிலந்தியைச் சோழனுக்கினுன் :

பண்டொருகால் ஒரு சிலந்தி திருவானைக்கா எம்பெருமாற்குக் கூடுகட்டி வழிபட்டு வந்தது. அப்பெருமானை ஒருயானையும் வழிபட்டு வர லாயிற்று. சிலந்தி கட்டும் கூட்டை 'அநுசிதம்' என்று கருதிய யானை அக்கூட்டை அழிக்க லாயிற்று. யானை தன் கூட்டினை அழித்தலைப் பொருத சிலந்தி யானையின் துதிக்கையிற் புக, யானை உயிர் நீத்தது ; சிலந்தியின் உயிரும் பிரிந்தது. எனினும், சிலந்தி மறுபிறவியில் அரசனுயிற்று. அவ்வரசனே கோச்செங்கட் சோழன். இங்ஙனம், சிலந்தி சோழனுனமை யைத் திருநாவுக்கரசர்,

"சிலந்தியும் ஆனைக் காவில்
திருநிழற் பந்தர் செய்து
உலந்தவண் இறந்த போதே
கோச்செங்க ணுனு மாகக்
கலந்தநீர்க் காவிரி சூழ்
சோணுட்டுச் சோழர் தங்கள்
குலந்தனில் பிறப்பித் திட்டார்
குறுக்கைவீ ரட்ட னுரே"

என்று திருக்குறுக்கை வீரட்டானப் பதிகத்துப் பாடியுள்ளார். சிலந்தியைச் சோழனுக்கிய

அருட்செயலை வியந்து போற்றினர், அந்நாட் பெருமக்கள் ; இறைவனைச் சிலந்தியைச் சோழனுக்கினன் என்று வாயார வாழ்த்தினர்; திருவானைக்காவில் ஒரு தோப்புக்குச் சிலந்தியைச் சோழனுக்கினன் தோப்பு என்றும் பெயரிட்டனர். இது 'தேர்போல்' என்று தொடங்கும் குலசேகர பாண்டியனது திருவானைக்காக் கல்வெட்டில் காணப்பெறுகிறது. அக்கல்வெட்டுப் பகுதி வருமாறு : " இவர்க்கு விற்றுக்குடுத்த நிலமாவது : உள்ளூர்த் திருப்புடைப் புதுவிளாகத்துச் சிலந்தியைச் சோழனுக்கினன் திருத் தோப்புக்கு நீர் பாய்கிற வாய்க்காலுக்கு மேற்கு "

### நல்ல நாமம் உடையான் :

மேற்படி கல்வெட்டில் கையெழுத்து இட்டவர்களில் ஒருவர் நல்ல நாமம் உடையான் என்ற பெயருடையவர். நல்ல நாமம் உடையான் என்பது சிவபெருமானைக் குறிக்கும். சிவபெருமானுடைய திருநாமங்களில் ஒன்று திருவைந்தெழுத்தாகும். " திருநாமம் அஞ்செழுத்தும் செப்பாராகில் ", " எந்தையார் திருநாமம் நமச்சிவாய " என்ற அப்பர் வாக்கே இதனை வலியுறுத்தும். இத் திருப்பெயரையே நல்ல நாமம் என்று அப்பர் பின்வரும் பாடலில் கூறியுள்ளார் :

" கல்லி னேடெனைப் பூட்டி யமண்கையர்
ஒல்லை நீர்புக நூக்கவென் வாக்கினல்
நெல்லு நீள்வயல் நீலக் குடியரன்
நல்ல நாமம் நவிற்றியுய்ந் தேனன்றே "

### நஞ்சமுது செய்தான் :

திருநாவுக்கரசர்க்குச்சமணர்கள் நஞ்சுகலந்த பாற் சோறூட்டினர். நஞ்சும் அமுதமாயிற்று நாதனடியாராகிய திருநாவுக்கரசருக்கு.

" துஞ்சிருள் காலை மாலை
தொடர்ச்சியை மறந்திராதே
அஞ்செழுத் தோதில்நாளும்
அரனடிக் கன்ப தாகும்
வஞ்சனைப் பாற்சோருக்கி
வழக்கிலா அமணர் தந்த
நஞ்சமு தாக்கு வித்தார்
நனிபள்ளி யடிகளாரே "

என்பது இதற்கு அகச்சான்று. இச்செய்தியை நினைப்பிப்பதுபோல் ஒருவர் பெயர் நஞ்சமுது செய்தான் என்பதாகும் என்று சிதம்பரத்தி லுள்ள குலசேகரதேவர் கல்வெட்டொன்று கூறுகிறது. அவரது முழுப்பெயர் : பெரும் பற்றப்புலியூர் மூலப் பருஷையாரில் வாச்சியன் திருவலஞ்சுழியுடையான் நஞ்சமுது செய்தான்' என்பதாம்,

### தோன்றுத்துணை :

கல்லையே தெப்பமாகக் கொண்டு கரையேறிய திருநாவுக்கரசர் திருப்பாதிரிப்புலியூரில் பாடுங்கால் இறைவன் தனக்குத் தோன்றுத் துணையாயிருந்தமையைப் பின்வருமாறு கூறியுள்ளார் :

" ஈன்றுளு மாயெனக் கெந்தையு
மாயுடன் தோன்றினராய்
மூன்று யுலகம் படைத்துகந்தா
னென்மனத் துள்ளிருக்க
ஏன்றுன் இமையவர்க் கன்பன்
திருப்பாதிரிப்புலியூர்த்
தோன்றுத் துணையா யிருந்தனன்
தன்னடி யோங்களுக்கே. "

இவ்வரிய செயலை நினைவுகூரும் வகையில் இந் நாட்டுத் தமிழ்ப்பெருமக்கள் திருப்பாதிரிப் புலியூரிறைவனைத் தோன்றுத் துணையாண்டார் என்று கூறினர். கோயிலைத் தோன்றுத் துணையாண்டார் கோயில் என்றும் தோன்றுத் துணையாருடையார் கோயில் என்றும் கூறலாயினர். இதனைப் பின்வரும் கல்வெட்டுத் தொடர்களால் அறியலாகும்.

"விக்கிரம சோழ தேவர்க்கு யாண்டு ஏழாவது ராசராச வளநாட்டுப் பட்டான் பாக்கை நாட்டுத் திருப்பாதிரிப்புலியூர்த் தோன்றுத் துணையாண்டார் கோயில்." "விக்கிர சோழ தேவர்க்கு யாண்டு ஆருவது ராசராச வள நாட்டுப்பட்டான் பாக்கை நாட்டுத் திருப்பாதிரிப் புலியூரானபரநிருப பராக்கிரமச் சதுர்வேதி மங்கலத்துத் தோன்றுத்துணை ஆளுடையார் கோயில்." "வீரமேதுணையாகவும்" என்று தொடங்கும் வீரராசேந்திர சோழனது 5-வது ஆட்சியாண்டுக் கல்வெட்டினின்று திருப்பாதிரிப்புலியூர்க் கோயிலில் இருந்த சிவப் பிராம்மணன் ஒருவன் பெயர் தோன்றுத் துணை பட்டன் என்பது என்றறிய வருகின்றது. இதனல் தோன்றுத்துணை என்பது மக்கட் பெராயமைந்ததும் அறியலாயிற்று.

### தேனுறுங் கொன்றையன் :

மூன்றும் இராசராச சோழனுடைய பதினொருவதின் எதிரா மாண்டுக் கல்வெட்டு ஒன்று திருவானைக்காவிலுள்ளது. இக்கல்வெட்டில் கையெழுத்து இட்டவர்களுள் ஒருவர் தேனுருங் கொன்றையன் என்ற பெயருடையவர் ஆவர். இப்பெயர் திருநாவுக்கரசர் திருவானைக்காவில் அருளிய திருத்தாண்டகத்தில் காணப்படுகிறது.

"தேனுருங் கொன்றையனே நின்றியூராய்
திருவானைக்காவிலுறைசிவனேஞானம்
ஆனாயுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்ல கண்டம் கொண்டடியேன்
என்செய் கேனே.

### என் ஆனைக் கன்று :

போசள மன்னன் வீரராமனது திருவானைக்கா சாசனத்தில், திருவானைக்காவுடைய நாயனாரைப் பூசிக்கும் திருவெள்ளறைக் காச்யபன் என்னானைக்கன்று பட்டன் என்று ஒருவன் குறிக்கப் பெறுகிறான். திருநாவுக்கரசர் திருவானைக்காவில் பாடிய திருத்தாண்டகத்தில் இறைவனை என்னானைக்கன்று என்று குறிப்பிட்டார். இதுவே திருவெள்ளறைக் காச்யபனுக்குரிய பெயராயிற்று. அத்திருத்தாண்டகம் பின்வருமாறு :

"என்னானைக் கன்றினையென் ஈசன் தன்னை
எறிநீர்த் திரையுகளுங் காவி ரிசூழ்
தென்னானைக் காவானைத் தேனைப் பாலைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடினேனே"

### செம்பொற்சோதி :

'திருவையா றகலாத செம்பொற் சோதி' என்பது திருநாவுக்கரசர் தேவார அடி. முதலாம் இராசராசன் தஞ்சைப் பெரிய கோயிலில் நியமித்த நாற்பத்தெண்மர் பிடாரர்களில் ஒருவர் பெயர், "திருவெண்ணாவல் செம்பொற் சோதியான தட்சிணா மேருவிடங்கப் பிச்சனான ஞானசிவன்" என்பதாகும். "பூமாது புணர" என்ற விக்ரம சோழத் தேவரது திருநெய்த் தானக் கல்வெட்டில் செம்பொற்சோதி உய்ய வந்தான் என்பது ஒருவர் பெயராகக் காணப்

### காக்கும் நாயகன் :

"மூக்கு வாய்செவி கண்ணுட லாகி வந்(து)
ஆக்கு மைவர்தம் ஆப்பை யவிழ்த்தருள்
நோக்கு வானமை நோய்வினை வாராமே
காக்கும் நாயகன் கச்சியே கம்பனே"

என்பது திருநாவுக்கரசர் திருக்கச்சியேகம்பத்திற் பாடிய திருக்குறுந்தொகையாகும். திருப்பாலைத்துறை ஆதிகேசுவரர் கோயிலுக்கு அருகில் ஒரு திருமடம் இருந்தது. அதற்குப் பெயர் காக்கு நாயகன் திருமடம் என்பதாகும். இதனை ஒரு கல்வெட்டு நுவல்கிறது. இது திருக்கச்சியேகம்பத்துத் திருக்குறுந்தொகைச் சொற்றொடரின் அடிப்படையில் அமைந்ததேயாகும்.

### திறக்கப்பாடுவார் :

திருநாவுக்கரசர் திருமறைக்காட்டில் "பண்ணினேர் மொழியாள்" என்ற பதிகம்பாடி மறைக்கதவினைத் திறந்தருளினார். திருவாய்மூர்க்குத் தொடரச் செல்லுங்கால்,

"திறக்கப் பாடிய என்னினும் செந்தமிழ்
உறைப்புப் பாடி அடைப்பித்தார் உந்
நின்றார்"

என்று திருக்குறுந்கொகையில் திருநாவுக்கரசர் தம்மைத் திறக்கப் பாடியவர் என்று குறித்துக் கொண்டார். திருவொற்றியூரில் ஒரு கல்வெட்டில் இத்தொடர் காணப்படுகின்றது. இராசநாராயணச் சம்புவராயர் தமது 7-ம் ஆட்சியாண்டில் சில நிலங்களையும் மனைகளையும் திருவொற்றியூர்க் கோயிலுக்குக் கொடுத்தார். படம்பக்க நாயக விளாகம் என்பது திறக்கப் பாடுவார் மனைக்குக் கிழக்கில் உள்ளது என்று அக்கல்லெழுத்துக் கூறுகிறது.

புதுக்கோட்டை-குளத்தூர்த் தாலூகா-தென்னங்குடி-தர்மபுரீசுவரர் கோயிலில் கண்ட வீர சுந்தர பாண்டிய தேவரது கல்வெட்டில் "திருவாசல் திறந்தான் மரக்காலாலே திருவாசலிலே அளப்போமாகவும்" என்று காணப்படுகிறது. திருவாசல் திறந்தான் என்பது இங்கு ஒரு மரக்காலுக்குப் பெயராகக் காணப்படுகிற்து. இச் சொற்றொடரும் "கனை கொள் வேத வனப்பதி தன்னிலே கதவுதானும் கடுகத்" திறந்த அப்பரது அற்புதத்தைக் குறிப்பதாகவே கொள்ள

தவப்பெருந் தேவு செய்தார் :

“துவப் பெருந் தடக்கை வேடன்
கொடுஞ்சிலை இறைச்சிப் பாரம்
துவர்ப் பெருஞ் செருப்பால் நீக்கித்
தூ யவாய்க் கலசம்ஆட்ட
உவப்பெருங் குருதி சோர
ஒருகணை இடந்தங் கப்பத்
தவப்பெருந் தேவு செய்தார்
சாய்க்காடு மேவி னூரே”

என்பது திருச்சாய்க்காட்டில் திருநாவுக்கரசர் பாடிய திருநேரிசை. இதில் கண்ணப்பரை இறைவன் ஆண்டு கொண்டருளிய செய்தி கூறப்பட்டுள்ளது. இப்பாடலிற்கண்ட தவப் பெருந்தேவு செய்தார் என்பது சகயாண்டு 1242க்குரிய திருக்காளத்திக் கல்வெட்டில் ஒருவர் பெயராகக் காணப்பெறுகிறது. திருக் காளத்தித் திருமணிக்கெங்கையுடைய நாயனர் கோயிலில் திருமணிக் கங்கைச்சீயன் என்ற அதிகாரி அவ்வூரிலுள்ள சில நிலங்களின் உரிமைகளை மாற்றியமைக்கிருர். அச்சாசனத்தில் பலரும் கையொப்பமிடுகிருர்கள். அவர்களுள் ஒருவர் திருக்காளத்தியாண்டார் தவப் பெருந்தேவு செய்தார் என்பவராவர். இதே நாளில் இன்னெரு அறக்கட்டளை பிறப்பிக்கப் பெறுகின்றது. திருக்காளத்தி திருமணிகெங்கை யுடைய நாயனர் கோயில் வடக்குத் திருவீதி தெற்கடையப்பாதியில் தவப்பெருந்தேவு செய்தார்க்குரிய நிலம் திருநாமத்துக் காணி யாகக் கொடுக்கப்பட்டது.

குளிச்செழுந்த நாயனர் :

திருநாவுக்கரசர் கயிலையில் எம்பெருமானைத் தரிசிக்கச் சென்றவர், அதுகூடாமையின், ஆங்கொருகுளத்தில்மூழ்கித் திருவையாற்றில் ஒரு குளத்தில் எழுந்தார். இதனைச் சேக்கிழார் சுவாமிகள் பின்வரும் பாடலில் கூறியுள்ளார்.

“ஆதி தேவர்தம் திருவருட்
பெருமையார் அறிந்தார்
போத மாதவர் பனிமலர்ப்
பொய்கையில் மூழ்கி
மாதொர் பாகனர் மகிழும்
ஐயாற்றிலோர் வாவி
மீது தோன்றிவந் தெழுந்தனர்
உலகெலாம் வியப்ப”

திருப்புகலூரில் ஒரு கல்வெட்டில் “குளிச் செழுந்த நாயனர்” என்று காணப்பெறுகிறது. இதுமேலே கூறியவாறு திருநாவுக்கரசரைக் குறிப்பதாகவே கொள்ளலாம்.

குகை என்பது முனிவர் இருப்பிடம். தேவார மூவர் பெயரால் தமிழ் நாடெங்கும் பல குகை கள் இருந்தமையைக் கல்லெழுத்துக்கள் கூறுகின்றன. திருக்குறுக்கையிலுள்ள மூன்ருங் குலோத்துங்கச் சோழனுடைய 29—ம் ஆட்சி யாண்டு (கி. பி. 1201)க்குரிய கல்லெழுத்து திருநாவுக்கரசு குகை என்ற குகையைப்பற்றிக் கூறுகிறது. இக்குகைக்குவரும் அபூர்விகளுக் கும், திருவைகாசித் திருநாளுக்கும், வரும் மகேசுவரர்களுக்கும் உணவு அளிக்கவும் நெல் தானம் செய்யப்பெற்றது. திருத்தாண்டகம் ஓதுவது குறித்தும் இக்கல்லெழுத்து அறிவிக் கிறது.

முடிவுரை :

திருநாவுக்கரசர்க்குப் படிவங்கள் அமைத் தமையும் நிபந்தங்கள் அமைத்தமையும் பற்றிச் சிலாசாசனங்கள் கூறுகின்றன. அச்சிடப் பெருத கல்வெட்டுக்கள் அச்சிடப்பெறின் இன்னும் எத்தனையோ செய்திகள் வெளிப்படும். அந் நாளைய மக்கள் திருமெய்ஞ்ஞானத் திருநெறித் தமிழாகிய தேவாரத்தை எங்ஙனமெல்லாம் வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகினர் என்பதும் நன்கு விளக்கம்பெறும்.

‘ஆழிமிசைக் கன்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி !

அருள்திரு



நடராசர்

# மெய்கண்ட நூல்களின் வாழ்வியல் உண்மைகள்

(தளை இயல்)

முன்னுரை :

சைவசித்தாந்தம் என்னும் மெய்கண்ட நூல்களின் தத்துவக் கொள்கை, பதி பசு பாசம் என்னும் முப்பொருள் உண்மைகளை விளக்கும். பதி பசு பாசம் என்பனவற்றை முறையே இறை உயிர் தளை எனத் தமிழில் வழங்குவர். ஆணவம் கன்மம் மாயை என்னும் மூவகைப் பாசங்களையும், தளை என்னும் சொல்லால் வழங்குதல் பண்டைய மரபே என்பது,

விளையாததொர் பரிசில்வரு
பசுபாச வேதனை ஒண்
தளையாயின தவிரவ்வருள்
தலைவன்னது சார்பாம்;
களையார்தரு கதிராயிரம்
உடைய அவ னேடு
முளையாமதி தவழும்உயர்
முதுகுன்றடை வோமே.

—சம்பந்தர்

சான்றவர் ஆய்ந்திடத் தக்கவாம் பொருள்
மூன்றுள: மறையெலாம் மொழிய நின்றன;
ஆன்ற தொல்பதி; ஆரு யிர்த்தொகை;
வான்திகழ் தளையென வகுப்பர் அன்னவே

—கந்தபுராணம்

எனவரும் சான்றோர் திருமொழிகளால் தெளியப்படும். உயிரின் அறிவு இச்சை செயல்களை இயல்பாக நிகழவொண்ணுதபடி தடைசெய்து, தளைத்து (கட்டி) வைத்திருப்பனவாதலின், ஆணவம் கன்மம் மாயை என்னும் மலங்களுக்குப் பாசம் (கட்டுவது) எனவும் பெயர்கள் வழங்குவனவாயின. தளையாகிய இம்மும்மலங்களையும் பற்றி, இங்கு இயன்றவரை ஒரு சிறிது காண்போம்.

## (1) ஆணவ மலம் :

உயிர் அறிவுடையது. ஆனல் அதனிடம் அறியாமையும் காணப்படுகின்றது. அறிவு அறியாமை என்னும் இரண்டனுள் உயிர்க்கு இயல்பாக உள்ளது அறிவா? அறியாமையா?. அறியாமையே உயிர்க்கு இயல்பாயின், உயிர் சடப் பொருளாகும். அறிவே இயல்பாயின் உயிருக்கு அறியாமை நிகழலாகாது. அறிவு அறியாமையாகிய இரண்டுமே உயிர்க்கு இயல்பு எனின், ஒன்றினென்று அறவே முரண்பட்ட இரண்டு தன்மைகள். ஒரே பொருளில் யாண்டும் காணப்படுவதில்லை.

(1) அறிவுடையதாகிய உயிரின்பால் அறியாமை நிகழ்வதற்குப் பலர் பலவகைக் காரணங்களைக் கூறுவர். உயிரின் அறிவை உடம்பே மறைக்கின்றது என்பர் சிலர். உயிர் என்றும் உள்ளது (நித்தியம்), பரவியிருப்பது (வியாபகம்). ஆனல் உடம்போ அழிவது (அநித்தியம்), ஓரிடத்திருப்பது (ஏகதேசம்) மேலும் உடம்பு இடையில் வந்தது. ஆதலின் அஃது என்றுமுள்ள உயிரின் அறிவை மறைக்கவல்லதன்று. உடம்பிலுள்ள மெய் வாய் கண் மூக்கு செவி முதலியன, அறிவை விளக்குகின்றனவே யன்றி, மறைக்கவில்லை.

(2) மாயையே உயிரின் அறிவை மறைக்கும் என்பது சிலர் கருத்து. உடல் கருவி உலகு நுகர்ச்சி என்பன, மாயையிலிருந்து தோன்றுவன. இவை காரியம், மாயை காரணம். காரணமும் காரியமும் தம்முள் மாறுபடாமல், ஒரு தன்மையனவாகவே இருக்கும். காரியமாகிய உடல் மறைக்காது எனின், காரணமாகிய மாயையும் உயிரின் அறிவை மறைக்காது. உடலைப் போலவே மாயையும் இடையிலேயே வந்தது (ஆகந்துகம்).

(3) மூலப் பிரகிருதியில் தோன்றும் அவிச்சையே, உயிரறிவை மறைக்கும் என்பது சிலர் கொள்கை. அவிச்சையும் ஒன்றன் காரியமாய் இடையில் தோன்றிய ஆகந்துகமே

ஆகும். ஆதலின் அஃதும் அநாதியே உள்ள உயிரின் அறிவை மறைத்தல் இயலாது.

(4) உயிரின் குணம் அறியாமையே என்பர் சிலர். அது பொருந்தாது. குணம் அழியக் குணி அழியும். ஆதலின் குணமாகிய அறியாமை அழிந்தால் குணியாகிய உயிரும் அழியும் என முடியும்.

(5) கயிற்றை அரவு எனக் காண்பது போலும் திரிபுணர்ச்சியே, உயிர்க்கு அறியாமையைத் தரும் எனச் சிலர் கூறுவர். கயிற்றை அரவு எனக் காணுதற்குக் கண்ணின் பார்வைக் குறையே காரணம். அதுபோல் உயிரின் திரிபுணர்ச்சிக்கும் ஒரு காரணம் வேண்டும்.

(6) அறிவு இல்லாமை (ஞான அபாவம்) தான், உயிருக்கு அறியாமையை விளைவிக்கின்றது என்பது சிலர் கருத்து, அபாவம் ஆகிய இல்லாமை என்பது, என்றும் இன்மை (அத்தியந்தாபாவம்), ஒன்றினொன்றின்மை (அந்நியோந்நியாபாவம்), முன்னின்மை (பிராகபாவம்), பின்னின்மை (பிரத்துவம்சாபாவம்) என நால்வகைப்படும். இவற்றுள் உயிரின் அறியாமை எவ்வகையைச் சேர்ந்தது? உயிருக்கு அறிவு இருந்ததாயின் பின்னர், அஃது இலதாகாது. உள்ளது இல்லதாயும், இல்லது உள்ளதாயும் நிகழும் எனின், அதற்கு ஒரு காரணம் அமைதல் வேண்டும்.

(7) தமோகுணம் முதலியவற்றால் உயிருக்கு அறியாமை நிகழும் என்பது சிலர் கொள்கை. அவையும் ஒவ்வொன்றன் காரியமாய் இடையே தோன்றி அழிவனவாதலின்; பண்டேயுள்ள உயிரின் அறிவை அவைகள் தடை செய்யமாட்டா.

(8) மாயை கன்மங்கள் உயிருக்கு நலம் செய்ய வருவன ஆதலின், அவையும் உயிரின் அறிவை மறைக்கும் இயல்புடையன அல்ல.

(9) சித்துப்பொருள் மற்றொரு சித்துப் பொருளைக் கட்டுப்படுத்த முற்படாதாகலின், சிவசத்தியாகிய திருவருளும் உயிரின் அறிவை மறைக்க முற்படாது.

(10) இனி இவற்றினெல்லாம் வேறாக, உயிரின் அறியாமைக்கும் துன்பங்களுக்கும் மூலகாரணமாக இருப்பது எதுவோ, அதுவே ஆணவமலம் எனப்படும். உலகம் அழிவுடையது, துன்பம்பயப்பது; ஆயினும் அதனை உயிர் நிலைபேறுடையது என்றும், இன்பம் விளைவிப்பது என்றும், பிறழக்கொண்டு விழைந்து நிற்கின்றது. இந்நிலைக்குக் காரணம் எதுவோ, அதுவே ஆணவமலம் எனப்படும். உயிரின் அறிவு இச்சை செயல்களைத் தடைசெய்து கட்டுப்படுத்தும் தன்மையது எதுவோ அதுவே ஆணவமலம். கண்ணின் ஒளியை மறைக்கும் புற இருள் போல, உயிரின் அறிவை மறைக்கும் அக இருள்தான் ஆணவமலம். புற இருள் ஒரு பொருளையும் காட்டாது ஆயினும், இருண்ட கருநிறமாகிய தன்னியல்பையேனும் காட்டும்; ஆனால் ஆணவமாகிய அக இருளோ பிற பொருளை மட்டுமேயன்றித் தன் இயல்பையுங் கூடக் காட்டாது.

இருள் கண்ணொளியை மறைக்குமேயன்றி, ஞாயிற்றின் ஒளியை மறைக்காது; அதுபோல ஆணவமலம் உயிரறிவைத் தடைசெய்யுமேயன்றி இறையுணர்வை மறைக்கலாற்றாது. பித்தம் மேலிட்டால் தித்திக்கும் சுவையுடைய சர்க்கரையும் நாவிற்குக் கசக்கும். அதுபோல ஆணவமலம் பற்றுதலால் நலம்பயக்கும் சிறப்புடையனவும், உயிர்களுக்குத் தீயனவாகத் தோன்றும்.

ஆணவமலம் அறிவை மறைப்பதாகலின், அஃது அறிவுடைப் பொருள் ஆகாது; சடப் பொருளேயாம். சடமாய்ப் பலவுமாய் இருக்கும் யாவும் அழியும் தன்மையவாகலின், ஆணவ மலம் ஒன்றேயாம். அங்ஙனம் ஒன்றேயாயினும் பல உயிர்களையும் பற்றிப் பிணித்தலின், அதன் ஆற்றல்கள் பலவாக இருக்கும். இடையில் வருவன இடையிலேயே கெடுவதுடன், மீண்டும் மீண்டும் பின்னரும் வந்து சேரும்; ஆணவமலம் அத்தகையது அல்லாமல் உயிர்களின்பால் அநாதியே கலந்து நிற்கும்.

நெல் என்று உண்டாயிற்றோ, அன்றே அதன்பால் உமிஉண்டு. செம்பு என்று உண்டாயிற்றோ, அன்றே அதன்பால் களிம்பு உண்டு. நெல்லில் உமியும் செம்பில் களிம்பும்போல, உயிர்களின்பால் தொன்றுதொட்டே கலந்து அறியாமையை விளைவித்துவருவது ஆணவ மலம். 'சித்து அசித்து' என்னும் பொருள்பட 'ஆன்மா' என வழங்கப்பெறும் உயிர்களைப் பெத்தநிலையிற் சூக்கும தேகத்திற் கட்டுப்

படுத்தி அவற்றைச் சிற்றறிவும் சிறுதொழிலும் உடையவாக்கி அணுத்தன்மைப்படுத்தும் காரணம்பற்றி, இதற்கு ஆணவமலம் எனப் பெயர் வழங்குவதாயிற்று.

ஆணவமலத்திற்கு இருவகை ஆற்றல் உண்டு. ஒன்று மறைக்கும் ஆற்றல் (ஆவாரக சக்தி); மற்றொன்று கீழ்நோக்கிச் செலுத்தும் ஆற்றல் (அதோநியாமிகாசக்தி). முன்னையது ஆணவமலத்திற்குச் சிறப்பியல்பு (சொருப லட்சணம்); பின்னையது அதற்குப் பொது வியல்பு (தடத்தலட்சணம்). ஆணவ மலத்தின் மறைப்பாற்றலால் உயிர் தன்னையும் அறியாது, சிவத்தையும் அறியாது; ஆணவத்தையும் அறியாது.

ஆணவமலத்தின் கீழ்நோக்கிச் செலுத்தும் ஆற்றல், மோகம் மதம் அராகம் கவலை தாபம் வாட்டம் விசித்திரம் என ஏழுவகைகளிற் செயற்படும் என்பர் சிவஞானசுவாமிகள். அருள்நந்திசிவம் தமது இருபா இருபஃதில், மோகம் அஞர் மதம் நகை விகற்பம் கற்பம் குரோதம் கொலை என ஆணவ மலத்தின் செயல்களை எட்டாகக் குறிப்பிட்டுள்ளார்.

"ஒன்றதாய், அனேக சத்தி
உடையதாய், உடனாய், ஆதி
அன்றதாய், ஆன்மா வின்றன்
அறிவொடு தொழிலை ஆர்த்து
நின்று, போத் திருத்து வத்தை
நிகழ்த்திச்செம் பினிற்களிம்பு
ஏய்ந்து,
என்றும்அஞ் ஞானம் காட்டும்
ஆணவம் இயைந்து நின்றே"

—சிவஞானசித்தியார்.

ஆசிரியர் மெய்கண்டார், தமது சிவஞான போதத்தின் முதல் நூற்பாவில், "ஒடுங்கி மலத்துளதாம்" எனவும், நான்காம் நூற்பாவில் "சகசமலத்துணராது" எனவும் ஆணவமலத்தின் இயல்பினைச் சுட்டியுள்ளார். ஆன்மாவோடு உடன்தோற்றம் (சகசம்) பெற்று நின்று அறியாமை விளைவித்து, அது கருவிகளோடு கூடி நனவு கனவு உறக்கம் பேருறக்கம் உயிர்ப்படக்கம் என்னும் ஐந்தவத்தை உறுதற்கு ஏதுவாக இருப்பது, ஆணவமலம் என நூல்கள் விளக்கும்.

## (2) கன்மமலம் :

கன்மம் என்பது தமிழில் வினை எனப்படும். வினை என்பதொன்றில்லை என, உலகாயதர்கள் மறுத்தழித்துக் கூறுவர். எனினும் இந்திய நாட்டுப் பழம் பெரும் சமயங்கள் பலவும், வினை உண்டென்றே கொண்டு உடன்படுகின்றன. உயிர்கள்பால் பிறவி-நிலை-அறிவு-வாழ்க்கைத் திறன் முதலியவற்றில், எத்தனையோ பற்பல வேறுபாடுகள் அமைந்திருப்பதைக் காண்கின்றோம். இவ்வேறுபாடுகட்குக் காரணம் எதுவோ, அதுவே வினை எனப்படும். அடுத்து முயன்றாலும் ஆகுநாளன்றி எடுத்த கருமங்கள் ஆகாமைக்குக் காரணம் எதுவோ, அதுவே வினையாகும். வினையென்பதொன்றில்லையாயின், அற நூல்கள் விதித்தன செய்தலானும், விலக்கியன ஒழிதலானும் பயனின்றாய் முடியும். நாடோறும் நாம் இன்ப துன்பங்களை மாறி மாறி எய்துகின்றோம். நாம் அடையும் இன்ப துன்பங்களுக்குக் காரணம் வினையே என்பது நூல்களின் துணிவு. நாம் செய்யும் செயல்கள் நல்லனவாக இருப்பின் நல்வினை என்றும், தீயனவாக இருப்பின் தீவினையென்றும் அமையும். இவற்றின் பயன்கள் முறையே இன்ப துன்பங்களாக நமக்கு வரும். மனம் மொழி மெய் என்னும் மூன்றனாலும் நாம் வினைகளைச் செய்கின்றோம். அவ்வினைகளின் பயனை நாம் அனுபவித்தே கழித்தல் இயலும். வினையானது தொகுவினை (சஞ்சிதம்), நுகர்வினை (பிராரத்தம்) வளர்வினை (ஆகாமியம்) என மூன்று வகைப்படும். தொகுவினையும் வளர்வினையும், தீக்கையினாலும் ஞானத்தினாலும் நீங்கும். நுகர்வினையை நாம் அனுபவித்தே கழித்தல் வேண்டும். வினையானது தன்பயனைக் கொடுக்குங்கால், உயர்ந்தோர் தாழ்ந்தோர் கற்றார் கல்லார் செல்வர் வறியர் முதலிய வேற்றுமைகளைப் பாராமல், தனக்குரிய காலத்தில் வந்து தனது பயனைத் தந்தே தீரும்.

"வினையெனப் படுவது வேற்றுமை
கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்"*

எனத் தொல்காப்பியர் வினையின் இயல்பைத் தம் நூலில் அழகுறக் குறிப்பிட்டுள்ளார். பண்டைத் தமிழ் மக்களின் 'வினைக்கொள்கை' பற்றி இந்நூற்பாவால் இனிதுணரலாம்.

தன்மமோ டதன்மம் ஆகித்
தான்இரு பயனும் தந்து
நன்மைதீ மையினும் இன்பத்
துன்பினும் நாடிக் காண
முன்னமே ஆன்மா வின்றன்
மும்மலத் தொன்ற தாகிக்
கன்மமும் மூலங் காட்டிக்
கான்மிய மலமாய் நிற்கும்.
—சிவஞானசித்தியார்

இருவினை அநாதி; ஆதி
இயற்றலால், நுகர்வால் அந்தம்
வரும், மலம் சார்ந்து மாயா
உருவுகள் மருவி யார்த்துத்
தருசெயல் முறைமை யாலே
தான்பல பேதங் காட்டி
அருவதாய் நின்று, அரன்றன்
ஆணையின் அமர்ந்து செல்லும்.
—சிவஞானசித்தியார்

### 3. மாயாமலம்:

வினை உண்மை பெறப்படவே, அதற்குப் பற்றுக்கோடாகிய மாயை உண்மையும் பெறப் படும். மா என்பது ஒடுங்குதல், யா என்பது தோன்றுதல். எல்லாப் பொருள்களும் ஒடுங்கு தற்கும் தோன்றுதற்கும் காரணமானது எதுவோ, அதுவே மாயை எனப்படும். உயிர் களுக்கு உரிய உடல் கருவி உலகு நுகர்ச்சி (தனு கரணம் புவனம் போகம்) என்பன, மாயையிலிருந்தே தோன்றுகின்றன என்பது சைவ சித்தாந்தம்.

1. சௌத்திராந்திகர், உலகம் சார்பில் தோன்றும்; காரிய காரணங்கள் இரண்டும் அநித்தியம் என்பர். அநித்தியமாகிய உலகம் தோன்றுதற்குக் காரணமாகிய மாயை நித்தப் பொருளாகும்.

2. பூதங்களும் பரமாணுக்களும் உருவ மாகவே இருக்கும். அவற்றினின்றே உலகம் தோன்றும் என, உலகாயதரும் நையாயிகரும் கூறுவர். உருவமாகிய உலகம், அருவமாகிய மாயையிலிருந்தே தோன்றுகின்றது.

3. சத்துவம் இராசதம் தாமதம் என்னும் முக்குணங்களிலிருந்து உலகம் உதிக்கும் என்பர் சாங்கிய நூலார். அம்முக்குணங் களுக்கும் மூலமாய் ஏகநிலையாயிருப்பது மாயை.

4. உலகம் சூனியத்தினின்று தோன்றிய தென மாத்தியமிகர் கூறுவர். உண்மையான் நோக்கினுல், மாயை என்னும் நுண்ணிய உள்பொருளே இவ்வுலகத்திற்கு விதையாய்த் திகழ்கின்றது.

5. சிவாத்துவித சைவர், இறைவனின் சிற் சக்தியே உலகமாய் விரிந்தது என்பர். சித்துப் பொருள் அசித்துப்பொருள் ஆதல் பொருந்தா மையின், அசித்தாகிய மாயையினின்றே உலகம் தோன்றிற்றுதல் வேண்டும் என்பது தெளிவு.

6. வைசேடிகர் பரமாணுக்கள் வியாபகமாய் உள்ளன; அவையே உலகிற்குக் காரணம் என்பர். பரமாணுக்களும் ஒருவகையில் காரியப் பொருள்களேயாம். ஆதலின் அவற்றிற்கும் காரணமாய் நிற்கும் மாயையே எல்லாவற்றிலும் வியாபித்து நிற்கும்.

7. பிரமப் பொருளே உலகமாய்ப் பரிணமிக் கும் என்பர் பாற்கரியர். சித்தாகிய பிரமம் சடமாகிய உலகமாகப் பரிணமித்தல் பொருந் தாது. உலகிற்குக் காரணமாய்த் திகழ்வது

---

*"The philosophic meaning of this Sutra is distinct. The Karma does not transform with the transmigration of souls but remains intact and lies dormant waiting for the proper time according as the karma is Akamiya or Prarathva or Sanchitha"

—P. V. Manickam Naicker,
B.E.,M.C.L.,
The Mystic Aspect of the Tamil Alphabet, p 27

சடப்பொருளாகிய மாயையே. அது இறைவனுக்கு உரிய வைப்புத்துணை (பரிக்கிரகசக்தி) என விளங்கும்.

8. இத்தகைய மாயை சொல்லொணுதது (அநிர்வசநீயம்) என்பர் சிலர். அது பொருந்தாது. மாயையே உயிர்களுக்குத் தனுகரண புவன போகங்களைத் தருகின்றது. இருளில் செல்பவருக்கு ஒளி நல்கும் விளக்கைப்போல ஆணவ மலத்தில் அழுந்தியுள்ள உயிர்களுக்கு ஒரு சிறிதேனும் அறிவு விளக்கத்தைத் தந்துதவுவது மாயையேயாகும். 'நான் இன்புறுகின்றேன் வருந்துகின்றேன்' என, ஒரோவழி உயிரை அவ்வுணர்வுகளில் அழுந்தச் செய்தல்பற்றி, மாயையை 'மயக்கமும் செய்யும்' என்றும், மலம் என்றும் நூல்கள் நுவலும்.

நித்தமாய் அருவாய் ஏக
நிலையதாய் அகிலத் துக்கோர்
வித்துமாய் அசித்தாய் எங்கும்
வியாபியாய் விமல னுக்கோர்
சத்தியாய்ப் புவன போகம்
தனுகர ணமும் உயிர்க்காய்
வைத்ததோர் மலமாய் மாயை
மயக்கமும் செய்யும் அன்றே.

—சித்தியார்

## மும்மலங்கள் :

ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களாற் பற்றப்பட்டு; அவற்றில் அழுந்திக் கிடக்கும் உயிர்களின் நிலையை ஒருவகையில் நெல்லுக்கு ஒப்பிடலாம். நெல் என்பது அரிசி உமி தவிடு முளை என்பன சேர்ந்த ஒன்ருகும். உமி தவிடு முளைகள் அரிசியின் உண்மை வடிவை மறைக்கின்றன. அதுபோல ஆணவம் மாயை கன்மங்கள், உயிரின் உண்மை இயல்பைத் தடைசெய்கின்றன. உமி ஆணவ மலம், தவிடு மாயை, முளை கன்மம் எனக் கூறலாம். உமியானது அரிசியின் வடிவம் தெரியாமல் அதை முழுவதும் மறைத்தல் போல, ஆணவ மலம் உயிரின் இயல்பை முழுவதும் மறைக்கின்றது. தவிடு அரிசியின் தன்மையைச் சிறிது விளக்குதல் போல, மாயையும் உயிரறிவைச் சிறிது விளங்கச் செய்யும். முளை தோன்றுங்கால் அரிசியின் வடிவம் விளங்காது; அதுபோலக் கன்மமாகிய நல்வினை தீவினைகள் செய்யப்படுங்கால், உயிர் அவ்விருவினையின் வயப்பட்டு உணர்விழந்து மயங்கி நிற்கும்.

"மும்மலம் நெல்லி னுக்கு
முளையொடு தவிடு உமிப்போல்,
மம்மர்செய்து அணுவின் உண்மை
வடிவினை மறைத்து நின்று,
பொய்ம்மைசெய் போக பந்த
போத்திருத் துவங்கள் பண்ணும்;
இம்மலம் மூன்றி ேேடும்
இருமலம் இயைப்பன் இன்னும்".

—சித்தியார்

உயிர்க்கு வினை முதலாந் தன்மை (போத்திருத்துவம்), வினைவிப்பது ஆணவமலம். உடல் கருவி உலகு நுகர்ச்சிகளை அளிப்பது மாயா மலம். இன்பதுன்பங்களை நுகர்விப்பது கன்ம மலம். உயிர்களைக் கட்டுப்படுத்தும் வகையால், இவை பிற்கட்டு (அநுபந்தம்), நற்கட்டு (சம்பந்தம்). எதிர்க்கட்டு (பிரதிபந்தம்) எனப்படும்.

உயிர் தோன்றிய அன்றே, அதனேடு உடன் பிறந்தது (சக + சம்) ஆதலின், ஆணவமலத்திற்குச் சகசமலம் என்றும், உயிரின் எல்லாத் துன்பங்களுக்கும் மூலகாரணமாதலின், மூல மலம்என்றும் பெயர் வழங்கும். ஆணவ மலத்தினின்று உயிர்கள் தப்பி உய்வதற்கு, உடல் கருவி முதலியனவாகத் துணைபுரிவது மாயா மலம். உடல் கருவி முதலியவற்ருல் இன்ப துன்பங்களை நுகரச் செய்வது கன்மமலம். இவை இரண்டும் ஆணவ மலத்திற்குப் பின்னர் இடையே வருவதனுல், ஆகந்துக (இடையில் வருகின்ற) மலங்கள் எனப்படும்.

உயிரின் அறிவைத் தடைசெய்வதனுல், ஆணவம் எதிர்க்கட்டு (பிரதிபந்தம்); உயிரின் தடையுண்ட அறிவை ஒரு சிறிது விளங்கச் செய்ய உதவுவதனுல், மாயை நற்கட்டு (சம்பந்தம்); உயிர் உடல் கருவிகளைப் பெற்ற பின், உயிர்க்கு இன்பதுன்பங்களைத் தருதற்கு வருவதனுல் கன்மம் பிற்கட்டு (அநுபந்தம்) என்று சொல்லப்படும்.

இம்மும்மலங்களோடு, மாயேயம் திரோதாயி என்னும் வேறு இரு மலங்களையும், சேர்த்து எண்ணிப் பாசங்களாகிய மலங்கள் ஐந்து என்றும், நூல்கள் கூறும். காலதத்துவம் முதல் பிருதிவி ஈருன தத்துவங்களும், புவனங்களும், புவனத்துப் பொருள்களும் மாயேயம் எனப்படும். இதனை 'புவனபோகச் செயல் ஆரும்

மாமாயைத் திரட்சி' என்பர் உமாபதி சிவம். மாயை உயிரறிவை மயக்கும்; மாயேயம் அம் மயக்கத்திற்கு முன்னிலைப் பொருளாய் இருக்கும்.

திரோதாயி என்பது, ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மலங்களையும் செலுத்தி, உயிரின் அறிவு இச்சை செயல்களை மறைக்கும்படி செய்வது. "ஏயும் மும்மலங்கள் தத்தம் தொழிலினை இயற்ற ஏவும் தூயவன் தனதோர் சக்தி திரோதான கரியது" என்றபடி, இறைவனின் திருவருளாகிய சக்தியும், கட்டுநிலையில் உயிரறிவை மறைக்கும். அதுபற்றி அதற்கு மறைப்பாற்றல் (திரோதான சக்தி) எனப் பெயர் வழங்கும். மலம் பக்குவம் எய்திய நிலையில் இம் மறைப்பாற்றலே அருளாற்றலாக மாறி, நலம் விளைவிக்கும். இவ்வுண்மையினையே மணிவாசகர், "பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை" என்னும் திருவெம்பாவைத் தொடரால் புலப்படுத்தியருளினர். "பாகம் மிக உதவு திரோதாயி" என்றும், "முற்சினம் மருவு திரோதாயி கருணையாகித் திருந்திய சத்திநிபாதம் திகழும்" என்றும் உமாபதிசிவம் குறிப்பிடுவர். இங்ஙனம் மாயேயம் திரோதாயி என்னும் இரண்டையும் சேர்த்து, மலங்கள் ஐந்தெனவும் கூறுவதுண்டு.

மலம் மாயை கன்மம் மாயேயம்
  திரோதாயி மன்னிச்
சலமாரும் பிறப்பு இறப்பில்
  தங்கி, இத் தரைகீழ் மேலும்
நிலையாத கொள்ளி வட்டம்
  கறங்கென நிமிடத் தின்கண்
அலமாரும்; இறைவன் ஆணையினல்
  உயிர் நடக்கும் அன்றே.

இறை உயிர் தளை என்னும் மூன்றும், நிறைவு (வியாப்தி) உடைய பொருள்கள். நிறைவு மூன்று வகைப்படும். மேலிடு நிறைவு (வியாபக வியாப்தி), உட்படு நிறைவு (வியாப்பிய வியாப்தி), நிகர் நிறைவு (சமவியாப்தி) என்பன அவை.

இறைவன் ஏனையவற்றைத் தம்முள் அடக்கித் தாம் அவற்றில் அடங்காமல் யாண்டும் நீக்கமறப் பரவியிருக்கின்றார். அது மேலிடு நிறைவு. மாயை கருமங்கள் உயிரில் அடங்கியிருப்பன. அஃது உட்படு நிறைவு. ஆணவம் உயிருக்கு மேலிடு நிறைவாயின் உயிர் வீடுபேறு அடையாது. உட்படு நிறைவாயின் உயிரைக் கட்டுப்படுத்தாது. ஆதலின் உயிரும் ஆணவமும் தம்முள் நிகர் நிறைவு உடையனவாகும். கடல், கடல்நீர், கடல் உப்பு என்பனவற்றை முப்பொருளுக்கு உவமையாகக் கொள்ளலாம். கடல் சிவம், கடல்நீர் உயிர்கள், கடல்நீரில் கலந்துள்ள உப்பு ஆணவமலம் என்றல் பொருந்தும். கடல் நீரும் உப்பும் நிகர் நிறைவுப் பொருள்கள். கடல் நீரும் உப்பும் பண்டே கலந்திருப்பன வாயினும் பிரியும் தன்மையுடையவை. அதுபோல, உயிரில் ஆணவம் பண்டே ஒன்றிக் கலந்து நிற்பினும், உயிரினின்று ஆணவம் அகன்றொழியற் பாலது. ஆணவம் அகன்றால், மாயை கன்மங்களும் தாமே அகன்றுவிடும்.

## தளை நீக்கம்

இங்ஙனம் மும்மலங்கள் எனப்படும் தளைகளை விடுவித்து, மக்களை உய்யச் செய்வதே, சமய நெறிகளின் நோக்கமாகும். சமய நூல்கள் பலவும் தளையாகிய மலங்கள் நீங்கி ஒழிதற்குரிய வழிகளை விளக்குவனவே ஆகும். புராணங்களும் சாத்திரங்களும், மலநீக்கத்திற்குரிய வழிமுறைகளை வகுத்து உரைப்பனவே ஆகும் எனலாம்.

(1) புராணங்களுள் சிவபிரான் செய்தனவாகப் பலவீரச் செயல்கள் குறிப்பிடப்பெறும். அவைகளுள் முதன்மையானவை எட்டு. அவ் எட்டு வீரச் செயல்கள் நிகழ்ந்த தலங்களே அட்டவீரட்டானம் (வீரத்தானம்) என வழங்கும். 'அட்டானம் என்று ஓதிய நாலிரண்டும்' என்பர் நாவுக்கரசர். அவற்றுள் மிகப் பழமையானது ஆகிய முப்புரம் எரித்த வரலாறு, மும்மல நீக்கத்தைக் குறிக்கும் உருவகமே ஆகும். அதனை ,

அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புரம் ஆவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யார்அறி வாரே"

எனத் திருமூலர், தமது திருமந்திரம் என்னும் என்னும் சிறந்த நூலில் அருளிச் செய்திருத்தல் காணலாம்.

(2) மற்றும் சிவபுராணங்களுள் தலைசிறந்த ஒன்றாகிய கந்தபுராணத்தின் கருத்தும், மும்மலமாகிய தளைநீக்கம் குறித்ததே ஆகும்.

சூரபதுமன் சிங்கமுகன் தாரகாசுரன் என்பவர் களை அழித்து, அவர்களாற் சிறை செய்து துன்புறுத்தப்பட்டு வந்த தேவர்களை, முருகப் பெருமான் சிறைவிடுத்துக் காத்தருளினுன் என்பதே கந்தபுராண வரலாறு. சூரபதுமன் ஆணவம். சிங்கமுகன் மாயை. தாரகாசுரன் கன்மம். தேவர்கள் இம்மும்மலங்களாற் கட்டப்பெற்ற உயிர்த் தொகுதிகள். அஞ் ஞானத்தை ஞானம் வெல்லும். ஆணவம் என்னும் அஞ்ஞானமாகிய சூரபதுமனை, முருக னின் ஞான சக்தியாகிய வேல் வெற்றி கொண்டது.

முத்திநிலையிலும் நித்தியப் பொருளாகிய ஆணவம் அழிவதில்லை என்பது சைவசித்தாந் தம். அதன்படியே, சூரபதுமன் அழியவில்லை. கட்டு நிலையில் துன்பத்தைக் கொடுக்கும் இயல் பினதாகிய ஆணவமலம், வீட்டு நிலையில் உயிர்க்கு இன்பத்தை விளைவிப்பதாக அமையும் என்பது, தத்துவ நூற்கொள்கை. அம்முறை யில் பகைவனுக இருந்த சூரபதுமன் அடியவ னுக மாறினுன். ஆணவமலம் மறைப்புத் திறன், கீழ்ச்செலுத்தும் திறன் என்னும் இரு வகை ஆற்றல்களை உடையது என்பர். அதனுலேயே சூரபதுமனும் இரு கூருகப் பிளந்து சேவற்கொடியும், மயில் ஊர்தியுமாக அமைந்தான். முருகனை வழிபட்ட தேவர்கள் உய்ந்து நலம் பெற்றுர்கள். தன்னையே விரும்பிப்போற்றி வழிபடும் பக்குவம் மிக்க நல்லுயிர்க்கு, இறைவன் எளிவந்து அருள் செய்தலையே வள்ளியம்மையின் வரலாறு தெள்ளிதின் நயம்மிக உணர்த்துகின்றது.

(3) சேக்கிழார் பெருமான் அருளிய பெரிய புராண வரலாறு ஒன்றில் வைத்தும், மும்மல மாகிய தளைநீக்கம் பற்றிய கருத்துக்களை விளக்குதல் கூடும். பெரியபுராணத்துள் எறிபத்தநாயனுர் வரலாறு, யாவரும் அறிந்த தொன்று. கருவூரில் ஆனிலை என்னும் கோயி லில் விளங்கும் பசுபதீசுவரருக்குச் சிவகாமி ஆண்டார் என்பவர் பூத்தொண்டு செய்து வந்தார். வழக்கம்போல் பூப்பறித்துத் தொகுத்த பூக்குடலையை ஒருகழியிற் கோத்துத் தோளில் வைத்து அவர் சென்றுகொண்டிருந்த பொழுது, உவாநாளில் நீராட்டுவிக்கக் காவி ரிக்கு அழைத்துச் செல்லப்பெற்ற சோழமன்ன னின் பட்டத்துயானை, மதங்கொண்டு சிவகாமி ஆண்டாரின் பூக்குடலையைப் பறித்துவீசி, மலர்களைச்சிதறி அவற்றை மிதித்துச்சென்றது. அதுகண்ட எறிபத்தர் யானையையும், பாகர் களையும், பரிக்கோற் காரர்களையும், தமது மழுப் படையால் தடிந்து கொன்றுர். அதுகேட்ட அரசன் முதலிற் சினந்தெழுந்து வந்து, பின்னர் செய்தியறிந்து தன்னைத் தண்டிக்குமாறு எறிபத் தரை வேண்டினுன். இறையருளால் பின்னர்ப் பாகரோடு யானை உயிர் பெற்றெழுந்தது என் பது வரலாறு.

இதன்கண் கருவூர் உடல். ஆனிலை என் னும் கோயில், புருவநடு. அங்குள்ள பசுபதி ஈசுவரர், சிவபிரான். சிவகாமியாண்டார், பக்கு வம் எய்திய நல்லுயிர். பூக்குடலை மனம். பூக்கள், கொல்லாமை ஐம்பொறியடக்கம் பொறுமை இரக்கம் அறிவு மெய் தவம் அன்பு என்னும் எண்வகை நல்லெண்ணங்கள். சிவகாமியாண்டார் தமது மலர்க்கையில் கொண்டுசென்ற தண்டு, யோகப்பயிற்சிக்குரிய வீணுதண்டு. யானை ஆணவமலம். பாகர், இருவரும் இருவினைகள். பரிக்கோற்காரர் மூவரும், சுத்தம், அசுத்தம் சுத்தாசுத்தம் என்னும் மூவகை மாயைகள். சோழ அரசன் திரோதானசத்தி. எறிபத்தர், ஞானுசிரியர். அவர் தாங்கியிருந்த பரசு ஞானம் என்னும் வாள், என இங்ஙனமெல்லாம் உள்ளுறைப் பொருள் கொள்ளவும், பற்பல குறிப்புக்கள் சேக்கிழார் சுவாமிகள் பாடிய பெரிய புராணச் செய்யுள் களில் அமைந்துள்ளமை காணலாம்.

(4) அம்பிகை மகிடாசுரவதம் செய்ததும் விநாயகர் கயமுகாசுரனை வென்றதும் ஆகிய செய்திகளும், ஆணவ மல அழிப்பைக் குறிக் கும் கருத்துடையனவே ஆகும்.

### மலநோய்:

உயிர்களைத் தளைசெய்துள்ள மும்மலங்கள், நோய் எனவே நூல்களிற் கூறப்படும். ஐ வளி பித்து என்னும் மூன்றினுல், உடலுக்கு நோய் ஏற்படுகின்றது. அதுபோல ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மலங்களினுல் உயிர்க்குப் பிறவிநோய் உண்டாகின்றது. உடல் நோயைத் தீர்க்கவல்லார் வைத்தியர் எனப்படுவர். உயிரின் பிறவிநோயைத் தீர்க்கவல்லவன் வைத்தியநாதப் பெருமானேயாவான்.

வைத்தியநாதன் :

மக்களாகிய நாம் நோயாளிகள். மும்மலங்களால் நமக்குப் பிறவிநோய் ஏற்பட்டுள்ளது. அந்நோய் நீங்குவதற்குரிய வைத்தியச் செயல் முறைகள், சரியை கிரியை யோக ஞானங்கள். வேதசிவாகமங்கள், அம்முறைகளை விளக்கும் வைத்திய நூல்கள். அவற்றை அருளிச் செய்தவன், வைத்தியநாதன் ஆகிய சிவபெருமான். நாம் செய்யும் பாவபுண்ணியங்களைத் தீர்க்க முறையே நரகம் சுவர்க்கம் ஆகிய மருந்துகளை அவன் ஏற்றபெற்றி அளிக்கின்றான்.

அருளினால் உரைத்த நூலின்
வழிவாராது அதன்மம் செய்யின்,
இருள்உலாம் நிரயத் துன்பத்து
இட்டு, இரும் பாவம் தீர்ப்பன்;
பொருள்உலாம் சுவர்க்கம் ஆதி
போகத்தாற் புணியம் தீர்ப்பன்;
மருள்உலாம் மலங்கள் தீர்க்கும்
மருந்து, இவை; வைத்தியன், நாதன்.

என்பது சிவஞானசித்தியார். இறைவனைப் பலவகைகளிற் கூறும் இருக்குவேதம் அவனைப் பலவிடங்களில் ஆங்காங்கே 'வைத்தியநாதன்' என்று புகழ்ந்தோதிப் போற்றுகின்றது.

மணிமந்திர மருந்து :

அவ் இருக்குவேதம் வழிபட்டுச் சிறப்புற்ற புள்ளிருக்கு வேளூர் என்னும் தலத்தில், எல்லாம் வல்ல நம் சிவபிரான் 'வைத்தியநாதன்' என விளங்கி, வழிபடும் அடியவர்களுக்குத் தீரா நோய்களை எல்லாம் தீர்த்தருளி வருகிறான். வைத்தியர்கள் மணிமந்திரம் மருந்து என்னும் மூன்று பொருள்களைக் கொண்டு நோய்களைத் தீர்ப்பர். சிவபெருமானும் உருத்திராக்கம் ஆகிய மணியும், திருவைந்தெழுத்து ஆகிய மந்திரமும், திருநீறு ஆகிய மருந்தும் கொண்டு, நம்மனோரின் உடல்நோய் உயிர்நோய்களைத் தீர்த்து அருள்புரிகின்றான். "பிரிவிலா அடியார்க்கு என்றும் வாராத செல்வம் வருவிப்பான் தீரா நோய் தீர்த்தருளுவான்" என்பது திருநாவுக்கரசர் திருத்தாண்டகம்.

சைவசித்தாந்தத்தில் தளையியல் பற்றிய பகுதியில், தத்துவங்களின் தோற்ற ஒடுக்கங்கள் பற்றியும், இயல் செயல்கள் பற்றியும், விளக்கப்பெற்றிருக்கும் திறம், நம் மனித வாழ்வியல் உண்மைகளை முற்றிலும் தழுவி அமைந்துள்ளது. சாங்கியம் யோகம் பாஞ்சராத்திரம் ஆகிய மதங்கள் 24 தத்துவங்களையே குறிப்பிடுகின்றன. ஆனால் மெய்கண்ட நூல்களோ தத்துவங்களை 36 என்று ஆராய்ந்து விளக்குகின்றது. அவற்றினையே மேலும் விரித்து 96-ஆக உணர்த்துகின்றது. இத்தத்துவத்தொகுதி விளக்கங்கள் அறிஞர்களால் பெரிதும் பாராட்டிப் போற்றப் பெறுகின்றன.

இத்தத்துவத் தொகுதி பற்றிய விளக்கங்கள் மட்டுமேயன்றி, பாச நீக்கமாகிய தளை ஒழிப்புச் செய்து, இறையருட்பேறு எய்துதற்குரிய சரியை கிரியை யோக ஞான நெறிகள் ஆகிய நடைமுறைக்கேற்ற வழிவகைகளை வகுத்தமைத் திருத்தலும், மெய்கண்ட நூல்களின் மேன்மைக்குச் சான்று பகர்கின்றன. வாழ்வியல் உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு மெய்கண்ட நூல்களின் தத்துவ நுண்பொருட் கருத்துக்கள் செவ்விதின் ஆய்ந்து தெளிவுற வகுக்கப்பெற்றிருப்பதினாலேயே, இந்தியத் தத்துவக் கடவுட் கொள்கையுணர்வு தனிப்பெருஞ் சிறப்புற்றுத் தலைசிறந்து விளங்குகின்றது.

—ஆசிரியர்

---

(1) "The unique position of Saiva Siddhanta in the history of thought is the fact that it expounds by careful reflection the systematic account of the process of cosmic evolution which attempts to comprehend the universe as a sum total of 36 Categories. This exposition is no mere metaphysical speculation but is purely logical account on scientific principles"

—THEOS BERNARD.

(2) "The superiority of the Saiva Siddhanta is thus established through its consideration of catagories not known to other systems."

—Prof. S.S. Suryanarayana Sastri.

(3) "The most courageous attempt to transcend this bondage is that of the Saiva Siddhanta system, a system which for that reason we may pronounce the noblest among Indian theisms."

—Rev. Nicol Macnicol, M.A., Litt. D.

# தமிழ் செய்த திருமூலர்

மாட்சிமிகு திரு. எஸ். மகராஜன் அவர்கள், B.A., B.L.
நீதிபதி, உயர்நீதிமன்றம், சென்னை.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்தவர் திருமூலர் என்று சொல்லுகிறார்கள். குறைந்த பட்சம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னுவது அவர் இருந்திருக்கவேண்டும் ஆனால், அவர் சிருட்டி உற்சாகத்தோடும், கவிதா காம்பீர்யத் தோடும் பாடியிருக்கும் உண்மைகள் ஆருத புதுமையோடு, இன்றும் நமது இதயத்தைத் தொட்டுப் பேசுகின்றன; இதயக் கல்லைப் பிசைந்து கனியாக்கும் அமர கீதங்களே அவரது பாட்டுகள்.

மனித வாழ்க்கைன் அமர்மங்களையும், சிருட்டியின் ரகசியங்களையும் அறியாத நமக்கு, ஏதோ, கண்ணைக் கட்டிக் காட்டிலே விட்ட மாதிரியல்லவா இருக்கிறது? எங்கிருந்து வந்தோம், எதற்காக வந்தோம், எங்கே போகிறோம் என்றே புரியவில்லை. மலைமலையாக வருகிறது துன்பமும், துயரமும். அதையெல்லாம் சமாளிக்க முடியாமல் அலமந்து அலறுகிறோம். பாழும் வாழ்க்கையிலே புளிப்பும் கசப்பும் வெறுப்பும் தட்டிவிடுகிறது. 'மனித சரித்திரம் ஓர் அர்த்தமற்ற பொம்மலாட்டம் போல, காரியத் தொடர்பற்ற பைத்தியக்காரக்கனவைப் போல, தாளமில்லாத கூளத்தைப் போலக் காட்சியளிக்கிறது.

ஆனுல், திருமூலருக்கோ நம்மை ஆட்கொண்ட மருட்சியும், மயக்கமும் லவலேசமுங் கூடக் கிடையாது. நம்மைத் திணறடிக்கிற திரையிருக்கிறதே, அதை எப்படியோ கிழித் தெறிந்துவிட்டு, அதற்கு அப்பாலுக்கப்பாலா யிருக்கும் மூடு மர்மத்தை அவர் எட்டிப் பார்த்து விட்டார். காரண காரியத் தொடர்பு பளிச் சென்று தெளிவாகி ட்டது. வாழ்க்கையை விளைவித்த வித்து எது என்பதை அறிந்தார். இன்ப துன்ப வளையத்தை நொறுக்கித் தகர்த்து, காலச் சக்கரத்தின் சுழற்சியை மீறி, விடுதலை பெற்று விசுவ வெளியையடையும் மார்க்கத்தைக் கண்டார். பெருமறைகள் கூச்சத் தால் பேசாது மறைந்த உண்மைகளை விளம்பரப் படுத்தினுர். இசை வடிவாயிருக்கும் ஆனந்தக் கூத்தனது பண்புகளைத் தெய்வீகக் கவிதை யிலே வடித்து உருவாக்கினுர். பாடவல்லார் நெறியைப் பாடியும், ஆடவல்லார் நெறியை ஆடியுந்தானே காட்ட முடியும்? இந்த ஆடல் பாடலிலே உதயமானதுதான் திருமந்திரம் என்ற நூல்.

சாதாரணமாக, உலகத்திலே சௌந்தர்ய உணர்ச்சி மங்கிக் குரூரமும், அலங்கோலமும் அதிகரிக்கும்போது, கடவுள் ஒரு கவிஞனைத் அதன் தூதனுக னுப்புகிறுர். அழகின் தத்துவத்தை நிலைநாட்டுவதற்காக; அன்பு நெறி மறைந்து மனித சமுதாயத்தில் மிருகபுத்தி தாண்டவமாடும்போது, ஒரு புத்தனைத் தன் தூதனுக அனுப்புகிறுர். காருண்யத்தை நிலை நாட்டுவதற்காக; சமய உணர்ச்சி வறண்டு, கடவுள் ஞானமற்று, உலகம் அந்தகாரத்தில் அமிழ்ந்து கிடந்தபோது, இறைவன் திருமூலரைத் தன் தூதனுக அனுப்பிச் செம்மை நெறியைப் பரப்பினுர் என்றுதான் சொல்ல வேண்டும். தான் செய்ய வந்த பணி இன்னது என்பதைத் திருமூலரே மிகுந்த நிச்சயத் தோடும், துணிச்சலோடும் சொல்லுகிறுர் :

> " என்னை நன்ருக இறைவன் படைத்தனன்,
> தன்னை நன்ருகத் தமிழ்செய்யு மாறே"

இவ்வளவு ஞானமும், தெளிவும், நுட்பமும் 'உனக்குக் கொடுத்திருக்கிருனே இறைவன் அதற்கு வேறு என்ன காரணமிருக்கமுடியும்? எல்லையற்ற டம்பப்பிரியனுகிய அவன் தனது கல்யாண குணங்களையெல்லாம் நல்ல, இனிய தமிழிலே இவன் பாடவேண்டும் என்ற நோக்கத்தோடு தானே என்னை நேர்ந்துவிட்டிருக் கிருன்? ஆகையால் பாடுகிறேன் என்று கச்சை கட்டிக்கொண்டு பாட ஆரம்பிக்கிருர்.

பாடின பாட்டு ஒன்றிரண்டல்ல, மூவாயிரம் பாடல்கள். ஆண்டுக்கு ஒரு பாடலாக, மூவாயிரம் ஆண்டுகள் இருந்து, மூவாயிரம் பாடல்கள் பாடினுர் என்பது வரலாறு. ஒவ்வொரு பாட்டும் அவ்வளவு அருமையாக இருந்தபடியால், ஒரு பாட்டு உருவாகி வெளி

வருவதற்கு ஒரு வருடமாவது பிடித்திருக்கும் என்று எண்ணி நமது முன்னோர்கள் இப்படியெல்லாம் கதை கட்டி அவரது நூலைச் சுவைத்து உபசரித்தார்கள்.

கொஞ்ச காலமாகத்தான் தமிழ் நாட்டார் திருமூலரை அடியோடு மறக்க ஆரம்பித்தார்கள். அவர் பாடல்களிலுள்ள முடிச்சுகளை அவிழ்ப்பது கடின சாத்தியமாகிவிட்டது. அவர் அடைத்து வைத்த களஞ்சியத்தைத் திறப்பதற்குத் திறவுகோலைத் தேட வேண்டியிருக்கிறது. அவரது பரிபாஷையில் பழக்கமுள்ள தமிழனே இல்லையோவென்ற ஐயம் ஏற்பட்டுவிட்டது. இருட்டறைக்குள்ளேயிருக்கும் குருட்டுக் கிழவனைப்போல இழந்த சாவியைத் தேட முயற்சி செய்கிறது இந்தக் கட்டுரை.

மனிதன் தோன்றிய காலம் முதற்கொண்டு இன்றுவரை எத்தனை எத்தனையோ தத்துவ சாத்திரிகள் இறைவனது தன்மையையும், சிருட்டி தத்துவத்தின் பண்புகளையும் கெஜக்கோல் கொண்டு அளந்துவிடலாம் என்று நம்பி அறிவாராய்ச்சித் துறையிலே இறங்கினார்கள். ஐரோப்பாவில் நியூட்டன், டார்வின் முதலியோருடைய பூத பௌதிக ஆராய்ச்சியின் விளைவாகப் பிரபஞ்சத்தின் சூட்சுமத்தைக் கண்டுவிட்டதாக மக்கள் கருதினார்கள். பிரபஞ்சம் எல்லாமே தானே இயங்கக்கூடிய ஒரு யந்திரம். அதற்கு அப்பாற்பட்ட ஒரு சக்தியின் துணையில்லாமலேயே அந்த யந்திரம் தான்தோன்றியாய் அமைந்து கொண்டது. குரூட் ஆயிலும், பெட்ரோலும் இருந்தால், மனிதன் தன்னுடைய சக்தியால், தன் இஷ்டப்படி, அந்தயந்திரத்தைத் தன் வசப்படுத்திவிடலாம் என்றெல்லாம் பகற்கனவு காண ஆரம்பித்தார்கள். ஆனால், ஐன்ஸ்டைன், ப்ளாங்க் முதலியோருடைய விஞ்ஞான ஆராய்ச்சி பத்தொன்பதாவது நூற்றுண்டுத் திமிரையெல்லாம் வேரோடு பிடுங்கி எறிந்துவிட்டது. நாம் பார்க்கிற பொருள்கள் அணுக்களாலும், பரம அணுக்களாலும் ஆனவை என்ற நம்பிக்கை போய் அவைகள் எல்லாமே ஐம்புலன்களுக்குப் புறம்பான சக்தி அலைகள் என்ற சித்தாந்தம் பிறந்தது. உலகமெல்லாம் ஒரு யந்திரம் என்ற முடிபு முறியடிக்கப்பட்டது. விஞ்ஞானிகளிடத்திலே இதற்கு முன்னில்லாத பணிவு பிறந்தது. விஞ்ஞானத்தின் சிறுமையைச் சிந்தனை செய்து பார்த்தார் ஐன்ஸ்டைன்.

"நாம் அறிந்த உலகத்தின் எல்லையில் நின்றுகொண்டு, அறியாத உலகத்தை எட்டிப் பார்க்கும்போது, அதன் பிரம்மாண்டமும், அகண்டமும் நம்மைத் திணறடிக்கிறது. நமது அறியாமையை நினைக்கும்போதே குடல் பதறுகிறது" என்று சொன்னார் அவர்.

இந்தப் பதட்டம் எல்லாம் திருமூலருக்கு ஏற்படவேயில்லை. இறைவனுடைய பரிபூரண அறிவோடு மனிதனுடைய சிற்றறிவை ஒத்துப் பார்த்தவுடனேயே அவருக்கு உண்மை துலங்கிவிட்டது. தன்னுடைய அறியாமையின் ஆழத்தையும், அகலத்தையும் உணர்ந்த மாத்திரத்திலேயே, அவருக்கு உண்மையான ஞானம் பிறந்துவிட்டது. உடனே கும்மாளம் போட ஆரம்பிக்கிறார். "நான் மூவாயிரம் பாடல்கள் பாடப்போகிறேன். எதற்காக? என்னுடைய அறிவை உங்களுக்குச் செப்பிவிடலாம் என்ற நோக்கத்தோடா? இல்லை, என்னுடைய அறியாமையை சவிஸ்தாரமாக விளம்புவதற்காக" என்று ஆரம்பிக்கிறார் திருமந்திரத்தை.

> "ஆரறிவார் எங்கள் அண்ணல் பெருமையை
> ஆரறிவார் இந்த அகலமும் நிகளமும்
> பேரறியாத பெருஞ்சுடர் ஒன்றதின்
> வேர் அறியாமை விளம்புகின்றேனே"

என்ன துணிச்சல்! அந்த ஏகாரத்திலே இருக்கும் தெம்பு எவ்வளவு! அறியாமையை உணர்ந்துவிட்டோம் என்ற தெம்புதான். ஆனால், அந்த உணர்ச்சியிலே பரிபூரண ஞானத்தின் முத்திரையை அல்லவா காண்கிறோம்!

"வேரறியாமை விளம்புகின்றேனே"

என்று நாக்கைச் சுழற்றி விழுகிறது முத்திரை.

சாக்ரடீஸ் என்ற கிரேக்க தத்துவ சாத்திரி தன்தேசத்திலுள்ள பெரியோர்கள் ஒவ்வொருவரிடமும் சென்று விடை சொல்ல முடியாத கேள்விகளைக் கேட்டு, அவர்களுடைய அறியாமையை விளக்கி வந்தார். எல்லோரும் அவருடைய விரோதிகள் ஆனார்கள், நமது அறியாமையைக் காட்டிக் கொடுக்கிறானே இவன் என்று. கடைசியாகப் பொய்க்குற்றம் சாட்டப்பட்டு நீதிபதிகள்முன் நிற்கிறார் சாக்ரடீஸ். மதத்துக்கு விரோதமாகப் பிரசாரம் செய்தார் என்பது குற்றச்சாட்டு. நீதிபதிகளும்

இவரிடத்தில் அகப்பட்டுக் கஷ்டப்பட்டார்கள். சிரச்சேத தண்டனை கொடுக்கவேண்டும் என்றே கங்கணம் கட்டிக்கொண்டுவந்திருக்கிருர்கள். மேதாவி சாக்ரடிசுக்கு விஷயம் தெளிவாகத் தெரிந்துவிட்டது. தனது கடைசிப் பிரசங்கத்தில் அவர் சொன்ஞர், "கிரேக்க தேசத்திலேயே பெரிய அறிவாளி நான் என்று டெல்பியிலிருக்கும் அசரீரி சொன்னது. ஆனல் அப்படியொன்றும் அறிந்தவன் என்று என்னைச் சொல்லிக்கொள்ள முடியாது. நமது நாட்டிலிருக்கும் பல உத்தியோகஸ்தர்களும், அரசியல் வாதிகளும் தங்களைப் பெரிய அறிவாளிகளாக மதித்து வந்தார்கள். நான் அவர்களை அணுகி வாதித்துப் பார்த்ததில் அவர்களுடைய அறியாமை வெளிப்பட்டது. இந்த நாட்டிலே நான் ஒருவன்தான் எனது அறியாமையை உணர்ந்தவன் என்று தெரிந்துகொண்டேன். ஆகவே, அந்த டெல்பியிலிருக்கும் அசரீரி வாக்கு உண்மையென்றே இப்பொழுது தோன்றுகிறது" என்ருர்.

ஆகவே தன்னுடைய அறியாமையை எப்பொழுது மனிதன் உணர ஆரம்பிக்கிருனே, அப்பொழுதே அவனுக்கு நிலையான அறிவு பிறக்கிறது. இதைத்தான் வள்ளுவர் சொன்ஞர்

"அறிதோ றறியாமை கண்டற்ருல்"

என்று. நேற்று வரைக்கும் பூமி தட்டையாக இருப்பதாக மனிதன் நினைத்து வந்தான். இன்று பூமி உருண்டையாக இருக்கிறது என்று அறிகிருன். நேற்றைய "அறிவை" இன்றைய "அறிவோடு" ஒத்துப் பார்க்கும்போது நேற்றிருந்தது அறியாமையென்று தெரிகிறது. இன்றைய அறிவை நாளைக்குக் கிட்டப்போகும் அறிவோடு ஒத்துப் பார்க்கும்போது, இன்றைய அறிவும் அறியாமைதான் என்று விளங்கும் இவ்வாறு படிப்படியாக ஒத்துப் பார்த்துக் கொண்டே போகிருன். கடைசியாக,

"சாட்டி நிற்கும் அண்டமெலாம்
சாட்டையிலாப் பம்பரம்போல்
ஆட்டுவிக்கும் அண்ணலது"

அறிவோடு தனது அறிவை ஒத்துப் பார்க்கிருன். பிறக்கிறது ஞானம்.

"ஆரறிவார் எங்கள் அண்ணல்
பெருமையை"

என்று கூத்தாடுகிருன், திருமூலரைப்போல.


அருள்திரு இராமநாத சுவாமி திருக்கோயில், இராமேசுவரம்

அறிவிப்பு

இராமேசுவரம் வருகைபுரியும் யாத்திரிகர்களைக் கோயிலுக்குள் அழைத்துச் சென்று; வசதியாகத் தீர்த்தமாடச் செய்யவும், வழிபாடு செய்து வைக்கவும், திருக்கோயில் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு வழிகாட்டிகளாகப் பணிபுரியவும் விருப்பமுள்வர்களுக்கு உரிமை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. விருப்பமுள்ள மனுதாரர்கள் இந்து மதத்தைச் சார்ந்தவர்களாகவும், நன்னடத்தை உடையவர்களாகவும், 18 வயதுக்கு மேற்பட்டு 65 வயதிற்கு உட்பட்டவர்களாகவும், தொற்று நோயால் பற்றப்படாதவர்களாகவும் இருக்க வேண்டும். இத்திருக்கோயில் அலுவலகத்தில் ரூபா 5/- செலுத்தி விண்ணப்பத்தாள்களைப் பெற்று நிறைவு செய்து, 30—11—73-ம் தேதிக்குள் சமர்ப்பிக்கவேண்டும். தக்க பரிசீலனைக்குப் பின் தகுதியுள்ளவர்களுக்கு மட்டும் உரிமை வழங்கப்படும்.

இராமேசுவரம் திருக்கோயில்

(ஒப்பம்) எஸ். பி. முனிசாமி,
நிர்வாக அதிகாரி.

# இன்பம் பெருகும் இயல்பு

திருக்குறள் பீடம் தவத்திரு குருகுலம் அழகரடிகள், மதுராந்தகம்.

"என்றும் இன்பம் பெருகும் இயல்பினல்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்றுளா ரடியாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி யுலகெலாம்"

## இன்பம்:

"இன்பமே என்னுடைய அன்பே" என்று இறைவனை நோக்கி அழைக்கிருர் மணிவாசகப் பெருமான். "இன்பம் கொடுத்தல் இறை" என்றுர் மனவாசகங்கடந்தார். இறைவன் அவருக்கு இன்பப் பொருளாக விளங்குகின்ருன். எல்லாரும் விரும்பக்கூடிய முடிவான நுகர்வு நிலை, இன்பம் என்பதுதான். இன்பம் என்பது எல்லா உயிர்க்கும் அமர்ந்து வரும் என்பது தொல்காப்பியர் கருத்து.

வீடுபேற்றில் கிடைக்கும் இன்பம் என்பது இறைவன் வழங்குவது. அது உலகப் பொருள் களில் உண்டாகும் சிற்றின்பம் அன்று. இந்தச் சிற்றின்பம் துன்பத்திற்கு இடஞ்செய்யும். 'இன்பமுண்டேல் துன்பம் உண்டு ஏழை மனை வாழ்க்கை' என்று இதனை நன்ருக விளக்கினர் நம்பியாரூரர். காரணம் உலகப் பொருள்கள் நிலையில்லாதவை. அவை நிலைமாறி உரு அழியும்போது அவைகளால் உண்டான இன்ப மும் உடன் அழிந்து விடுகிறது.

உலகம் என்பது அறியாமைப்பொருள். அதன் ஒவ்வொரு பொருளிலும் ஆண்டவனின் அறிவுப்பதிவு இருக்கிறது. பண்டங்களை நுகரும்போது அந்த அறிவுப் பகுதிதான் இன்பம் தருவது. பண்டங்கள் நிலைமாறும்போது அந்த அறிவுப் பதிவும் மறைவதனல், சக்கை யாகிய வெற்றுப் பொருள்கள் துன்பமுறக் காரணமாகின்றன. ஆதலால் உலகப் பண்டங் களில் உண்டாகும் இன்பம் சிற்றின்பமாகிறது. அச்சிறிய இன்பமும் நிலையற்று விடுகின்றது. மேலும் மேலும் அச்சிற்றின்பத்தையே நாடும் நோக்கத்தால், உலகப் பொருள்களை நச்சி, நச்சி, உயிர்களெல்லாம் பிறவியாகிய துன்ப வட்டத்தில் சுழன்று வருகின்றன. பல பிறவி களில் உழன்றபின், இதுவரையில் பண்டங்கள் மூலமாகச் சிறிது சிறிது இன்பம் தந்து வந்தது இறைவனே என்று உணரும் ஒரு தெளிவு, பதப்பட்ட உயிர்களுக்கு உண்டாகின்றது.

"எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்
எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள்
கண்டின்று வீடுற்றேன்"

என்று மணிவாசகப்பெருமான் தெளிந்து உரைத்த திருவாசகத்தால் இச்செய்தியை அறியலாம்.

இங்ஙனம் 'தெய்வம் என்பதோர் சித்தம்' உண்டானபின், பண்டங்களின் மூலமாக இறைவனது அறிவுப் பதிவை நுகரும் சிற்றின்ப வேட்கையை விட்டு, உயிர்கள் விடுதலை யாகின்றன. நேராக அப்பெருமானுடைய பேரறிவு, பேரருள் திறங்களை உணர முற்பட்டு, நிலையான இன்ப நுகர்வுக்கு அவை முன்னேறு கின்றன. இந்த இறையின்ப நிலையில் துன்பம் என்பதே இல்லை. "இன்பமே எந்நாளும் துன்ப மில்லை" என்று அப்பரடிகள் அருளியது இங்கு நினைவு கூரத்தக்கது.

## என்றும் பெருகும் இயல்பு:

இறையின்பம், துன்பம் இல்லாததாய், நிலை மாருததாய் இருக்கின்றது என்பதோடு, மற்ருெரு சிறப்பியல்பும் அதற்கு உண்டு. அதுதான் எந் நாளும் அது புதுமை புதுமையாய் வளர்ந்து கொண்டே இருப்பது. இறையின்பம் ஒரே நிலை யில் இருந்தால், எவ்வளவுதான் அது பேரின்பத் தன்மை வாய்ந்ததாய் இருந்தாலும் தெவிட்டி விடும்; நாளுக்கு நாள் நேரத்திற்கு நேரம் புதுப்புது நிலையில் ஓங்கி வளர்ந்துகொண்டே யிருந்தால் மட்டுந்தான் அது தெவிட்டாததாய் இருக்கும். "புணருந்தொறும் பெரும்போகம் பின்னும் புதிது கண்டாய்" என்னும் திருச் சிற்றம்பலக் கோவையார் இவ்வியல்பை இனிது

புலப்படுத்துகின்றது. புணருந்தொறும் பெரும் போகமாய் இன்புறுத்தி வருவதற்குக் காரணம், பின்னும் பின்னும் அது புதுமை கொண்டு வளர்ந்து வளருவதே என்னும் உண்மையை இப்பாடலால் மாணிக்கவாசகர் விளக்கியிருக் கின்றார்.

உலகப் பொருள்களில் இப்புதுமையும் வளர்ச்சியும் தோன்றுமையோடு, ஒரு நிலையில் நில்லாமல் தேய்வும் உண்டாகின்றது. இறைவனிடம் ஒரே நிலைத்த தன்மை இருப்ப தோடு, மேன்மேலும் அவன் வழங்கும் இன்பம் புதுமையும் வளர்ச்சியும் பெருகிக் கொண்டே இருக்கிறது. உலகப்பொருள்கள் சிறிதும் அறிவில்லாதன; ஆனால் உலகத் தலைவனாகிய இறைவனே மிகப் பேரறிவு உடையவன். இவ் வேறுபாடு மிகவும் தெளிவானது. ஆதலால் இப்பேரறிவு உடைமைதான், நிலையும் புதுமை யும் மேன்மேல் வளர்ச்சியும் உண்டாகக் காரணமாயிருக்கவேண்டும்; உலகப் பொருள் களின் அறிவற்ற இயல்புதான் அவற்றின் நிலை யாமைக்கும் வளர்ச்சி இன்மைக்கும் காரணமா யிருக்கவேண்டும்.

இவ்வுண்மையை ஓர் எடுத்துக்காட்டின் மூலமாகவும் நாம் அறிந்து கொள்ளலாம். அறிவற்ற உடம்பில் அறிவுள்ள உயிர் தங்கி இருக்கும்போது, உடம்பு நிலைபெறுகிறது. வளர்ச்சியும் வளமும் உண்டாகின்றன. அறிவுப் பொருளாகிய உயிர் நீங்கிவிட்டால், உடம்பு நிலைகுலைந்து அழிகிறது; வளர்ச்சியும் பொலிவும் அற்று விடுகின்றன. ஆதலால் அறிவியல்பு என்பது, நிலைபேற்றிற்கும் வளர்ச்சிக்கும் ஊற்றாய் இருக்கும் உண்மையை இதுகொண்டு தெரிந்துகொள்ளலாம். இறைவனது இன்பம் அவனது பேரறிவின் இயல்பினால் பேரா இயற்கையாய் இருப்பதோடு, "என்றும் இன்பம் பெருகும் இயல்பாகவும்" திகழ்கின்றது.

## ஒன்று காதலித்து :

இறைவன் அவனது பேரறிவுத் திறத்தால், வேறு ஒருவரும் தனக்கு இணை இன்றி ஒரு வனாய் விளங்குகின்றான்; "ஒருவன் என்னும் ஒருவன்" அவன்; தலைவன் என்பவன் எதற் கும் ஒருவனாகத் தான் இருக்க முடியும். அவன் நலத்தை அடைவோர், எந்நிலையிலும் பலராகத் தான் இருக்க முடியும். கடவுள் ஒருவனாகவும், உயிர்கள் பலவாகவும் இருக்கும் இயல்பு இத னாலே தான். கடவுள் ஏகனாகவும், உயிர்கள் தோறும் தங்கி இன்புறுத்துவதனால் அநேக னாகவும் இருக்கும். இவ்வுண்மையே திருவாசகத்தில் 'ஏகன், அநேகன், இறைவன்' என வந்தது. உடலுக்குத் தலை ஒன்று தான்; உலகுக்குக் கதிரவனும் ஒருவனே; அனைத்து உலகுக்கும் தெய்வமும் ஒன்றே. கடவுள் அப்படி ஒன்றாய் இருந்தால் மட்டுந்தான், எல்லா உயிர்களும், ஒருமுகமாய்க் கருத்து வைத்து உயர முடியும்.

உயர்தல் என்பது, உயிர்களின் சிற்றறிவுநிலை அப்பேரறிவின் தொடர்பினால் அன்பாய்க் கனிந்து, அருளை உற்று, இன்பம் பெருகி நிற்றல். "அன்புருவம் பெற்றதன் பின், அருள் உருவம் அடைந்து, பின்னர் இன்புருவம் ஆயினை நீ எழில் வாதவூர் இறையே" என்னும் வடலூர் வள்ளலார் அருட்பா, இதனைத் தெளிவுறுத்தும். உயிரின் இயல்பு அறிவு; தெய்வத்தின் இயல்பு அருள்; உயிரின் அறிவு தெய்வத் தொடர்பை அதனருளால் அணுக அணுகத் தானும் அத் தெய்வத்தைப் போல் தன்னலமற்றுப் பிறர்க் கென வாழும் கனிவைப் பெற்று வரும். அக்கனிவு நிலையே அன்பு என்பது. காய் போன்ற அறிவு கனிந்து அன்பாய் விட்டது. "காயெலாங் கனி யெனக் கனிவிக்கும் ஒருபெருங் கருணை அமுதே கண்கண்ட தெய்வமே" என்று இந்நிலையைத் திருவருட்பா இனிது விளக்கும்.

'அன்பு' என்னுஞ்சொல் 'அன்று' என்னுங் கருத்து உடையது; எதுவும் எனது அன்று என்று வாழும் உருக்க உணர்வே; தியாக வுணர்வே அன்பு என்பது.

"அன்பிலா ரெல்லாந் தமக்குரியர்,
அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"

என்னும் தெய்வத் திருமறையில், அன்பு என்பது தியாக நிலையே என்பது இனிது விளங்குகின் றது. பிறர் நலம் கருதி உலகப்பொருள்களி லிருந்து விடுதலை அடைந்து வரும் நெகிழ்ச்சி நிலையாகிய அன்புநிலை, ஒவ்வொருவருக்கும் சிறிது சிறிதாக வாய்ந்து வரும். புறப்பற்றின் விடுதலையாகிய இந்த அன்பு உணர்வு பெருகப் பெருக, அவ்வுணர்வில் ஆண்டவனது அருள் நிலையும் பெருகிப் பெருகி விளைந்து வரும். "அன்

பினில் விளைந்த ஆரமுதே'' என்னும் திருவாதவூரர் மணிமொழியில் இவ்வுண்மை இனிது விளங்கும்.

'தியாகம்' என்னும் இந்த அன்புநிலை, தன் வளர்ச்சியில் முழுமையை எய்துகின்ற போது 'காதல்' என்று பெயர் கொள்ளும். 'எனது' என்னும் உடைமைச் செருக்கு இங்ஙனம் அன்பினால் கரைந்து முற்றும் பிறர்க்கென ஒப்படைக்கும் முழுத்தியாகநிலையே, ஒன்றைக் காதலித்து நிற்கும் நிலை. கடவுளை ஒருவர் உண்மையிற் காதலித்து நின்றால், அவர் தேடிய எல்லா உடைமைகளும், அவன் அன்பருக்கே பயன் பட்டு விடுகின்றன.

காதுதல் காதல் எனப்படும்; காதுதல்-முற்றுங்கொடுத்தல்: ''காதும் உக்ரவீர பத்ரகாளி'' என்னும் திருப்புகழாலும், இச்சொல்லின் கருத்து விளங்கும். எல்லாம் அன்பில்லாதவராய் உயிர் வாழ மறுத்து, எல்லாம் தமக்கல்ல என்று இல்லை ஆக்கிக் கொள்ளும் அன்பின் பேராற்றல் நிலையே, காதிக் கொள்ளும் காதல் நிலை. அனைத்தையும் இங்ஙனம் இறைவன் ஒருவனுக்கே ஆக்கி விடும், பேரன்பு மூண்டு, அன்புப் பிழம்பாதலே 'ஒன்று காதலித்தல்' என்பது.

## உள்ளம் ஓங்கிட

ஆயினும் இந்த உயர்ந்த தியாக அன்பு நிலையிலும், 'தான்' என்னும் தன்னுணர்வு, சிறிது இயங்கி வருகின்றது. 'தன் அன்பர்' 'தன் மக்கள்', 'தன்தியாகம்', 'தன் விடுதலை', 'தான் அருள் பெறுதல்', 'தன் உரிமை' என்னுந் தன் உணர்ச்சி இருந்து வரும். யான் என்னும் இந்த அகப் பற்றும் நீங்கி விடும் நிலையே முழு அருட்பேற்றுக்குரிய நிலை; அதுதான் அன்புருவம் பெற்றதன் பின் அருள் உருவம் அடைகின்ற நிலை; அடியார்களின் நிலை இது; சைவசமயத்திற் போற்றப்படும் நாயன்மார் அறுபத்து மூவர் நிலையும் இது.

''யான் எனது என்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்''

என்று தெய்வத் திருவள்ளுவர் ஆன்ம நிலை கடந்த தெய்வ நிலைக்கு உயிர்கள் உயரும் புனித நிலையை விளக்கினார். இந்த உயர்ந்த நிலைக்கு உள்ளம் ஓங்கிய புனிதர்களின் வாழ்க்கை எவ்வாறு இருக்கும் என்பதை அருணகிரியார்,

''எனது யாதும் வேருகி, எவரும் யாதும் யானுகும்
இதய பாவ ஞதீதம் அருள்வாயே''

என்னும் தமது திருப்புகழ்வாக்கில் தெளிவு படுத்துவர். இதய பாவனை என்பது 'எனது' என்னும் புறப்பற்றிலிருந்து நீங்கி அனைத்தையும் தன் அன்பர்க்கு ஒப்படைக்கும் அன்பு. காதலாய் வளர்ந்த முழுத் 'தியாக' உணர்வு. ''இதய பாவனைக்கும் அதீதம்'' என்பது, 'யான்' என்னும் அகப்பற்றையும் நீத்து, நிறைவான அருட்பேற்றுக்கு உள்ளம் உயர்ந்து ஓங்கிய அடியார் நிலை! உள்ளம் என்பது இங்கே உயிர்; யான் என்னும் தன்னுணர்வும் நீங்கி அருளில் உயர்வது உயிர் தான்!

## மன்றுளார் அடியார்:

'மன்று' என்பது பொது; அம்பலம்; வெளி; 'யான்', 'எனது', என்னும் வரம்புகள் அற்ற அருள்நிலை! அந்நிலையை அடியார்கள் எய்துவதனால் அவரை ஆட்கொள்ளும் இறைவனும் 'மன்றுளார்'' எனப்பட்டார். அத்தகைய 'அருள் உருவினரின் அடியார்' என்னும் பொருட்டு 'மன்றுளார் அடியார்' எனச் சிறப்பிக்கப்பட்டார்.

உலகப் பொருள்களுக்கோ அல்லது உறவினர், அரசர், தேவர் முதலிய உயிர் இனங்களுக்கோ அடியார் அல்லர் அவர். ஆண்டவன் ஒருவனுக்கே அடியார் அவர். ''நாமார்க்குங் குடியல்லோம்'' என்றும், ''தாமார்க்குங் குடியல்லாச் சங்கரன் சேவடி இணையே குறுகினோம்'' என்றும் அப்பரடிகள் அருளுதலை இங்கு நினைவு கூரலாம்.

'நாம் ஆர்க்கும் குடி அல்லோம்' என்னும் போதும், 'நாம் சங்கரன் சேவடி இணையே குறுகினோம்' என்னும் போதும், அப்பரடிகள் தம்மை 'நாம்' என்று அகப்பற்றோடு சொல்லிக் கொள்கின்றாரே என்று சிலர்க்குத் தோன்றக் கூடும். வழக்கம்போல் அவர் வாய்மொழியாய் வருகிறதேயன்றி அது பற்றுணர்வோடு வருவதன்று; இப்படி வருவன வெறும்பெயர்க் குறிப்புக்காக வரும் சொல்லாட்சியேயன்றி வேறல்ல.

அடியார் நிலை என்பது எவ்வகைப் பற்றும் அற்றுத் தலைவன் கருத்தே தங்கருத்தாய்த்

தமக்கென ஒரு கருத்துமின்றி இணங்கி ஒழுகும் நிலை; தனக்கென்று ஒரு கருத்துமின்றி 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்னும் முறையில் நடந்துகொள்ளும் நந்தி மரபு இது நுகத்தடி தாங்கிய ஆனேற்றின் இயல்பு இது, சைவசமயம் இதனாலேதான் நந்திக்கொடியைத் தனது கொடியாக மேற்கொண்டிருப்பது. வீடும் வேண்டா விறலுடையவர்கள் அடியார்கள். வேண்டுதலோ வேண்டாமையோ சிறிதும் இல்லாதவர்கள்.

"கண்ணார் நுதலோய் கழலிணைகள்
கண்டேன் கண்கள் களிகூர
எண்ணா திரவும் பகலும் நான்
அவையே எண்ணும் அதுவல்லால்
மண்மேல் யாக்கை விடுமாறும்
வந்துன் கழற்கே புகுமாறும்
அண்ணா எண்ணக் கடவேனோ
அடிமை சால அழகுடைத்தே"

என்பது திருவாசகம். 'அடிமை' என்பது இங்ஙனம் பக்குவமான, துய்க்கும் உயர்வு நிலை என்று மணிவாசகர் இதனில் இனிது தெருட்டுதலும் நினைவு கூர்தல் வேண்டும். சீவன் முத்தரான அடியார்கள், இவ்வாறு அடையும் வீடுபேற்று அடிமை நிலையின் மாட்சி தெளியாதார், 'முத்தியிலும் அடிமையா? என்னும் இகழ்ச்சிக் குறிப்பிலும், அடிமை நிலை துவைத நிலையேயன்றி அத்துவைத நிலையன்று என்றும், அறியாமைக் குறிப்பிலும், கருதுவதுண்டு. அது எவ்வளவு தவறென்பது 'அடிமை சால அழகுடைத்தே' என்னும் மணிவாசகத்தால் இனிது விளங்கும்.

'அடிமை' என்னும் சொல், பக்குவமுற்ற, சமைந்த உணர்வை உணர்த்தும். அடுதல் பண்படுதல்; அடியார்-பண்பட்டவர். இருவகைப் பற்றும் அற்று, உயிருணர்வு அருளிற் பண்பட்டவர். பற்றுகள் அற்ற பின்பும் பண்படுதல் என்பது, இறைவன் தன் அருளை வழங்கினும், அதனைத் துய்ப்பதற்கேற்ற பக்குவ உணர்வு, மேலும் மேலும் உயிர்க்கு வளர்ந்து வருதல்! அதுதான் அருளுருவம் அடைந்த பின்பும் இன்புருவம் ஆகும் நிலை.

"வழங்குகின்றாய்க்கு உன் அருளார்
அமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின்றேன் விக்கினேன்
வினையேன் விதியின்மையால்
தழங்கருந் தேனன்ன தண்ணீர் பருகத்
தந்து உய்யக் கொள்ளாய்,
அழுங்குகின்றேன் உடையாய்
அடியேன் உன் அடைக்கலமே"

என்பன போன்ற மாணிக்கமொழிகள், உயிர் உணர்வு, மேன்மேலும் அடிமைத்திறத்தில் பதப்படும் அழகிய இன்புருவ உயர் நிலையையே எடுத்துக் காட்டுகின்றன.

### அவர்வான்புகழ் நின்றது :

உலக வாழ்க்கையில் 'புகழ்' பற்பல நற்செயல்களால் உண்டாகும்; புறப்பற்று மட்டும் அற்றுச் செய்யும் நற்செயல்களால் விளையும் புகழ் உலகத்தாருக்குப் பருமை விளம்பரமாய், பரவலாய்த் தெரியும்; ஆனால் புறப்பற்றுடன் அகப்பற்றும் அற்றுச் செய்யும் நற்செயல்கள், மேலோர் மதிக்கும் வான்புகழாய் நுண்மையில் திகழும். உலகப்புகழ், காலவெள்ளத்தில் மறைதலும் உண்டு. வரலாற்றுக் காலத்திற்கு, முற்பட்ட எத்தனையோ நற்செயல்களின் புகழ் இப்போது அறிவதற்கு முடியாமற் கழிந்தன. வரலாற்றுக் காலத்திற்கு உட்பட்ட நற்செயல்களின் புகழ்கூடப் பலப்பல மறைந்து போயின. சிறந்த இலக்கியங்களிற் குறிக்கப்பட்ட புகழுக்குரிய செயல்கள் மட்டும் இப்போது சிலச்சில தெரிகின்றன. முத்தமிழ் என்று சிறப்பிக்கப்பட்ட தமிழ் மொழியில், புகழுக்குரிய இசை நாடக நூல்கள் எத்தனையோ இப்போதில்லை. இயல்தமிழ் நூல்களும் பல மறைந்தன; மிகப் பழமைக்குரிய மொழிக்கு ஈது இயல்புதான். எனவே, அந்நூல்களில் குறிக்கப்பட்ட மக்களின் அருஞ்செயல்கள் எத்தனை எத்தனையோ, இப்போது நாம் அறியக் கூடாமற் போய் விட்டன.

ஆனால் புறப்பற்றோடு அகப்பற்றும் அற்ற அடியார்களின் வான்புகழோ எதனாலும் தடைபடாமல், எந்நாளும் நிலைபெறுக நின்றது, நிற்கின்றது! தெய்வப்புகழ் எந்தநாளும் அழியாது தானே!

### நின்றது எங்கும் நிலவி உலகெலாம்

நின்றது மட்டுமன்று; எங்கும் நிலவி உலகெலாம் நின்றது; நாம் இருக்கும் இம்மண்ணுலகம் மட்டுமின்றி எல்லா உலகங்களிலும் அடியார் பெருமக்களின் வான்புகழ் மிக


நுண்ணிய விளம்பரமாய் ஒளிவீசிப் பரவி நிலை பேறுடையதாயற்று; உலகத்தில் அறிந்தார் சிலரிடத்தில் மட்டுமின்றி அனைவரிடத்திலும், எங்கும் பரவி மதிப்புடன் நிலைபெறும் வல்லமை யுடையது அடியாரது வான்புகழ்! சிறந்த நூல் களிலும் முதன்மையாய் இடங்கொள்வது இவ்வான்புகழ்!

> "ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
> வேண்டும் பனுவல் துணிவு"

என்று, வான்புகழ் கொண்ட தெய்வத் திருவள்ளுவரே 'அடியார் புகழ்' எங்கும் இடங்கொண்டு நிலைக்கும் மாட்சியை இனிது விளக்குவர். கோயில்களிலும், இல்லங்களிலும், நிலையங்களிலும், சிற்பங்களிலும், ஓவியங்களிலும், இசை நாடக நிகழ்ச்சிகளிலுங்கூட, எங்கும் நிலை பெற்றதாயிருக்கிறது அடியார் புகழ்!


அகப்பற்றும் அற்று, மாசற்றதாயிருத்தலின் இவ்வான்புகழ் எல்லா உலகங்களிலும், எங்கும் பேரா இயற்கையாய் நிலைபெறுவதோடு, இயல்பாகவே எங்கும் பரவி நிற்கும் இயல்பும், ஒளி கொண்டு நிற்கும் இயல்பும் உடையதாயிருக்கின்றது. அடியாரது வான்புகழ் ஒளியினாலே தான், ஏனையோரது மலவிருள் மாய்ந்து, உலகம் நலமுற வேண்டும். அதனாலே தான் அவர் புகழ் 'நிலவி' நின்றது!

அடியார் புகழ் நிலவி நின்றாலும், உலகெலாம் எங்கும் நின்றாலும், அதனை உணர்ந்து நலம் பெறும் ஆர்வம், ஊக்கம், செய்கை மற்றவர்களுக்கு வேண்டும். அடியார் நிலைக்கும் மற்றவர் நிலைக்கும் இடைப்பட்டதாகவும், சிலர் நிலை உள்ளது. அவர்கள் அவரவர் திறத்துக்குத் தக்கபடி ஒவ்வோரளவு நீத்தாராகிய அறவோரது வான்புகழ் உயர்வை உணர்ந்திருப்பர்; உணர்ந்து ஈடுபட்டும் இருப்பர்; ஈடுபட்டு மற்றப் பொதுமக்களின் மலவிருள் மாய்வதற்கு என்னென்னவெல்லாம் செய்யலாமோ அவ்வளவும், எழுத்து, சொல், எண்ணம், செயல், முதலிய வாயிலாலெல்லாம் தொண்டு புரிந்து கொண்டு இருப்பர். ★




தஞ்சை மாவட்டம், நன்னிலம் வட்டம், சிறுபுலியூர் அருள் திரு கிருபா சமுத்திரப் பெருமாள் கோயிலில் நிகழ்ந்த திருக்குட முழுக்கு விழாப் பெருங்காட்சி
(14—9—73)

148715
600 008



திருவிடைமருதூரில், 28—10—73 அன்று முற்பகல் மூன்றுவது திருமுறைக் கருத்தரங்கத் தொடக்க விழாவில், மாண்பமை நீதிபதி திரு. எஸ். மகராஜன், B.A., B.L., அவர்கள் சிறப்புரை ஆற்றுதல்.



திருவிடை மருதூரில், 28—10—73 அன்று முற்பகல், மூன்றுவது திருமுறைக் கருத்தரங்கத் தொடக்க விழாவில், தொழிலதிபர் பொள்ளாச்சி திரு என். மகாலிங்கம் அவர்கள் சிறப்புரை ஆற்றுதல்.

Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept., Madras-34.
Printed at Super Power Press, Madras-1. Editor. N. R. Murugavell, M.A.,M.O.L.